விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை (16.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

## ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு



(டுஷான்பே)

ஜனாதிபதி மைத்திரி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினை சந்தித்தார்.

தஜிகிஸ்தானில் நடக்கும் ஆசிய கலந்துரையாடல்கள் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடர்பான ஐந்தாவது ஆசிய மாநாட்டில் கலந்து கொள்ள ▷15

## நல்லெண்ண விஜயமாக இந்திய முப்படையினர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்தியாவின் முப்படையினர் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

இந்தியாவின் 94 இராணுவத்தினர், 32 கடற்படையினர் மற்றும் 32 விமா ▷15

## ரிஷாட், ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலியை கைது செய்ய வலியுறுத்தி நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின், முன்னாள் ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலியை கைது செய்யுமாறு கோரி ▷15

## மைத்திரி – ரணிலை சமரசப்படுத்தும் முயற்சியில் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையிலுள்ள முரண்பாடுகளை தீர்த்து இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் அமைச்சர் சஜித் பிரேமதாச ஈடுபட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களிலிரு ▷15

# தூரநோக்கமற்ற 19ஆவது திருத்தமே பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த



*(கொழும்பு)*

*எதிர்விளைவுகளை ஆராயாமல் உருவாக்கப்பட்ட 19ஆவது திருத்தமே இன்று பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*அத்துடன் இந்த திருத்தச் சட்டம் தம்மை பழிவாங்கும் நோக்கில் தூரநோக்கமற்ற விதத்தில் உருவாக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.* ▷15

## கறுப்பு ஆடுகள் ஐ.தே.கவில் உண்டு

### அமைச்சர் கருணாநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் கறுப்பு ஆடுகள் இருப்பதாக அந்த கட்சியின் உப தலைவர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வடக்கு மாவத்தை புனித அந்தோனியார் சிங்கள பாடசாலையில் நேற்று நடைபெற்ற வைபவம் ▷15

## ஆசியாவின் பலத்தை வீழ்த்த வெளிநாட்டு சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது – ஜனாதிபதி

(டுஷான்பே)

ஆசியாவின் பலத்தை வீழ்த்துவதற்கு எந்தவொரு வெளிநாட்டு சக்திகளுக்கும் இடமளிக்கக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தஜிகிஸ்தானின் டுஷான்பே நகரில் நடை ▷15

## நாங்கள் ஒன்று சேர்ந்தால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை

### கஜேந்திரகுமாருக்கு விக்னேஸ்வரன் நேற்றும் அழைப்பு விடுப்பு

(கொழும்பு)

கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பது எமது கருத்து என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன்.

கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று நடந்த அமரர் க.மு.தர்மராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றிய போது,

அமரர் தர்மராஜாவு ▷15

## மூதாட்டியை மிரட்டி ஆயுத முனையில் கொள்ளை

### அரியாலை புங்கன்குளத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், அரியாலை புங்கன்குளம் பகுதியில் தனிமையில் வசித்த ▷16

## உலக கிரிக்கெட் போட்டி நடைபெறும் மைதானம் முன் புலி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்



(லண்டன்)

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் ▷15

## பொதுச்சேவைகள் ஆணைக்குழுவை கலைத்தார் ஆளுநர் ராகவன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட ஐந்து உறுப்பினர்களையும் பதவி நீக்குவதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், அவர்கள் 5 பேருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட ▷15

## ஊரடங்கு அமுல் வேளை அரேபியர்களுடன் சந்திப்பு

### எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவிடம் 8 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, பயங்கரவாத விசாரணைப் பிரிவினால், எட்டு மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்று காலை 9.45 மணிக்கு, பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையான அவர், நேற்று மாலை 5.30 மணியளவிலேயே விசாரணை முடிந்து அங்கிருந்து ▷16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் பொலிஸாரால் கைது

## கொடிகாமத்தில் சம்பவம்

இருபது லீற்றர் கசிப்பினை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற ஒருவர் நேற்று மாலை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் மீசாலை நோக்கி கசிப்பு கொண்டு செல்வதாக புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கொடிகாமம் பொலிஸார் மீசாலை மேற்கு பகுதியில் வைத்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றொருவர் தப்பித்து ஓடியதாகத் தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

(ம-30)

# கச்சாய் வீதியில் விபத்து குடும்பப் பெண் காயம்

சாவகச்சேரி -கச்சாய் வீதிப் பகுதியில் சனிக்கிழமை காலை 11மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

முன்னே சென்ற முச்சக்கரவண்டி ஒழுங்கை ஒன்றிற்குள் திருப்ப முற்பட்ட வேளையில் பின்புறமாக வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் முச்சக்கரவண்டியின் பின்புறமாக மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 44வயதான மகேந்திரன் ஆனந்தரூபி என்ற குடும்பப் பெண்ணே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த காயமடைந்தவ்ரின் மகள் சிறு உரசல் காயத்துடன் தப்பித்துள்ளார்(ம-3,30)

# வடமாகாண அமைச்சின் செயலாளர்கள்,திணைக்கள அதிகாரிகளுக்கு இடமாற்றம்

வடமாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் திணைக்கள அதிகாரிகளுக்கு வெகு விரைவில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வாரம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவை பதவியிலிருந்து விலகுமாறு கோரப்பட்ட நிலையில் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

வடமாகாணத்தின் நிர்வாகச் செயற்பாடுகளை வினைத்திற்னாக்கும் நடவ்டிக்கையாக குறித்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளதோடுஇவ் இடமாற்றங்கள் மாகாணத்தின் கீழ் அடிப்படையிலும் சில வேளைகளில் மாகாணத்திலிருந்து விடுவிப்பது போன்ற நடைமுறைகளும் இடம் பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில் கடந்த மாதம் யாழ் பொது நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் வடமாகாணத்தின் நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த சில அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை என வெளிப்படையாக பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,10)

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

தரம் 10,O/Lமாணவர்களுக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் குழு மற்றும் தனி வகுப்புக்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**0757118891**

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ் நகர பகுதியில் வசிக்கும் சிறிய குடும்பமொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 50 வயதிற்குட்பட்ட வீட்டுப்பணிப் பெண் தேவை.

**0776080938,0714423203**

**வாகன கண்காணிப்பு சாதனம்**

உங்கள் வாகனம் செல்லும் இடங்களை தொலைபேசி மூலம் அவதானிக்கலாம்.

Milage,speed,Parking,Engine Report என பல வசதிகள் உண்டு.

**0779907969,**

**0774445909** (9170)

**காணி விற்பனை**

காங்கேசன்துறை பிரதான வீதி சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில் வீடு,கடைகள் கட்டக்கூடிய 4 பரப் புக்காணி விற்பனைக்கு உண்டு.

**0776613189**

**வைத்தியசேவையும் பராமரிப்பும்**

வயோதிப நோயாளர்களை உங்கள் வீடுகளில் வைத்து பராமரிப்பதில் சிரமப்படுகிறீர்களா?

எங்கள் இடத்தில் அல்லது உங்கள் இடத்தில் உரிய முறையில் பராமரிக்கப்படுவர்.

T.P 0778730129

# உலக சைவத் தமிழர்களின் புனித தாயகம் திருவண்ணாமலை

**இருக்கும் இடம் தேடி அன்னதானம் வழங்கும் நிகழ்வு 06/07/2019 நடைபெறவுள்ளது.**

**கிரிவலம் ஆரம்பம் : 16/06/2019 பிற்பகல் 3.10**


**மாணிக்கவாசகர் குருபூசை**
**6-7-2019 ஆனிமகம்**

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் திருவெம்பாவை அருளிச் செய்தார்.மேற்படி திருவெம்பாவை சைவப் பெருமக்களால் சகல இந்து ஆலயங்களிலும் பாடி,வழிபட்டு பெரும் விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.சிதம்பரத்தில் பத்து நாள் விழாவாக நடைபெற்று ஆருத்திரா தரிசனத்துடன் நிறைவு பெறுகிறது.ஆனி மகத்தில் ஆறு திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்கு தேர்த்திருவிழாவும் நடைபெற்று வருகிறது.மாணிக்கவாசகரின் திருவாசகம் திருவண்ணாமலையில் பல சித்தர்களை உருவாக்கியுள்ளது.

என்னைப் போல ஏழை இல்லை எவ் உலகத்தும்
நின்னைப் போல் வள்ளல் இல்லை நிச்சயமே-பின்னையே
என் தொழிலே யாசித்தல் இல்லையெனது ஈவது நின்
தன் தொழிலே கோணாசலா

**செயலாளர்,**
**சைவப்பிரகாச பேரவை,**
**யாழ்ப்பாணம்**
**0773783316**


## நினைத்தாலே பேரின்ப பெருவாழ்வு



(புராணிகர் கோணாசல முதலியார் இயற்றிய கோணாசல வெண்பா)
நம் வாழ் நாளில் ஒவ்வொரு தினமும் நம் உயிருக்கு
உறுதி தரும் நற்செயல்களில் ஈடுபடும்
குறிக்கோளுடன் இப்படியான பல பாடல்களைச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓதி
இங்கிருந்த வண்ணமே அண்ணாமலையான் அருளைப் பெறுவோம்.

அமரர் செ.சுவாமிநாதன்
குடும்பத்தினர்
முன்னாள் செயலாளர்,
புனர்வாழ்வு அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணசபை

# சீயோன் தேவாலய தற்கொலைதாரியின் உடலைப் புதைக்க மக்கள் மீண்டும் எதிர்ப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பாரதி வீதியிலுள்ள மயானத்தில் சீயோன் தேவாலய தற்கொலைதாரியின் உடலைப் புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

குறித்த பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை சீயோன் தேவாலய தற்கொலைதாரியின் உடலைப்புதைப்பதற்குநடவடிக்கையெடுக்கப்படுவதாக தெரிவிககப்பட்டது.

அதைத்தொடர்ந்து அப்பகுதியில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர.

வீதிகளில் ரயர்களை எரித்தும் வீதிகளை மறித்தும் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தால் அப்பகுதியில் பதற்ற நிலையேற்பட்டது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி சீயோன் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்தவரின் உடலை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு கடந்த 7ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் அரசாங்க அதிபருக்கு கட்டளை பிறப்பித்தார்.

இதனையடுத்து பொலிஸார் சடலத்தை மட்டக்களப்பு விமான நிலையப் பகுதியிலுள்ள புதூர், ஆலையடிச்சோலை மயானப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி அடக்கம் செய்ய முற்பட்டனர். இதனையடுத்து அங்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதன்பின்னர் பொலிஸார் சடலத்தை 12 ஆம் திகதி காத்தான்குடி முஸ்லிம் மயானத்தில் அடக்கம் செய்ய முற்பட்ட போது அங்கும் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வீதியை மூடினர்.

இந்நிலையில் பொலிஸார் கடந்த 13 ஆம் திகதி மட்டக்களப்பு, பொலநறுவை எல்லைப் பகுதியான ரிதிதென்னை இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் சடலத்தை புதைக்க முற்பட்டனர். அங்கும் மக்களின் எதிர்ப்பு காரணமாக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டது.

இதேவேளை காத்தான்குடி பகுதியில் குறித்த சடலத்தைப் புதைப்பதற்கு அனுமதிப்பத்தில்லையென காத்தான்குடி நகர சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையிலிருந்து பௌத்தத்தை அழிக்க அரசாங்கம் முயற்சி

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த இந்த 4 வருடங்களில், இலங்கையிலிருந்து பௌத்தத்தை அழிக்கும் செயற்பாட்டையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.

கலவான பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மகிந்த மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

"இந்த அரசாங்கம் கடந்த 4 வருடங்களாக பௌத்த தர்மத்துக்கு எதிரான செயற்பாடுகளையே மேற்கொண்டிருந்தது.

பௌத்தத்தை அழிக்கும் நோக்கிலேயே பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருபாலின திருமணத்தை சட்டமாக்க வேண்டும் உள்ளிட்ட பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவையனைத்தும் அரசாங்கத்தில் உள்ளவர்களின் கொள்கைகளாகும். சர்வதேசம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்கவே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

மதமொன்றே தேவையில்லை என்ற நோக்கத்தில்தான் அரசாங்கத்தில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களால் தான் அன்று நாம் தோற்கடிக்கப்பட்டோம்.

தற்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இதில் உள்ள உறுப்பினர்களுக்கு அதிகாரம் உள்ளதா என்பது சந்தேகமாகும். இவ்வாறு பல குறைபாடுகள் உள்ளன" என அவர் மேலும் தெரிவித்ததார். (இ-7)

# கைக்குண்டு மீட்பு



(கரணவாய்)

கைக்குண்டு ஒன்று வீதிக்கருகாமையிலிருந்து மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை கிராமக்கோட்டு சந்தி - பல்லப்பை வீதியில், வீதிக்கு அருகாமையில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து மீட்கப்பட்டது. (இ-5-60)

# ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு ஆளுநரால் பதவி நீக்கக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி நீக்கப்பட்டதாக எழுத்து மூல உத்தரவு ஆளுநர் சுரேன் ராகவனால் சம்பந்தப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வடமாகாண ஆளுநர் செயலக வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்தது.

கடந்த மே மாதம் நடுப்பகுதியில் வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் 5 பேரையும் தங்கள் பதவியிலிருந்து விலகுமாறு வடமாகாண ஆளுநரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த உறுப்பினர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை ஆளுநர் செயலகத்திற்கு அனுப்பி வைக்காத நிலையில் குறித்த நடவடிக்கையை ஆளுநர் மேற்கொள்ள நேரிட்டதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்தது. (இ-10)

# பௌத்தர்களின் வரலாற்றுச் சின்னத்திற்கு இனவாதிகள் தீ வைப்பு



பதுளையில் பௌத்தர்களின் வரலாற்று சிறப்புமிக்க ஆலமரத்திற்கு இனவாதிகள் தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல பகுதியில் அனைத்து மதத்தவர்களால் கௌரவம் வழங்கப்படும் வரலாற்று சின்னமான ஆலமரத்திற்கு இவ்வாறு தீ வைக்கப்பட்டது.

• ஹாலிஎல பிரதேசம் மாத்திரமன்றி சுற்றியுள்ள பிரதேச மக்களாலும் இந்த ஆலமரம் கௌரவ சின்னமாக மதிப்பளிக்கப்படுகிறது.

தீ வைக்கப்பட்டமையை அடுத்து உடனடியாக செயற்பட்ட பொலிஸார். தீயணைப்பு வீரர்கள் மற்றும் மக்கள் இணைந்து தீயை அணைக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

வரலாற்று சின்னமான ஆலமரத்திற்கு அருகில் இருந்த புத்தர் சிலைக்கு பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கட்டமைப்பு முற்றாக பாதிக்கப்பட்டது. (இ-7)


# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வுக்கான அழைப்பும்



கடந்த மாதம் அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்களான அமரர் **கார்த்திகேசு இரத்தினசபாபதி**, அமரர் **சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை** ஆகியோர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று நண்பகல் 12.00 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



அமரர்
**சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை**
ஓய்வுநிலை வானிலை அவதானி
வளிமண்டலத்திணைக்களம்,
பிரபல சோதிடர்

எங்களது தந்தையர்களின் இழப்பின்போது நாம் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பு வழங்கத்தவறியிருப்பின் பெருமனதோடு இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

அமரர்
**கார்த்திகேசு இரத்தினசபாபதி**
ஓய்வு பெற்ற சிரேஷ்ட
தொழில்நுட்ப அலுவலர்
கட்டடங்கள் திணைக்களம்

தொடர்பு:- 077 134 5670
077 381 8849

தகவல்:- அமரர்களின் குடும்பத்தினர்

தொடர்பு:- 077 285 0285
077 354 5128

(c-6700)

# உலகக் கிண்ணம் இந்தியாவிற்கே அடித்துக் கூறுகிறார் யுவராஜ் சிங்



2019 ஐசிசி உலகக் கோப்பையை கைப்பற்ற வாய்ப்பு உள்ள அணியை முன்னாள் இந்திய நட்சத்திரம் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர ஆட்டக்காரராக திகழ்ந்த இடது கை துடுப்பாட்டகாரர் யுவராஜ் சிங் அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவித்தார்.

2019 உலகக் கோப்பை தொடர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற்று வரும் நிலையில் கோப்பையை கைப்பற்ற வாய்ப்பு உள்ள அணிகள் குறித்து யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

அவர் கூறியதாவது, நடைபெற்று வரும் உலகக் கோப்பை வெல்ல இந்தியாவிற்கு அதிக வாய்ப்புள்ளது. அதனை தொடர்ந்து இங்கிலாந்து அணிக்கு வாய்ப்பு இருக்கிறது. அவுஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அல்லது நியூசிலாந்து அணிக்கு கண்டிப்பாக அரையிறுதிக்கு முன்னேறும் என கூறியுள்ளார். (க)

# கருணாரத்னவின் போராட்டம் வீண் இலங்கையை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணி 87 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் லண்டனில் நேற்று நடைபெற்று வரும் 20-வது லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியாவுடன், இலங்கை அணி விளையாடியது. இப்போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணியின் கேப்டன் கருணாரத்னே பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இப்போட்டியில் முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 334 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஆரோன் பின்ச் 153 ரன்களும், ஸ்டீவ் ஸ்மித் 73 ரன்களும் எடுத்தனர். இலங்கை அணி தரப்பில் சிறப்பாக பந்துவீசிய உதானா, டி சில்வா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து 335 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் கருரத்னே, குசல் பெரேரா ஜோடி முதல் விக்கெட்டுக்கு 115 ரன்கள் எடுத்து நல்ல அடித்தளம் கொடுத்தனர். இலங்கை அணியில் அதிக பட்சமாக கருணாரத்னே 97 ரன்கள் எடுத்தார்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற ஆஸ்திரேலியா அணி 87 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

ஆஸ்திரேலியா தரப்பில் ஸ்டார்க் 4, ரிச்சர்ட்சன் 3, கம்மின்ஸ் 2, ஜாசன் பேரண்ட்ராப்ட் 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர். (க)

# உலகின் பெரிய கிரிக்கெட் மட்டை கபில்தேவ் முன்னிலையில் அறிமுகம்




இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் முன்னிலையில், உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழகத்தில் சென்னையில் உள்ள மால்கள் அனைத்தும், கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டுகளையும் ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

நகரம் முழுவதும் உள்ள அனைத்து கிரிக்கெட் ரசிகர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், சென்னையில் உள்ள மால் ஒன்றில் 51 அடி நீளம், 6.6 தொன் எடையுடன் கூடிய கிரிக்கெட் மட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டை என்று கின்னஸ் சாதனையையும் படைத்துள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கபில் தேவ் முன்னிலையில் இந்த கிரிக்கெட் மட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுதொடர்பாக கபில் தேவ் கூறுகையில், 'மிகப்பெரிய கிரிக்கெட் பேட் ஒன்றை வைத்து இந்த சாதனையை ஏற்படுத்தியுள்ள பலேடியம் மற்றும் பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியின் முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என தெரிவித்தார். (க)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக விக்கெட்; முரளிதரனின் சாதனையை சமன்செய்த மலிங்க



இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இன்றைய போட்டியில் முரளிதரனின் சாதனையை சமன் செய்தார்.

உலகக்கோப்பை தொடரின் நேற்றைய போட்டியில் இலங்கை- அவுஸ்திரேலியா அணிகள் விளையாடியது. சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

இந்தப் போட்டியில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினால், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இலங்கை பந்துவீச்சாளர் என்ற சாதனையைப் படைத்திருப்பார்.

முத்தையா முரளிதரன், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 48 விக்கெட்டுகள் வீழ்த்தி முன்னிலையில் உள்ளார். நேற்றைய போட்டியில் மலிங்க இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தால் முரளிதரனின் சாதனையை முறியடித்திருப்பார்.

இதற்கு முன் மலிங்க ஒரு விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முத்தையா முரளிதரனின் சாதனையை சமன் செய்துள்ளார். (க)

# பொறுப்புணர்வுடன் விளையாடுங்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர்



போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற தீர்மானத்துடன் செயற்பட்டால், நான் வெற்றி பெற முடியும் என்று மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் ஹோல்டர், தனது அணி வீரர்களை கடிந்து கொண்டுள்ளார்.

சவுதம்டனில், நேற்று நடந்த உலகக்கோப்பை லீக் ஆட்டத்தில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்வியைத் தழுவியது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியது. அந்த அணியின் பந்துவீச்சில் பாகிஸ்தான் சுருண்டது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த போட்டியில் போராடி தோல்வியுற்றது.

இந்நிலையில், நேற்றைய போட்டியில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்தது. இது குறித்து மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் கூறுகையில், 'நாங்கள் அதிகமாக ஓட்டங்கள் சேர்க்காதது தோல்விக்கு ஒரு காரணம். சீரான இடைவெளியில் நாங்கள் விக்கெட்டுகளை இழந்துவிட்டோம்.


அது மட்டுமல்லாமல் துடுப்பாட்ட வீரர்களும் சிறிது பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு இன்னிங்சிலும் வெற்றி பெற வேண்டும் என்ற தீர்மானத்தோடு விளையாட வேண்டும். பொறுப்புணர்வு இல்லாமல், தேவையற்ற ஷொட்களை ஆடி ஆட்டமிழந்துவிடக் கூடாது.

இந்த ஆட்டத்தில் நல்ல பார்ட்னர்ஷிப் எதுவுமே இல்லை. ஒருவேளை நல்ல பார்ட்னர்ஷிப் அமைந்திருந்தால் இன்னும் கூடுதலாக ஓட்டங்களை சேர்த்திருக்க முடியும். அதிலும் குறிப்பாக, 25 ஓவர்களுக்கு மேல் போட்டி எங்கள் கைகளை விட்டுச் சென்றுவிட்டது.

அதிகமான அக்கறையுடன் எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் பேட் செய்து, பார்ட்னர்ஷிப்பை அமைத்திருந்தால் இதுபோன்ற தோல்வி ஏற்பட்டிருக்காது'. எங்களின் தவறுகளை சரிசெய்ய வேண்டியது அவசியமாகும். தவறுகள் குறித்து தீவிரமாக ஆலோசிப்போம்.

பந்துவீச்சு, பேட்டிங், பீல்டிங் அனைத்து துறைகளிலும் நாங்கள் முன்னேற்றம் காணவேண்டியது அவசியமாகிறது. கடந்து விட்ட போட்டியையும், எதிர்வரும் போட்டிகளையும் எங்கள் கைகளில் இல்லை. ஆனால், களத்தில் இறங்கிவிட்டால் எங்கள் கட்டுப்பாட்டில் தான் அனைத்தையும் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கிறேன்' என தெரிவித்துள்ளார். (க)

# சிங்களவர்களுக்குத் தமிழர்கள் எதிரிகள் முஸ்லிம்கள் துரோகிகள் என்கிறார் விமல்



(கொழும்பு)

"பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்தால் சிங்களவர்களுக்குத் தமிழர்கள் எதிரிகளாக இருந்து வருகின்றனர். அதேவேளை, சஹ்ரான் குழுவினரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து சிங்களவர்களுக்கு முஸ்லிம்கள் துரோகிகளாக மாறியுள்ளனர்.

ஏனெனில், முஸ்லிம்களை சிங்களவர்கள் பெரிதும் நம்பியிருந்தனர்.

ஆனால், அது இன்று தலைகீழாக மாறியுள்ளது என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"இந்த நாட்டில் இஸ்லாமியத் தீவிரவாதத்தை உடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனில், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியதுபோல் முஸ்லிம்கள் அனைவரின் வீடுகளும் மற்றும் பள்ளிவாசல்களும் சோதனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், சஹ்ரான் குழுவினரின் தாக்குதல்களுடன் தொடர்புபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் உடன் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அந்தத் தண்டனை தூக்குத் தண்டனையாக இருக்க வேண்டும்" - என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விதிகளை மீறிய வர்த்தகர்களுக்கு 48 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கெதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் 48 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய ஐந்து வர்த்தகர்களுக்கெதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதவான் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களை குறித்த அபராதத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (5-10)

# வீதி விபத்துக்குள்ளானவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் மனிதநேயம் வளர்ச்சியடைய வேண்டும்-அர்ஜுன அறிவுரை



(கொழும்பு)

பாதசாரிகள் மீது மோதி விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு தப்பிச்செல்லும் வாகன உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க தீர்மானித்துள்ளோம் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அத்தோடு வாகனக் காப்புறுதி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பினரின் காப்புறுதிகள் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமானத்தில் வீதி பாதுகாப்புஅதிகார சபைக்கு வழங்கும் நிதியானது ஒரு வீதத்திலிருந்து இரண்டு வீதமாக அதிகரிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது விபத்துக்கள் மூலம் பாதிப்புக்குள்ளான 27 பேருக்கு 40 இலட்சம் ரூபா இழப்பீடும் அமைச்சரால் வழங்கப்பட்டது.

வீதி பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபை எதிர்காலத்தில் ஒரு ஆணைக் குழுவாக மாற்றியமைக்கப்படும். வீதி பாதுகாப்புத் தொடர்பிலான தேசிய சபையின் சேவையை விரிவாக்கும் நோக்கிலே அதனை ஒரு ஆணைக்குழுவாக மாற்றியமைக்க தீர்மானித்தோம். அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்.


வீதி பாதுகாப்புக்காக உரிய தீர்மானங்களை எடுப்பதில் நான் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை. விபத்துக்கு உள்ளானவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கும் வரை மனிதநேயம் வளர்ச்சியடைய வேண்டும். அப்போது தான் ஒரு சாரதி மனிதராகுவார். வீதி பாதுகாப்புக்காக பாரிய வேலைத்திட்டங்கள் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும். பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையே எமக்கு அவசியமாகவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக சொகுசு பேருந்துகள் மாத்திரமே எதிர்காலத்தில் போக்குவரத்து சபைக்கு கொண்டுவர நடவடிக்கையெடுக்கப்படும். சில வர்த்தகர்கள் இதனை எதிர்க்கின்றனர் என்றாலும், மக்களுக்காக உரிய தீர்மானத்தை எடுக்க நான் பின்னிற்கப் போவதில்லை. வாகன காப்புறுதி நிறுவனங்கள் மூன்றாம் தரப்பினரின் காப்புறுதி மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் வீதி பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கும் நிதியானது ஒரு வீதத்திலிருந்து இரண்டு வீதமாக அதிகரிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பாதசாரிகள் மீது விபத்துகளை சம்பவித்துவிட்டு தப்பிச்செல்லும் வாகனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இழப்பீட்டுத்தொகையை அதிகரிக்க நடவடிக்கையெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## முருகன் நடுவில்



சமரபாகு கரும்பியோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நடுவில் அவர்கள் 14.06.2019 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகம்மாவின்பாசமிகு கணவரும் ஈஸ்வரியம்மா, ஜெயம், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம், சகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேலும் மயிலும், பொ.சிவக்கொழுந்து, ச.சிவக்கொழுந்து, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, ஈஸ்வரி காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நேசம்மா, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் குணசிங்கராசா (உடுப்பிட்டி ப.நோ.கூ.ச), இரத்தினசிங்கராசா (சுவிஸ்), தர்மசிங்கராசா (சுவிஸ்), மகாராணி, யோகராணி, யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, நிர்மலாதேவி (சுவிஸ்), தர்மராணி(சுவிஸ்), தயாதாஸ், குகதாசன் (ஆசிரியர், யா/சிதம்பரக் கல்லூரி), தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தயாளன், நிதர்சன், நிதர்சனா, நிறோஜன், விதுனா, றஜிலா, (சுவிஸ்), தருண், அபிஷா, ஆரதி, திவாஜினி, அஸ்வினி, ஜஸ்மினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2019.06.16) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை நண்பகல் 12 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரும்பியோடை, சமரபாகு, வல்வெட்டித்துறை.

தகவல் - குடும்பத்தினர்
077 668 1979

(C-6701)


Canada STUDENT VISA



உங்களின் எதிர்காலம் பிள்ளைகள்!

நாளை பற்றிய கவலையை தவிர்த்து கனடாவில் இலகுவான முறையில் உங்கள் பிள்ளைகளின் உயர் கல்வியினை தொடரக்கூடிய Student Visa ஏற்பாடுகளை விரைவில் செய்து தருபவர்கள்.

WITHOUT IELTS

குறைந்த கட்டணம்

Every Month Intake

VISIT VISA

பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா சென்று வருவதற்கான Visit Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

TOURIST VISA

தனியாகவோ, குடும்பத்தினருடனோ கனடாவிற்கு உல்லாசமாக சென்றுவர Tourist Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

BUSINESS VISA

உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா சென்று வர Business Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

AVAILABLE COURSES
- Business Administration
- Computer Service Technician
- Community Service Worker
- Web Designing / Graphic Designing
- Civil Engineering Design & Technology
- International Hospitality Management etc...

flex Institute
Step Towards a Bright Future


6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

Hotline: 0777- 761 346

FLEX Graphic

# வடக்கில் கடற்படையின் வசமுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும்

## கட்டளைத் தளபதியிடம் ஆளுநர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் புதிய கடற்படை கட்டளைத் தளபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எஸ்.எம்.டி. கபில சமரவீர ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முன்தினம் காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது வடமாகாண த்தில் காணப்படும் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்த ஆளுநர் கடற்படையினரின் வசமுள்ள தனியார் காணிகளை மீண்டும் பொது மக்களுக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இதேவேளை காங்கேசன் துறை பிரதேசத்தில் கடற்படையினரின் வசமுள்ள நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு சொந்தமான புனித பூமி மற்றும் மக்களின் காணிகளை விடுவிப்பது குறித்தும் புதிய கடற்படை கட்டளை தளபதியுடன் விரிவாக கலந்துரையாடினார்.

மேலும், வடமாகாணத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் கடற்படையினருக்குமிடையில் சுமுக மான நிலைமைகளை கட்டியெழுப்ப மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார். (இ-5-7)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு 27 ஆம் திகதி நியமனம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி நீண்டகாலமாக ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படாது இருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி 2 மணியளவில் இல.294, திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கல்வி அமைச்சர் சட்டத்தரணி அகில விராஜ் காரியவசம் பங்குபற்றுதலோடு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற போரின் தாக்கத்தினால் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராக பணியாற்றியவர்களுக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்காத பிரச்சினை நீண்ட காலமாக நிலவி வந்த நிலையில் கடந்த வருடம் கல்வி இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற திருமதி விஜயகலா மகேஸ்வரன் எடுத்த முயற்சியின் பயனாக கடந்த மாதம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெற்றிருந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 1,302 பேர் இந்த நேர்முகத்தேர்வில் பங்குபற்றி இருந்தனர்.

இதில் தகுதிபெற்றவர்களுக்கான நியமனங்களே எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன. (5-9)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 17 ஆம் அணியினரின் பிரிவுபசாரவிழா கடந்த வியாழக்கிழமை தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். (படங்கள்: சக்தி)

# பதநீரைப் பாதுகாக்க புதிய கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தொன்று தொட்டு இயலாது எனக் கருதப்பட்ட பதநீரை நீண்ட காலம் பாதுகாத்தல் தொடர்பாக பேராசிரியர் பொ.நவரட்ணத்துடன் இணைந்து பனை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர் ப.றோபிகா பதநீருக்கு இரசாயனங்கள் எதுவும் சேர்க்காது. இயற்கையாக நீண்ட காலம் பாதுகாத்தல் சம்பந்தமான ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளனர்.

இவ் விடயம் கடந்த 8 ஆம் திகதி பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி ஆலோசனை சபைக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இக் கூட்டத்தில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ந.இராசேந்திரன் கலந்து கொண்டார்.

பதநீரைப் பாதுகாத்தல் பொறிமுறையில் உயிர் இரசாயனவியல் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் கண்டுபிடிப்பினால் பனை அபிவிருத்திச் சபை மற்றும் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் உவகை அடைகின்றன.

இவ் ஆராய்ச்சியின் முழுமையான அறிக்கை விரைவில் வெளியிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)





சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைத் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சுபேசன்)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் இணைத்தலைவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (5-60)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தடைகள் விலகி தன வரவுகள் கிடைக்கலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், வீண் விவாதங்களை தடுப்பது நல்லது.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** தேகாரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

கிரகநிலை: சுக்; செவ்,புத, ராகு,சூரி; சனி, கேது; குரு, சந்

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

**16.06.2019**
ஆனி 01, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 2.56 மணிவரை
அனுசம் முற்பகல் 11.09 மணிவரை
சுபநேரம் 8.53 - 10.23 மணிவரை
இராகுகாலம் 4.23 - 5.53 மணிவரை
தந்தையர் தினம்
வளவன்

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இறைவழி பாட்டில் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செயற்பாட்டில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

# பதவிகளை மீளப் பொறுப்பேற்பது குறித்து ஆராய முஸ்லிம் தலைமைகள் சந்திப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்பது குறித்து ஆராய முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளனர்.

அதற்கமைய அந்தச் சந்திப்பு நாளை மறுதினம் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அமீர்ஹலீம் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்குமாறு மகா சங்கத்தினர் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக ஆராயவே இந்த சந்திப்பு இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாக குற்றம் சாட்டி முஸ்லிம் தலைவர்கள் 9 பேர் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர்.

அதன்படி அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், எம்.எச்.ஏ.ஹலீம், கபீர் ஹாசீம் மற்றும் எச்.எம்.எம். ஹரீஸ், அலிசாஹீர் மௌலானா, பைசல் காசீம், அமீர் அலி ஆகிய இராஜாங்க அமைச்சர்களும் பிரதியமைச் சரான அப்துல்லா மஹ்ரூப்பும் பதவிகளை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 155 பேர் கைது

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 155 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்களில் 93 பேர் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும் 62 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அதி உயர் விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சி வழங்கும் சமூகசேவையாளருக்கான அதி உயர் விருதை கதிர் தொலைக்காட்சியின் காப்பாளரும் ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியுமான பா.சுப்பிரமணியத்திடமிருந்து துன்னாலை வடிவேலர் மணிமண்டப உரிமையாளர் வடிவேலு சந்திரசேகரம் பெற்றுக்கொண்டார். (இ-7)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. வயதானவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் மாதம் - 15000/= (C-6593)
தொ.பே:- 0771681697, 0766205322

## கைகொடுக்கும் நண்பர்கள்

மனதில் சுமையா? உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் உங்கள் துயரங்களையும் துன்பங்களையும் செவிமடுக்க நாங்கள் இருக்கிறோம். இரகசியம் பேணப்படும். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

கைகொடுக்கும் நண்பர்கள்,
175, நாவலர் வீதி.
077 900 8776
(சி-9164)
ஸ்ரீலங்கா சுமித்திரையோ

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

போக்குவரத்து நடவடிக்கைக்காக வாடகை அடிப்படையில் வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் (சாரதியுடன்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சேவையாற்றும் பொருட்டு, மாதாந்த வாடகை அடிப்படையில் பயணிகளையும், பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்காக இரட்டைவளிச் சீராக்கல் வசதிகளுடன் கூடிய 8 - 10 இருக்கைகளைக் கொண்ட வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பணமாக ரூ.1000.00 இனையும், மீளளிக்கப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 500.00 இனையும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் 17.06.2019 முதல் 28.06.2019 பிற்பகல் 2.00 மணிவரை கொக்குவில், பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் கேள்விமனுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுப் பத்திரம் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விமனுப்பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்கு போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 2019.07.01 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "உதவிப் பதிவாளர்/ போக்குவரத்து மற்றும் தபால் சேவைகள் கிளை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நுகேகொட, நாவல இல் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக போக்குவரத்து மற்றும் தபால் சேவைகள் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனுப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அன்றையதினம் பி.ப. 2.00 மணிக்கு பதிவாளர் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொள்ளலாம்.

(சி-6688)

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.

## Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sri Lanka

BBAF 4133 - Project Management

4th Examination in Business Administration year 1st Semester - 2017 (repeat)

Applications are invited for the examination of the above course unit. Candidates can collect the application forms at the Dean's Office, Faculty of Management Studies & Commerce.

The duly filled application forms should be submitted at the Dean's Office, Faculty of Management Studies & Commerce on or before 25.06.2019 and a receipt for Rs. 250/- paid at the People's Bank, University branch should be annexed.

Please find further details from our website, http://www.maco.jfn.ac.lk/

(C-6682)

Registrar
University of Jaffna

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 3<br>கி.பா: 27 ½சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி (உள்நாடு)<br>தொ.இ: B/9789 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 2<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Com , Ass. Manager<br>எதிர்பார்ப்பு: அரச சொந்ததொழில். பதிவுத்திருமணத்துடன் விவாகரத்தானவர் ஏற்கப்படும். (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/5404 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 17உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, கிராம சேவையாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் (உள்நாடு)<br>தொ.இ: B/9790 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 1<br>கி.பா: 25சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Lecturer (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/5406 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:கேட்டைசெவ் 2 இல்<br>உயரம்: 185cm<br>தகைமை/தொழில்:Service Engineering, Accounting Student, Manager - Uk PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/9791 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 4<br>கி.பா: 33செவ் 7 இல்<br>உயரம்:157cm<br>தகைமை/தொழில்:A/L, குடும்பநல உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5407 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 4<br>கி.பா: 12 ¾செவ் 4 இல்<br>உயரம்: 5'4" தகைமை/தொழில்:A/L,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: A/L,தொழில் புரிபவர் (உள்நாடு)<br>தொ.இ: B/9792 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 1<br>கி.பா: 33உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 08 ஆம் வகுப்பு<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: G/5416 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நீராவியடி-யாழ்ப்பாணம் ஸ்ரீ ஜெ
# இரதோற்சவ சிறப்பு





### ஆசிச் செய்தி

நீராவியடிப்பகுதியில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள் மிகவும் சிறப்புற நடைபெறுவது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் விகாரி வருட துவஜாரோகண மஹோற்சவ நிகழ்வுகள் 07.06.2019 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16.06.2019 இல் எம்பெருமான் இந்திரத் தேரேறி தமது அடியார்களின் ஆணவ மலங்களைப் போக்கி அவர்களுக்கு அருளாசி வழங்கும் நிகழ்வுடன் முடிவுறும் இச் சந்தர்ப்பத்தில் எனது ஆசிச் செய்தியொன்றை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இராம இராவண யுத்தத்தில் இராவணனைக் கொன்ற இராமபிரானுக்கு பிரமஹத்தி தோஷம் பீடித்திருந்ததாகவும் வேதாரணியம் ஆலயத்திலுள்ள விநாயகரை வணங்கி அத்தோஷம் நீங்கப் பெற்றார் என்பதும் வரலாறு. அத்துணை வரலாற்றுச் சிறப்புமிக்க விநாயகரை 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பூதர் எனும் பக்தர் காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக இலங்கைக்கு எடுத்துவந்து யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக கூறப்படுகின்றது.

இத்துணை சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டுகளைக் கடந்து தற்போதும் பதுப்பொலிவுடன் வீற்றிருந்து அருளாசி புரிவது நாம் செய்த பாக்கியம். இவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விநாயகர் ஆலய இரதோற்சவ நிகழ்வுகள் மிகச்சிறப்புற அமைய இறைவனை வேண்டி இவ் இரதோற்சவ நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கும் பக்த அடியார்கள் அனைவருக்கும் வீரகத்தி விநாயகரின் பூரண அருளாசி கிட்ட வாழ்த்தி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்
முன்னாள் முதலமைச்சர், வட மாகாணம்.
செயலாளர் நாயகம், தமிழ் மக்கள் கூட்டணி.




### யாழ். மாநகர முதல்வரின் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ ஆசிச் செய்தி

சீரும் சிறப்பும் பெற்ற வண்ணார்பண்ணை கிழக்கிறையில் பருத்திப்புலம் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளி இருப்பவர் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி பிள்ளையார் வரலாற்றுப் புகழ் மிக்க நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் மஹோற்சவம் இவ்வருடம் 07.06.2019 தொடக்கம் 17.06.2019 வரை இடம்பெறுவதையிட்டு அகமகிழ்கின்றேன். இக்கோவிலின் பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரின் அயராத முயற்சியும் அவரது பாரியாரின் ஒத்துழைப்பும் இன்றும் திறம்பட இடம்பெறுவதால் நீராவி வீரகத்தி விநாயகரின் நித்திய, நைமித்திய கருமங்கள் திறம்பட நடைபெற்று வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இதுபோல் என்றென்றும் உற்சவங்களும் மஹோற்சவமும் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற வேண்டும் என நீராவி வீரகத்தி விநாயகனை வேண்டுகின்றேன். மேலும் பரம்பரை பொறுப்பாளரின் பணி சிறக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

இம்மானுவல் ஆனல்ட்,
முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.



### ஆசிச் செய்தி


ஈழத்தின் சைவசமய நிலைபேற்றுத் தன்மையையும் தொன்மையையும் பறைசாற்றும் வழிபாடுகளில் ஒன்றாக விநாயக வழிபாடு அமைந்திருக்கிறது. காலனித்துவ கால ஆட்சியாளர்கள் தந்த நெருக்கடிகளைத் தீர்த்து சைவமும் தமிழும் வளர்ச்சியுற விநாயகர் வழிபாடு பெரிதும் உதவிற்று. யாழ்ப்பாணத்தில் அத்தொல்வழிபாட்டின் வெளிப்பாடாக அமைகின்ற பழைமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகராலயம் திகழ்கின்றது. பல்வேறு தள நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ள இவ்வாலயம் தன் நீண்ட வரலாற்றில் கொட்டிலாய், சுண்ணாம்பு, செங்கட்டிக் கட்டடமாய் உருவாகி இன்று பல்வேறு மண்டபங்களையும் அழகுமிளிர் இராஜகோபுரத்தையும் கொண்டிலங்குகிறது.

ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் மதிப்புக்குரிய வை. இரகுநாத முதலியாரின் பணிகள் பாராட்டத்தக்கன. வனப்புமிகு ஆலயத்தில் விநாயகரின் அருளாட்சி மேலோங்கிக் காணப்படுகிறது. மக்களின் மனங்களின் வேண்டுகைகளுக்கு செவிசாய்த்து இறைவன் பேரருள் புரிகிறான். சைவ மீட்டுருவாக்கச் செயற்பாட்டாளரான நல்லைநகர் ஆறுமுகநாவலரின் ஆசிரியர் இருபாலை சேனாதிராச முதலியார்.

"பொன்பூத்தநீராவிப் பூங்கோயில் வாழ்வுகந்த
பன்பூத்தசேவர் கோட்டுவேழம்"

என இவ்வாலயத்தையும் விநாயகரையும் பாடிப்பரவி நிற்பது மனங்கொள்ளத்தக்கது. நல்லருள் செய்யும் விநாயகப் பெருமான் எம்மைச் சூழ்ந்துள்ள எண்ணற்ற கலிகளைத் தீர்த்து எம்முள்ளே நின்று ஆட்சி செய்யட்டும். நம் மண்ணில் சாந்தியும் சமாதானமும் நின்றுநிலவுவதாகுக. இறையாட்சி என்றென்றும் சித்திப்பதாகுக.

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,
பதில் பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் தேர் ஏறி வரும் திருநாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். மிகப் பழைமையிக்க இத்திருக்கோவில் சிறப்பு தனித்துவமானது. காலந்தவறாத பூசையும் சீரிய நெறி முறைகளும் இவ்வாலயத்தில் பேணப்படுவது அறிந்து பாராட்டுகிறேன். இத்திருக்கோவில் திருத்தேர் விழா நன்கு சிறக்க பிரார்த்திக்கின்றேன். எம் மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலைபெற அனைவரும் இந்நாளில் பிரார்த்தியுங்கள். ஆலய விழாக்களில் சிறுவர்கள் முதல் மூத்தோர் அனைவரும் பங்குபற்றி நல்ல எண்ணம் வாழ வழிதேட வேண்டும்.

கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



### மஹோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்!...

அன்பும் அறமும் மக்களை வழிநடத்தி செல்ல வேண்டும்.
ஆன்மீகவெளிச்சம் எமது வாழ்விடங்கள்தோறும் வீச வேண்டும்.
இதுவே இன்புற வாழ நினைக்கும் எமது மக்களின் ஆழ்மன நம்பிக்கை!
யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்!
நரகத்தில் இடர் படபோம்!!

இத்தகைய ஆன்மீகத்தத்துவத்தை ஏற்று எமது மக்களின் மகிழ்ச்சிக்கான சகல முயற்சிகளுக்கும் கரம் கொடுப்பதே நம்பணி! கடந்த கால யுத்தத்தின் அவலப்பெருங்காட்டில் இருந்து எமது மக்கள் மீண்டும் வந்திருந்தாலும் அதன் வடுக்களில் இருந்தும் மீண்டெழ வேண்டும். தமது வாழ்வில் நிரந்தர நிம்மதி நிலவ வேண்டும் என்ற நம்பிக்கையோடுதான் ஸ்ரீ ஜெயநீராவி விநாயகப் பெருமானின் சந்நிதானம் நோக்கியும் மக்கள் திரண்டு வருகிறார்கள். அந்தவகையில் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் சிறப்புற நிகழ வேண்டும் என்றும் மேற்படி ஆலயப் பணியில் ஈடுபட்டு வரும் ஆலயப் பரிபாலகர் திருவாளர் இராகுநாத முதலியார் உட்பட நிர்வாகத்தினர் மற்றும் பணியாளர்கள் அனைவரதும் ஆன்மீக முயற்சிகள் யாவும் வெற்றி பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.!

என் கடன் பணி செய்து கிடப்பதே!
அறம் வெல்லும் !... அநீதி தோற்கும்!


டக்ளஸ் தேவானந்தா பா.உ
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.
யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.



### யாழ்.மாநகர ஆணையாளரின் ஆசிச்செய்தி

பழைமையும் பெருமையும் பொருந்திய சைவ சமயத்தின் முதற்கடவுள் விநாயகப் பெருமானின் புகழ் மிக்க ஆலயமான ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தி வருவதற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்கள் அழிந்து போகாமல் பேணும் வகையில் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் வருடாந்த மஹோற்சவங்களை நடத்தி வரும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இவ்வாலய மஹோற்சவங்கள் வருடந்தோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு அருள் மிகு விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.த.ஜெயசீலன், ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.




### ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் இரதோற்சவம் காணவாரீர்: அருள் பெறுவீர்

தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் திருவருளும் திகழ்கின்ற ஷேத்திரமாகிய யாழ்ப்பாணம் நீராவியடியில் கோயில் கொண்டு முதல் வணக்கத்திற்குரியவராக விளங்கும் வீரகத்தி விநாயகர் இன்று தேரில் வலம் வருகின்றார். இறைவனது திருவருளைப் பெற வேண்டில் அவன் சந்நிதியில் ஒருநாளாவது தவம் இருக்க வேண்டும். ஒரு மணி நேரம் தேரில் சுவாமியைப் பார்த்து விட்டுச் சென்றால் திருவருளைப் பெறமுடியாது. ஞானிகளும் யோகிகளும் வருடங்கள் பல சிதம்பரத்திலும், திருவண்ணாமலையிலும், நல்லூரிலும், சந்நிதியிலும் தவம் இருந்து இறைவனது திருவருளைப் பெற்றதை அவர்களது வரலாறுகள் கூறுகின்றன.

சிவாசாரியார், வேதமந்திரங்களை உச்சரித்து நவதானியம் தூவி கும்பம் வைத்து கிரியைகள் ஆரம்பிக்கும் போது அந்தந்த தானங்களுக்குரிய அதிதேவதைகள் அந்த இடத்திற்கு பிரசன்னமாவார்கள். இதனால் ஆலயத்துக்குரிய அபிஷேகத்திற்குரிய திரவியங்கள் மட்டுமன்றி இந்து ஆலயங்களிலும் சுத்தம் அதாவது புனிதத் தன்மை மிகவும் வலியுறுத்தப்படுகின்றது. தூய்மையுள்ள இடத்திற்கே ரிஷிகளும் நற்தேவதைகளும் வருவார்கள். விரதமிருந்து அதிகாலையில் நீராடி ஆலயத்துக்கு வருகின்ற பக்த அடியார்கள் சிவாசாரியார் சங்கற்பம் செய்து கிரியைகள் ஆரம்பிக்கும் போது ஆலயத்தில் பிரசன்னமாயிருக்க வேண்டும். இரதோற்சவம் நிறைவடைந்து பிராயச்சித்த அபிஷேகம் நிறைவு பெற்று பிரசாதம் பெறும் வரை ஆலயச் சூழலில் இருக்க வேண்டும். இப்படி ஆலயத்தில் இறை சிந்தனையுடன் நாள் முழுவதும் இருப்பது தவப்பொழுது. இரதோற்சவம் காண தேவர்கள் முதலான முனிவர்கள் பலரும் வருவார்கள். இவர்களது ஆசீர்வாதமும் வழிகாட்டலும் கிடைக்க நாம் தகுதியுள்ளவர்களாக வேண்டும்.

இறைவன் ஆன்மாக்களின் ஆணவ மலத்தை அழித்து அருள்பாலிக்கும் இன்றைய இரதோற்சவ நன்னாளில் கிராமத்தவர்கள், அடியார்கள் அனைவரும் ஆலயத்துக்கு நேரத்துடனேயே வருகைதந்து விநாயகப் பெருமானுக்குரிய விசேட அபிஷேக ஆராதனைகளில் கலந்து கொண்டு விநாயகர் தேரில் எழுந்தருளும் அழகுக் காட்சியைக் கண்டு பேரின்பப் பெருவாழ்வு வாழ பிரார்த்தனை செய்ய எனது நல் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

பண்டிதர், தேசமான்ய கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்.
நல்லை ஆதீன சிவாச்சாரியார், பிரதமகுரு விஸ்வலிங்க ஆதீனம், சாவகச்சேரி புராதன சிவன் தலம்.



### ஆசிச்செய்தி

ஸ்ரீஜெய நீராவி விநாயகராலய இரதோற்சவ விழா கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த சமயம் சைவசமயமாகும். அவ்வகையில் தமிழ் மொழியும் உலகின் மூத்தமொழி என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை எனலாம். நமது சைவ ஆன்மீக நெறியில் புராதன காலந்தொட்டு இரதோற்சவமானது எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதென்பதை மாமல்லபுர பஞ்சபாண்டவ கற்சிற்ப ரதங்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இந்தப் பஞ்ச இரதங்கள் அன்றைய ஆந்திரப்பிரதேசத்தில் ஆட்சி செய்த சுரதவர்மன் என நாமங்கொண்ட மன்னனது ஆட்சியில் கி.மு. 400 இல் அமைக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது. அந்த வகையில் புகழ்பூத்த ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரது விகாரிவருட மஹோற்சவ காலத்தின் ஒன்பதாம் திருநாளில் 16.06.2019 இல் நடைபெறும் இரதோற்சவத்தின் போது எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் அனைவருக்கும் இஷ்ட சித்திகள் அனைத்தையும் வழங்க வேண்டியும் நாட்டில் சாந்தி, சமாதானம், அபிவிருத்தி ஏற்படவும் வேண்டி விநாயகரது பாதாரவிந்தங்களைப் பணிந்து வாழ்த்திப் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றோம்.

"ஸர்வ ஜனகா சுகிநோ பவந்து"

சிவஸ்ரீ.க. கிருபானந்த குருக்கள், தலைவர்,
அகில இலங்கைச் சைவக்குருமார்
அர்ச்சகர் சபை, யாழ்.மாவட்ட சர்வமத அமைப்பு.






### ஆசிச் செய்தி

ஆதிகாலம் முதல் மனித சமுதாயம் இறைவழிபாட்டில் ஈடுபட்டு வந்துள்ளது. இயற்கை சக்திகளை (சூரிய வழிபாடு) ஆராதித்து வந்த மனிதர்கள் பின்னர் படிப்படியாக தத்தம் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு தனி ஒருவரால் வழிபாட்டிடமாக அமைக்கப்பட்ட இடங்கள் பின்னர் கூட்டு வழிபாட்டிடமாக ஆலயமாக வளர்ச்சியடைந்து அங்கே வேதங்களில் கூறப்பட்ட கிரியா மார்க்கங்களை அனுசரித்து நித்திய, நைமித்திய பூஜைகள், விரதகால விசேட வழிபாடுகள், மஹோற்சவங்கள் என பல பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டுள்ளன.

அந்த வகையில் 18 ஆம் நூற்றாண்டில் ஆன்மீகத்தின் தாயகமாம் இந்தியாவின் வேதாரண்யம் என்னும் புனித பதியில் இருந்து வந்து யாழ்ப்பாணம் நீராவியடிப்பிரதேசத்தில் குடியேறிய பூதர் என்பவரால் ஆராதிக்கப்பட்ட விநாயகப் பெருமானின் அமைவிடம் வளர்ச்சியடைந்து இன்று "ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்" எனத் திகழ்கின்றது. இன்று 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தில் இவ்வருடத்திற்கான இரதோற்சவம் நடைபெறுவது சிறப்பாகும். இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறித்து நிற்கும் மஹோற்சவங்களில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கின்றது. அதாவது வழிபடும் அடியார்களின் தீய குணங்களை அழித்தலைக் குறிக்கும்.

ஆதலால் இவ்வுற்சவத்தில் வழிபாடாற்றும் அடியார்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மிடம் உள்ள ஏதாவது ஒரு தீய பழக்கத்தையாவது இன்றிலிருந்து கைவிடுவோம் என சங்கற்பம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவோம். இன்றைய இரதோற்சவம் சிறப்பாக நடைபெறவும் இதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல விநாயகப்பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

இறை பணியில், சுவாமி சிதாகாசானந்தா
சின்மயா மிஷன் யாழ்ப்பாணம்.



### ஆசிச் செய்தி

மனித வாழ்வை நெறிப்படுத்துவது இறைவழிபாடு. நமது முன்னோர் வழிபாட்டு நடைமுறைகளால் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் மரபை எம்மிடம் கையளித்து உள்ளனர். வழிபாட்டு நடைமுறைகளைச் செயற்படுத்த ஏற்ற இடமாகத் திருக்கோயில்களை அமைத்தனர். "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழி அவர்களின் அன்புக் கட்டளையாக இன்று வரையும் நிலைத்திருக்கிறது. பண்டைய திருக்கோயில்கள் இன்றும் வழிபாட்டு மரபைப் பேண எமக்கு உறுதுணையாக உள்ளன.

ஈழத்து விநாயக வழிபாட்டின் வரலாற்றை விளக்கும் திருக்கோயில்களில் இதுவும் ஒன்று. நினைத்தவரைக் காக்கும் இனிய கடவுள் விநாயகப் பெருமான் கோயிலின் பெயரோடு இணைந்த "நீராவியடி" என்ற தொடர் பண்டைக் காலத்தில் திருக்கோயிலின் அமைவிடத்தை எல்லோருக்கும் அறிவிக்கும் ஒரு முகவரியாக இருந்துள்ளது. அன்பர் திரு. வை. இரகுநாதமுதலியாரின் பரம்பரையினர் இந்தக் கோயிலை அமைத்துத் தந்துள்ளனர். இப்பகுதி மக்களுக்குபல நூற்றாண்டுகளாக அருள்பாலித்துவரும் விநாயகப் பெருமானின் இந்த ஆண்டுப் பெருந் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இன்று எம்பெருமான் தேரேறி வீதிவலம் வந்து மக்களுக்குப் பேரருள் வழங்குவுள்ளார். அவர் தந்தையாகிய சிவபெருமான் முப்புரங்களை எரிப்பதற்காகத் தேரேறிச் சென்ற பொழுது வழியில் எதிர்ப்பட்ட விநாயகப் பெருமானுடன் எதுவும் பேசாமல் சென்றுவிட்டார். அவர் சென்ற தேரை விநாயகர் முறித்துவிட்டார். "அச்சிவன் உறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீர" என்று அருணகிரியார் அதனைக் குறிப்பிடுவார். தந்தையின் தேரை உடைத்த பிள்ளை இன்று தன் தேரேறி வருகிறான். அவன் பாதத்தாமரைகளைக் கண்ணாரக் கண்டு போற்றி வணங்கி எல்லா நலன்களையும் பெறுவோமாக!

நாம் நமக்கென்று ஒரு வழிபாட்டு மரபைப் பேணி வருகிறோம். அவ்வழிபாட்டுக்குநம் திருக்கோயில்களும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைகளும் வழிகாட்டுகின்றன. அவற்றைக் கண்காணித்து வளர்த்தெடுப்பதிலே நாம் ஈடுபாடுடையவர்களாக இருக்கவேண்டும். அவை நம்முடைய அடையாளங்கள். அவற்றைப் பேணும் நல்ல முயற்சியிலே நம்முடைய நல்லிணக்கமும் நல்ல ஒற்றுமையும் வேண்டப்படுகின்றன. மக்கள், திருக்கோயில், அறப்பணியாளர்கள் என்னும் இம்மூன்றும் ஒன்றாகி "எல்லோரும் ஒரு தேர் இழுக்கிறோம்" என்று அமைய வேண்டும் என்பதே நாம் இறைவனை வேண்டும் ஓர் அருளாகும். நமது பண்பாட்டுப் பேணலை இதனூடாக மேம்படுத்தலாம். ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் இந்த அருளை நமக்கு நல்குவார் என்பதில் ஐயமில்லை!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாள் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# ஜய நீராவி வீரகத்தி விநாயகர் மலர்- 16.06.2019







### இரதோற்சவ சிறப்பு

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரு டைய மூர்த்தம் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த இவ்வாலயம் இப்போது மஹோற்சவம் காணும் ஆலயமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஸ்ரீ இரகுநாத முதலியார் அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் சாஸ்திர உக்தமாக நடைபெற்று வருகிறது. 07.06.2019 வெள்ளிக்கிழமை துவஜாரோஹணமாகிய இரதோற்சவம் 16.06.2019 இன்று நடைபெற இருக்கிறது. இரதோற்சவத்தில் விநாயகப் பெருமான் ஆரோஹணமானவுடன் மானுஷ, யக்ஷ, கின்னர, கிம்புருஷ தேவர்கள் இவர்கள் எல்லோருக்கும் தரிசனம் கொடுக்கிறார். இது மட்டுமல்ல பாபி, ரோகி, ஜீவராசிகள் அனைவருக்கும் தரிசனம் கிடைக்கிறது. ஆகையால் தான் ரதாவரோஹணம் நடைபெற்றவுடன் பிராயச்சித்த அபிஷேகம் விதிக்கப்பட்டிருக்கிறது. இம்முறை இந்த ஆலயத்தின் இரதோற்சவ விழா சிறப்புற நடைபெற ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், காயத்திரிபீடம், இணுவில். காயத்திரீ பீடம், இணுவில்.**



### சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்வோம்!

பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களான ஆலயங்களும் ஆலய திருவிழாக்களும் எம் சமூகவாழ்வின் அர்த்தங்களாகி அழகு தருவன. இந்த வகையில் யாழ். நகரை அண்டிய, 'பொன் பூத்த நீராவிப் பூங்கோயில் வாழ்வுகந்த 'கோயில் என இருபாலை சேனாதிராச முதலியார் அன்று நயந்த . தொன்மைச் சிறப்புமிக்க வீரகத்தி விநாயகர் தேர்த் திருவிழா தரும் ஆத்மபலம் அளவிலாதது. காலனித்துவ காலத்து மண்குடிசையொன்றில் அருளாளர் பூதரினால் தொடங்கப்பெற்ற கோயில் .அவர் பரம்பரையினராலும் ஊர் மக்களாலும் கண்ட வளர்ச்சியும் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் திருவாளர் வை.இரகுநாத முதலியார் தலைமையில் கண்டுவரும் எழுச்சியும் உயர்வானது. சமூகப் பெருவிழாவான நீராவிப் பூங்கோயில் தேர்த்திருவிழாவில் ஊர்கூடி. ஒன்றுபட்டு பாரதி வேண்டியவாறு .

'நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடுவதும்
உளமெனும் நாட்டை ஒரு பிழையின்றி
ஆள்வதும்.பேரொளி ஞாயிறேயனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்'

நோக்கமாகக் கொண்டு வடம் பிடிப்போம்: வாழ்வு பெறுவோம்:

**பேராசிரியர் கலாநிதி.நா.சண்முகலிங்கன் ,
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் நீராவியடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா நடை பெறுவது மகிழ்ச்சிக்குரியது அழகிய சித்திரத் தேரில் விக்கினங்க ளைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கின்ளறார். நீராவியடி மக்களும் அயற் கிராம மக்களும் எம் பெருமானின் திருவருளைப் பெற்று உய்வர். எமது சமய வாழ்வும் சமூக வாழ்வும் சிறக்க இத்தகைய கோயிற் பூசைகள், திருவிழாக்கள், கும்பாபிஷேகம் என்பன அவசியமானவை. மேலும் ஆலயங்கள் சமயப் பணியுடன் சமூகப் பணியையும் மேற்கொள்வது சிறப்பாகும். இதனால் நீராவியடிக் கிராம மக்கள் யாழ்ப்பாண நகர மக்களும் பயனடைவர்.

இன்றைய தேர்த்திருவிழா சிறப்பாக நடக்கவும் அடியார்கள் எம்பெருமானின் அருளைப் பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்தி க்கின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்.**



### பெரும் கருணை கிட்டட்டும்

மெய்யன்போடு தியானிப்பவர்களுக்கு அறிவுக்கறிவாய் நின்று அருள்பவர் விநாயகப் பெருமானாவார். நாதம், விந்து சேர்ந்த வடிவிலமைந்த "உ" என்ற பிள்ளையார் சுழியில் அவனை வைத்துத் தியானித்து தொடங்குகின்ற கருமங்கள் முட்டின்றி நிறைவேறுவது நம் முன்னோர் கண்ட அனுபவ ஞானமாகும். அவர் கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவனாவான். இவ்வுண்மையை உணர்ந்து இந்தியா காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக நீராவிப் பதியில் குடியேறிய பெருநிலக்கிழாரும், வணிகருமான பூதர் என்பவர் வீரகத்தி விநாயகரை தம் வதிவிடத்தில் ஸ்தாபித்தார் என்பது கர்ணபரம் பரைச் செய்தி. இத்தகைய பெருமை பெற்ற விநாயகப் பெருமானுடைய ஜீர்ணோத்தாரன மகா கும்பாபிஷேகம் இன்று ஆனி உத்தரத்தன்று நடைபெற திருவருள் கூடியுள்ளது. இப்பணியை இவ்வாலய ஸ்தாபகர் வழித் தோன்றலான ஸ்ரீமான் வை. இரகுநாத முதலியார் முன்னின்று நடத்துவது அப்பெருமானின் பெருங்கருணையே. பெருஞ்சாந்தி விழாக்கண்டு பேரருட் பிரகாசமாய் விளங்கும் விநாயகப் பெருமானின் பெருங்கருணை அனைவர்க்கும் கிடைக்க அப்பெருமானை நினைந்து ஆசிகூறி அமைகின்றோம்.

**ஸ்ரீ.சி.சக்திகிரீவன் தலைவர், இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.**



### ஆசிச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தலைநகராக விளங்கும் யாழ்.நகரின் வட புலத்தே நீராவியடிப் பகுதியில் தென் இந்தியாவில் இருந்து வேதாரணியம் வழியாக வந்து குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறு மண் குடிசையில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று பஞ்சதள கோபுரத்துடன் வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வாறு வளர்ச்சி காண்பதற்கு அது சைவத்தையும் தமிழையும் காக்கும் நன்னகரில் அமைந்துள்ளதே என்றால் மிகையாகாது. தன்னை தேடி வந்து வழிபடும் அடியார்களுக்கெல்லாம் அள்ளி அருள் கொடுக்கும் இவ் ஆலயம் இன்று பல பரம்பரையினரை கடந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் இவ் வருடம் நடைபெறும் வருடாந்த மஹோற்சவமானது மிகச்சிறப்பாக நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். இம் மஹோற்சவ நாளிலே ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய ஆலய நிர்வாகிகள், அடியார்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு விநாயகப்பெருமானின் இஷ்ட சித்திகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ) கல்வி இராஜாங்க அமைச்சரும், யாழ்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும்.**



### ஆசிச் செய்தி

ஆலயத்தில் நடைபெறும் உற்சவங்களை மாங்கல்யம், சாந்திகம், பாவனம், சாகல்யம் என நான்கு வகையான ஆகமங்கள் கூறுகின்றன. மாங்கல்யம் என்பது ஒரே நாளில் செய்யப்படும் விழா. இதனால் மங்கலம் உண்டாகும். சாந்திகம் என்பது ஓமமும், பலியும் இல்லாது செய்யப்படும் விழா. இது அலங்காரத் திருவிழா எனவும் அழைக்கப்படும். இதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் அமைதி உண்டாகும். பாவனம் என்பது யாகதரிசனம், பலியிடுதல் என்பவற்று டன் செய்யப்படும் விழா. இதனால் மக்களின் உள்ளத்தில் தூய சிந்தனை உண்டாகும். சாகல்யம் என்பது கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை யாகம், பலி என்பவற்றுடன் ஐந்தொழில் விளக்கமாக செய்யப் படும் விழா. இதுவே மஹோற்சவம் ஆகும். வருடப் பெருவிழாவை மஹோற்சவமாக செய்வதே உத்தமமாகும். இம்மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா ஐந்தொழிலில் அழித்தலைக் குறிக்கின்றது. வருடப் பெருவிழாவில் தேர்த் திருவிழா உயர் திருவிழாவாக கொண்டாடப் படுகின்றது.

தென்னிந்தியாவின் காரைக்காலில் இருந்து கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு குடிசைக் கோவிலாக இருந்து இன்று இராஜகோபுரத்துடன் விளங்கும் ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவில் வெளிவரும் இரதோற்சவ மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். இவ்வேளையில் நீராவியடிப் பிரதேசத்தில் மிகச்சிறந்த ஒரு ஆலயமாக இவ்வாலயத்தை பரிபாலித்து வரும் வை. இரகுநாதமுதலியார் அவர்களுக்கும், இவ்வாலய வளர்ச்சிக்கு உதவிவரும் விழா உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும் வீரகத்தி விநாயகரின் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள்
பிரதமகுரு, நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம் நல்லூர், யாழ்ப்பாணம்.**



### பிரார்த்தனைப் பாமாலை
### கண்ணனாம் இராமன் தோஷம் களைந்தருள் ஈயும் நாதன்

வண்ணையில் வட கிழக்கில்
வளப்புறு வாவி ஓரம்
விண்ணுயர் கோபுரம் ஓங்க
விளங்கிடும் சீர்மை கண்டு
திண்ணமாய் அருள்க என்றவன்
திருவடி போற்றுகின்றோம்.

பூதராம் புனிதர் வேண்ட
புகழ் நீராவியடி புகுந்தோன்
வேதாரண்யதலம் விளங்கு
வீரகத்தி விநாயகப் பேரோன்
ஆதியாய ஆனை முகத்து
அருளாளன் எமை காக்க
நாதச்சிலம்பு ஒலி செயவே
நயந்திட ஆடல் கொண்டோன்

நீராவி நகரில் சேனாதிராசர் தந்த
நிகரில் கலிவெண்பா பெற்ற நாதா
சீராக செல்லம்மாள் குமாரன் இன்று
சேவிக்க அருளும் செல்வத்தயாளா
தேரோடும் தெய்வக்கோபுர கோயில்
திகழும் அருட்கரத்து ஐங்கரத்தேவா
பாராய் கடைக்கண்ணால் எம்மை
பார்த்தருள் நன்கு பராபரனே

வேதாரண்யத்தில் எழுந்தருளி இராமபிரானின் வீரகத்தி தோஷம் நீக்கிய விநாயகப் பெருமான் நமது யாழ்ப்பாணத்தில் வண்ணையின் வடகிழக்கே நீராவியடியில் கோபுரக்கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்கின்றான். ஆறுமுகநாவலரின் ஆசிரியரான சேனாதிராச முதலியாரால் கலி வெண்பா பாடப்பெற்ற இப்பெருமானின் பெருவிழாவில் இன்று நிகழும் திருத்தேர் விழா சிறப்புறவும் நம் எல்லோருக்கும் வெற்றி விநாயகனின் திருவருள் பரிபூரணமாக சித்திக்கவும் அவன் திருவடிகளைப் பணிந்து கோயில் வரலாறு பேசும் இப்பிரார்த்தனைப் பாக்களை சமர்ப்பித்து வாழ்த்துகின்றோம், பிரார்த்திக்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ.தியாக.மயூரகிரிக்குருக்கள்
ஆசிரியர்,இந்துசாதனம்.**

**மலராக்கம்
பா.இராகுலன்**



### வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.நகரில் நீராவியடிப் பகுதியில் வீற்றிருந்து அருள் பாலித்து கொண்டிருக்கின்ற ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானின் இரதோற்சவத்திற்கு ஆசிச் செய்தி வழங்க விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் பிறவி நமக்கு கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்பது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் நன்மொழி அரிதினும் அரிதாகிய இந்தப் பிறப்பு இறைவனால் எமக்குத் தரப்பட்டது. இவ்வுலகில் ஓரறிவுடைய புல்பூண்டு முதல் ஆறறிவு படைத்த மனிதர்வரை எண்ணில்லா உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றில் மேலான பிறப்பு மனிதப் பிறப்புத் தான் மற்றைய பிறப்புக்கு இல்லாத மனம் எனும் பகுத்தறிவு ஆகிய ஆறாவது அறிவு மனிதனுக்கே உண்டு. இந்த பகுத்தறிவுள்ள மனிதர்கள் தங்களைப் படைத்து வாழ வைக்கின்ற இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றார்கள்.

அவ்வகையில் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த மஹோற்சவப் பெருநாள் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருப்பது அவ்வூரினுடைய பக்தியை எடுத்துக் காட்டக் கூடியதாக உள்ளது. இந்த மஹோற்சவ காலத்திலும் ஏனைய தினங்களிலும் இந்த வீரகத்தி விநாயகரை தலையால் வணங்கி,கண்களால் அவரைக்கண்டு, காதுகளால் அவன் புகழ் கேட்டு , மூக்கால் முரண்று , வாயால் வாழ்த்தி, நெஞ்சால் நினைத்து, கைகளால் கூப்பித் தொழுது அக்கையால் விழுந்து வணங்கி ,கால்களால் கோயில் வலம் வந்து ,விநாயகப் பெருமானின் திருவருளை பெறுவதற்காக இவ்வூர் மக்களும் இவ்வூரில் இருந்து புலம் பெயர் நாட்டில் வசிக்கச் சென்றவர்கள் எல்லோரும் இந்த இரதோற்சவத்திற்கு வருகை தந்திருப்பது, விநாயகப் பெருமானுடைய அருளாட்சியின் மகத்துவத்தையும் பக்தரின் அருள் அவாவினையும் எடுத்துக் காட்டுகின்றது.

இவ் ஆலயத்தின் மஹோற்சவம் 07.06.2019 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16.06.2019 இன்று நடைபெறும் இரதோற்சவத்தையடுத்து தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது. இந்த ஆலயத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் வழிபாடுகள் நடைபெறும் போது அமைதியாக இருந்து அடியவர்கள் யாவரும் பார்த்து விநாயகரை வழிபட்டு, மகிழக் கூடிய வகையில் அமைதியும் ஆனந்தமும் அழகும் நிறைந்த வகையில் இரதோற்சவ திருவிழா அமைந்துள்ளது. இவ் ஆலய உற்சவ காலங்களிலும், மஹோற்சவ காலங்களிலும் மக்கள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகனின் அருளாசிகளை பெற்று நல்வாழ்வு வாழவும், நாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலைபெற்று இன்புற்று வாழவும் பிரார்த்திக்கின்றேன்.

**இ. இளங்கோவன், ஆளுநரின் செயலாளர்,
வட மாகாணம்.**



### நீராவி ஜெய வீரகத்தி விநாயகர் இன்று தேரேறி வருகிறார்

திருவிழாக்களிலே முதன்மை பெறுவது தேர்த்திரு விழாவாகும். எமது உடலையும் உள்ளத்தையும் தூய்மை பெறச் செய்து இறைவனிடத்தில் லயிக்கச் செய்வதும் இரதோற்சவ திருவிழாவாகும். ஊர் கூடித் தேர் இழுத்தல் சமய, சமூக ஒற்றுமையைக் குறித்து நிற்கின்றது. எமது பண்பாட்டு சின்னங்களை விளக்கும் வகையில் தேரில் பல கலைகளும் காணப்படுகின்றன. மஹோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த்திருவிழாவான இன்று ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் அழகிய தேரில் எழுந்தருளி வரும் கண்கொள்ளாக் காட்சியை அனைவரும் கண்டு விநாயகப் பெருமானின் அருளினைப் பெற தேரின் வடம் பிடித்திடு வோம். மேலும் இவ்வாலயத்தின் பணிகளை திறம்படச் செய்து கொண்டிருக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் வீரகத்தி விநாயகரின் அருட்கடாட்சம் என்றும் நிலைத்திருக்கவும் அவர்களின் பணி தொடரவும் மனமார வாழ்த்துகின்றோம்.

வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்.

**குட்டித்தம்பி குடும்பம்**

**அனுசரணை
KUDDYTHAMBY FAMILY
20 Frensham Close Southall, UK
kuddythambyfamily@gmail.com**



### வாழ்த்துச்செய்தி

ஆலயங்களில் இடம் பெறும் விழாக்கள் மஹோற்சவம் எனப்படுகின்றன. பஞ்ச கிருத்திய உண்மைகளைப் புலப்படுத்தும் இவ் விழாக்களில் இரதோற்சவம்(தேர்த்திருவிழா) அதாவது சங்காரம் (அழித்தல்) உயிர்களை இளைப் பாற்றுவதற்குச் செய்யும் பேரருட் செயல் என்ற) தத்துவத்தை தெரிவிக்கின்றது. தேர்த்திருவிழா சிவபெருமான் திரிபுரதகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துகின்றது. இந்த உடம்பு ஒப்பற்ற ஒரு தேர். உயிர் உடம்பை இயக்கிக் கொண்டு இருக்கின்றது. உடல் வெறும் ஜடம், உடலாகிய தேரை இயக்குவது உயிர் என்பதை உடல் அறிவது இல்லை. உயிரும் உண்மையில் ஒரு தேர். உயிர்க்கு உயிராகிய இறைவன் உயிராகிய தேரில் வீற்றிருந்து இயக் குகின்றான். இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேர். இந்த உண்மை களை உணர்பவர்களுக்கு ஞானநிலை சித்திக்கும்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்று அதனைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளும் இறைவனின் திருவருட் தரிசனத்தை பக்தர்கள் கண்டு இன்புறும் நாள் தேர்த்திரு விழா ஆகும். திருவிழாக் காலத்தில் இறைவன் தம்பம்(கொடி மரம்),விம்பம் (மூர்த்தியின் திருவுருவம்) கும்பம் ஆகிய மூன்று இடங்களிலும் வெளிப்பட்டு அருள் செய்வான். திருவருளைப் பெறும் அடியவர்கள் சிவ விளக்கம் பெற்று ஆனந்தத்தில் திளைத்து வாழ்வார்கள். சரியை, கிரியை ,யோகம், ஞானம் ஆகிய பதங்களில் நிற்போர் அவ்வப் பதங்களுக்குரிய பேறுகளைப் பெறுவார்கள். ஏனையோரும் அவரவர் பக்தியின் அளவிற்கு ஏற்ப திருவருள் நலன் பெற்றுச் சிவநெறியில் நிற்பார்கள். பக்குவம் அடைந்த ஆன்மாக்களை இறைவன் முக்தியில் சேர்க்கின்றார். சென்ற ஆண்டு புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் திருத்தேரில் நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் பவனி வந்து தன் பக்தர்கட்கு அருளாசி வழங்கியதை இன்றும் அவர் பக்தர்கள் பெருமையாகச் சொல்லி மகிழ்வதைக் காணலாம்.திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பல்வகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. இந்த ஆண்டும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானைச் சித்திரத் திருத்தேரில் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று, எங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்வோமாக.

**வை. இரகுநாத முதலியார்,
ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்,
நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.**

# பிணைமுறி ஊழல் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்

## முதலில் ரணில் பெயர் சுனில் காட்டம்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குற்றத்திற்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்துவதை போலவே இதனுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளையும் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குற்றவாளிகளைப் பட்டியல்படுத்தினால் முதல் பெயராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கி ஊழல் விடயத்தில் உண்மைகளை வெளிக்கொண்டுவர மக்கள் விடுதலை முன்னணி பல முயற்சிகளை சகல விதத்திலும் எடுத்தது. இன்றும் நாம் இதனை கைவிடவில்லை. முதலில் இந்த ஊழல் குறித்து நாம் வெளிப்படுத்தி ஊடகங்கள் முன்னிலையில் கருத்துக்களை முன்வைத்து, இதனை ஆராய வேண்டும் என நீதிமன்றம் வரை நாடி எமது சகல நடவடிக்கைகளையும் எடுத்தோம்.

அர்ஜுன மகேந்திரன் மற்றும் அவரது மருமகன் இருவரும் தொடர்புபட்டிருந்தனர். ஆகவே இவர்கள் தலையீடுகள் இல்லாது விசாரணைகளை முன்னெடுக்க மத்திய வங்கி ஆளுநர் பதவி விலக வேண்டும் என்பதைத் தெரிவித்தோம்.

நான் கோப் குழுத் தலைவர் என்ற ரீதியில் இது குறித்த விசாரணை ஒன்றை நடத்தி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட்டேன்.

அது தவிர்ந்து ஜனாதிபதி தனியாக விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். இவை அனைத்தும் ஒரு கணக்கு வழக்கு தொடர்பில் மட்டுமே முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளாகும். இந்தக் குற்றங்களில் அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டுவர வேண்டும்.


இன்றுவரை அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வந்து நீதிமன்றம் முன்னிலையில் நிறுத்த முடியாதுள்ளது என்றால் அது இந்தப் பாரிய ஊழலுடன் தொடர்புபட்ட அரசியல் நெருக்கமே காரணமாகும். இதில் பிரதான குற்றவாளி மட்டும் அல்ல அதனுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம் அளவெட்டி வடக்கு பத்தானை அருள்மிகு சாமுண்டிகா சக்தி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய பிரதான மண்டபத்தில் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினந்தோறும் இரவு 7 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜ லிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

நாளை 17 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம் "சமயமும் வாழ்வும்", 18 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம் சைவப் புலவர் ச.நவநீதன் விடயம் "இன்பமே சூழ்க", 19 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் காசிராஜா விடயம் "அன்பே சிவம்", 20 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் விடயம் "ஈழத்தில் வைரவர் வழிபாடு", 21 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம் "கிரியைகளும் வாழ்வும்", 22 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "விரதமும் வாழ்வும்", 23 ஆம் திகதி ஆன்மீகத் திலகம் இளம்சைவப்புலவர் க.கைலநாதன் விடயம் "உள்ளங்கவர் கள்வன்", 24 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம் "வைரவ வழிபாட்டின் சிறப்புக்கள்", 25 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் காசிராஜா விடயம் "நாயன்மார் காட்டிய நன்நெறிகள்", 26 ஆம் திகதி இளம்சைவப்புலவர் ஆன்மீகத் திலகம் க.கைலநாதன் விடயம் "அழிந்து எழுத்து", 27 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "அறநெறிக்கல்வியின் அவசியம்", 28 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் த.மனோஜ்குமார் விடயம் "சிவ சின்னங்கள்" என தலைப்புக்களில் இடம் பெறவுள்ள சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கர்தினால் மட்டக்களப்புக்கு விஜயம்





இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்பொன்னையா ஜோசப் ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடியதைத் தொடர்ந்து, ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுக்குள்ளான சீயோன் தேவாலயத்துக்கு விஜயம் செய்த பேராயர், அங்கு புனரமைக்கப்பட்டுவரும் ஆலயத்தையும் பார்வையிட்டார்.

இதன்போது, குறித்த தேவாலயத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனைகளிலும் பேராயர் ஈடுபட்டார்.

இந்த விஜயத்தின் போது, இராணுவ அதிகாரிகள், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை உட்பட பலர் இணைந்திருந்தனர். (7)

# வைத்தியர் ஷாபி மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்

## தாதிகள் வாக்குமூலம்



குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர் மொஹமட் ஷாபியுடன் சிஸேரியன் சத்திர சிகிச்சையில் ஈடுபட்ட 69 தாதிகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கினர்.

சிஸேரியன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் வேளையில் வைத்தியர் ஷாபி பெண்களுக்கு கருத்தடை செய்வதையோ பலோபியன் குழாய்களுக்கு சேதம் ஏற்படுத்துவதையோ தாம் ஒரு போதும் கண்டதில்லை என வாக்குமூலமளித்த 69 தாதிகளும் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த தாதிகளில் மேலும் ஒரு தாதியிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ள நிலையில் அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர் ஷாபி 4000 பௌத்த தாய்மார்களுக்கு கருத்தடை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# நினைவு தின விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பேரறிஞர் கந்தமுருகேசனாரின் 54 ஆவது நினைவு தின விழாவும், அதனை முன்னிட்டு பெரிய ஐங்கரன் எழுதிய "இளங்கோவடிகளின் கவித்திறன்" (சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு) நூல் வெளியீட்டு விழாவும், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

யாழ்.புற்றாளை மகா வித்தியாலய அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து கொள்வார். (5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 105 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 340 | 350 | 400 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 100 | 120 |
| கோவா | 120 | 100 | 60 | 100 |
| கரட் | 150 | 200 | 150 | 160 |
| பூசணி | 100 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 70 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 105 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 150 | 100 | 100 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 150 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 160 |
| கத்தரிசம்பள்ள | 80 | — | 50 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 280 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 220 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 100 | 100 |

# தஜிகிஸ்தான் ஜனாதிபதியுடன் மைத்திரி சந்திப்பு





(பிஷ்சேக்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தஜிகிஸ்தான் நாட்டின் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிஷ்சேக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு இடம்பெற்று வருகின்றது.

இதில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர் அங்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமலி ரஹ்மான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் துஷான்பே ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் குறித்து பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விளக்கு கவிழ்ந்ததில் வயோதிபப் பெண் பலி

(களனி)

களனி - பொல்ஹேன - ருக்மல் பிரதேசத்தில், நேற்று முன்தினம் வீடு ஒன்றில், விளக்கு கவிழ்ந்ததில், 74 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் தீப்பற்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு, மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, வீட்டில் விளக்கு ஏற்றியுள்ள நிலையில், விளக்கு கவிழ்ந்து தீப்பற்றியதில் குறித்த வயோதிபப் பெண் உயரிழந்துள்ளார்.

இவர், வீட்டில் தனிமையாக இருந்துள்ள நிலையிலே, குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(7)

## அம்பாறையில் கத்திக்குத்து இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(காரைதீவு)

அம்பாறை - காரைதீவு பகுதியில் இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் ஆபத்தான நிலையில் காரைதீவு வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வடிவேல் வீதி காரைதீவு 12ல் வசிக்கும் ஒரு பெண்பிள்ளையின் தந்தையான ஞானசேகரம் ரதாஸ் (வயது-27) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக காரைதீவு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

மேலும் தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

# ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை

## அஜித் பி.பெரேரா சுட்டிக்காட்டு

(களுத்துறை)

இலங்கையில் இன்னும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே உள்ளார். அரசியலமைப்பினூடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பாரியளவான நிறைவேற்று அதிகாரங்கள் அவரிடமே உள்ளன. 19 ஆவது அரசியலமைப்பினூடாகவும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை என்று டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி.பெரேரா



தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலும் மாற்றம் கொண்டு வரப்படுவதும் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போது மோதல் இளைஞர்கள் 6 பேருக்கு விளக்கமறியல்



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா, தரவளை விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது இரு குழுக்களுக்கு இடையில் கடந்த 9 ஆம் திகதி மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் 6 பேரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய 5 சிறுவர்களை, சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை வைக்குமாறும் ஹற்றன் நீதிமன்ற நீதவான் ஜயராமன் டொர்க்சி உத்தரவு பிறப்பித்தார்.

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது.

மேலும், இது தொடர்பான காணொலி அட்டன், சாஞ்சிமலை பிரதான வீதியின் தரவளை பகுதியில் வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியது.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்த 3 பேரில் ஒருவர் கண்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, மேலும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் 2 பேர் சிகிச்சை பெற்று வருவதாக ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.


இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தாயும் இரண்டு பிள்ளைகளும் ரயில் மோதி பரிதாபமாகப் பலி!

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் ரயிலுடன் மோதுண்டு தாயும் இரண்டு பிள்ளைகளும் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சன்ஹில் ஹோட்டலுக்கு அருகிலுள்ள ரயில் பாதையில் குறித்த விபத்து இடம்பெற்றதாகவும் கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடனேயே குறித்த மூவரும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சர்வதேச யோகா தின நிகழ்வு





(கொழும்பு)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று 5 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வு நடைபெற்றது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

உலகெங்கிலும் யோகாவுடன் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளும் மக்கள், அதன் பெரும் நன்மைகளை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், யோகாவை தங்களது வழமையான நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, தங்களது நாளாந்த வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கொண்டு வந்துள்ளனர் என இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, கயந்த கருணாதிலக மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்ததோடு, யோகாப் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் நூற்றுக்கும் அதிகமான யோகா ஆர்வலர்கள் கொண்டு பங்குபற்றியிருந்தனர்.(இ-7)

# யுத்த காலத்தில் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

## ஜனராஜா சுகாதார பொதுச் சேவை சங்கத்தலைவர் கோரிக்கை

வடக்கில் யுத்த காலத்தில் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என ஜனராஜா சுகாதார பொதுச் சேவை சங்கத்தின் தலைவர் பீரிஸ் சுவர்ணபால தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

வடக்கு-கிழக்கில் நடைபெற்ற யுத்த காலத்தில் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்கள் பல நெருக்கடிகளின் மத்தியில் பணியாற்றியிருந்தனர். எனவே எந்த விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி வடக்கில் பணியாற்றிய 825 சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். வடபகுதியில் பல அரச திணைக்களங்களில் இருபது வருடங்களுக்கு மேலாக வேலைக்கான புதிய வெற்றிடங்கள் உருவாக்கப்படவில்லை என மேலும் தெரிவித்தார். (7-9-250)

# நீராவியடிப்பிள்ளையார் ஆலய வளாகத்திலுள்ள இரு மதப் பெயர்ப்பலகைகளும் அகற்றல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள வளாகத்தில் சட்டவிரோதமாக பௌத்த விகாரை அமைத்து குருகந்த ரஜமகா விகாரை என பெயர் சூட்டப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையால் இரு மதங்களுக்கிடையில் வழிபாடு மற்றும் இடம் தொடர்பிலான பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றில் தொடர்ந்து வந்துள்ள நிலையில் இரண்டு தரப்பினரும் அமைதிக்கு பங்கம் இன்றி வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட நீதிமன்று கட்டளையிட்டிருந்த நிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பௌத்த துறவிகள், மக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து கடந்த 5 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள். இந் நிலையில் கடந்த 11 ஆம் திகதி அமைச்சர் மனோகணேசன் பயணம் மேற்கொண்டு நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த இடத்தில் குருகந்த றஜமகாவிகாரை என பௌத்த துறவியாலும் நீராவியடிப் பிள்ளையார் என கிராம மக்களாலும் பெயர்ப்பலகை சூட்டப்பட்டது. நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அமைக்கப்பட்ட இரண்டு பெயர்ப்பலகைகளில் ஒரு பெயர்ப்பலகைக்கு அனுமதி பெறப்பட்டு அமைக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஒரு பெயர்ப் பலகை அகற்றப்படவில்லை.

இந்த பெயர்ப்பலகை அந்த இடத்தில் நாட்டுவதற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி தேவை என்ற நிலையில் நேற்று முன்தினம் குறித்த இடத்திற்குச் சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அனுமதி அற்ற நிலையில் நாட்டப்பட்ட குருகந்த றஜமகா விகாரையின் பெயர்ப் பலகையினையும் நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் பெயர்ப்பலகை ஒன்றையும் அகற்றியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸார் மற்றும் நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் முன்னிலையில் வீதியில் இருந்து 15 மீற்றர் தூரத்திற்கு குறித்த இரண்டு பதாகைகளும் காணப்பட்டுள்ளதால் அவை அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-281)

# உயிரிழை அமைப்பின் விற்பனை நிலையம் திறப்பு



(பனிக்கன்குளம்)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்பாக மாங்குளத்தில் அமைந்திருக்கின்ற உயிரிழை நிறுவனத்தினர் தாம் உற்பத்தி செய்யும் விற்பனைப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான விற்பனை நிலையத்தை நேற்று மாங்குளத்தில் திறந்து வைத்துள்ளனர்.

உயிரிழை அமைப்பின் தலைவர் கோ.சிறிகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உயிரிழை அமைப்பின் பிரதம போசகர் உளநல மருத்துவர் ஆர்.சிவதாஸ், வரோட் நிறுவனத்திலுடைய அருட் தந்தை றொனால்ட் சுஜீபன் LBR பவுண்டேஷன் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் வி.பிறேம்குமார், உயிரிழை அமைப்பின் செயலாளர் சு.இருதயராசா உள்ளிட்ட உயிரிழை அமைப்பின் உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (7-9-281)

# குகராஜாவுக்கு அஞ்சலி

(கரைச்சி)

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நா.வை. குகராஜாவின் பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ளது என கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் கிளிநொச்சி மக்களுக்காக அரசியல் பணி, சமூகப் பணி போன்றவற்றை செய்து மக்கள் மத்தியில் நீங்காத இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# கஞ்சாவுடன் இளைஞர் கைது

மன்னார் பேசாலை உதயபுரம் பகுதியில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்ததாக சந்தேகத்தின் பெயரில் பேசாலை உதயபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை மன்னார் பேசாலை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் பேசாலை பொலிஸாருக்குக்கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ் உதவி அத்தியட்சகர் கஸ்தூரி ஆரச்சி மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தமிந்த சோமஜித் தலைமையிலான போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் பேசாலை உதயபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனையிட்ட போது இளைஞர் ஒருவர் தனது உடைமையில் பதுக்கி வைத்திருந்த 22 கிலோ 100 கிராம் நிறை கொண்ட கேரளக் கஞ்சா இலைகளை மீட்டதுடன் குறித்த இளைஞரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (7-9-285)

# பாராளுமன்ற சபாநாயகர் வவுனியாவிற்கு விஜயம்



(குருமன்காடு)

வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய வவுனியா ஈரட்டை பெரிய குளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ. நினைவு நூலகம் மற்றும் மஹா கருணா பள்ளியினை நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

வவுனியாவிற்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீபோதிதக்சிணாராமய பௌத்த விகாரைக்குச் சென்று விகாராதிபதி சியம்பலாகஸ்வெவ விமல சாரநாயக்க தேரரின் ஆசிகளைப் பெற்றதுடன் வவுனியாவில் தற்போதைய நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடினார்.



அதன் பின்னர் 10.30 மணியளவில் ஈரட்டை பெரிய குளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ நினைவு நூலகம் மற்றும் மஹா கருணா பள்ளியைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாச மற்றும் சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த வெளிநாட்டவர்கள், பௌத்த விகாரதிபதிகள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7-9-250)

# வவுனியா வைத்தியசாலையில் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமின்றி பொதுமக்கள் பெரும் சிரமம்

வவுனியா பொது வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் இன்றி அங்கு செல்லும் நோயாளர்கள் வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள், கிளினிக் செல்லும் நோயாளர்கள், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது வைத்தியசாலைக்கு முன்பாக தமது துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதற்கு படையினர் அனுமதியளிக்கவில்லை. இதனால் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்வதால் அவ் வீதிக்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு தரிப்பிடம் ஒன்றை அமைத்துத்தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலைக்கு தினமும் பல பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான நோயாளர்கள் வந்து செல்கின்றார்கள் அவர்கள் தமது வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு தரிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் வாகனங்கள், தலைக்கவசங்கள் திருட்டுப் போகும் சம்பவங்கள் தினமும் இடம்பெற்று வருகின்றது. வைத்தியசாலையில் பணியாற்றுபவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், பொது மக்கள், நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள் தமது வாகனங்களை வெளியே நிறுத்திவிட்டுச்செல்வதற்கு வெளியே சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் அனுமதிக்கவில்லை.

இதனால் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதி ஒன்றில் தமது மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளை நிறுத்திவிட்டுச் செல்வதால் அவ் வீதிக்கு தடை ஏற்பட்டுள்ளது. அவ்வீதியிலுள்ள பொதுமக்கள். முச்சக்கரவண்டி சங்கத்திற்கு செல்பவர்கள் போன்ற பலர் பெரிதும் அவல நிலைக்குச் சென்றுள்ளதாகவும் இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் வாகனப்பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறும் வைத்தியசாலைக்கு பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (7-9)

எதிரிகளைத் தாக்க கட்டப்படும்
கோட்டைகளே கல்விச்சாலைகள்

– கன்பூஸியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தர் சொல்லாததை ரத்ன தேரர் சொல்லியுள்ளார்

கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளைப் பெயர்மாற்றம் செய்து முஸ்லிம் குடியேற்றங்களை கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஸ்தாபித்துள்ளார் என அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோதே தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களை கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாக்கி வருகின்றனர்.

தவிர, கிழக்கிலுள்ள ஒரு பகுதி முஸ்லிம் வர்த்தகர்கள் தமிழ் மக்களின் நிலங்களைக் கபளீகரம் செய்வதிலும் ஏழைத் தமிழ்ப் பெண்களை வர்த்தக நிலையங்களில் பணி நிலைக்குச் சேர்த்துவிட்டு, பின்னர் அவர்களுக்குத் தொந்தரவு செய்வதும் அவர்களை இஸ்லாம் மதத்துக்கு மத மாற்றம் செய்வதுமான பெரும் கொடுமை நடந்தாகிறது.

இதுபற்றி கிழக்கு மாகாணத்துத் தமிழ் மக்கள் கண்ணீரோடு கூறுவர்.

எனினும் இந்த நாசகாரம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வாய் திறந்ததில்லை என்பதுதான் அதிகமான உண்மை.

கிழக்கு மாகாணத்தை தங்களுக்கான மாகாணமாக மாற்றுகின்ற சுயமைத்தனத்தில் ஒரு குறிப்பிட்ட முஸ்லிம்கள் மும்முரமாக இருக்கையில்,

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் போன்றவர்கள் எதுவும் பேசாமல் மௌனம் காத்து நிற்கின்றனர்.

தமிழர்களுக்கு வாய்த்த அரசியல் தலைமை காரணமாக கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களின் நிலங்களை பெயர்மாற்றம் செய்து அந்த நிலங்களில் முஸ்லிம் குடியேற்றங்களை ஹிஸ்புல்லாஹ் செய்தார் என்ற உண்மையை அத்துரலிய ரத்ன தேரர் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு அத்துரலிய ரத்ன தேரர் கூறியது கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் வாய்ப்பாகும்.

எங்கள் தமிழ்த் தலைமை கூறாத உண்மையை, அத்துரலிய ரத்ன தேரர் கூறியதன் மூலம்; கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழ் மக்களை விரட்டுகின்ற செயற்பாடு படிப்படியாக நடந்து வருகிறது என்ற உண்மை உலகுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அத்துரலிய ரத்ன தேரர் கூறிய உண்மைச் சாட்சியத்தோடு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் உசார் அடைந்து பறிக்கப்பட்ட தங்களின் நிலங்களை மீட்பதற்காக நீதியன்றத்தை நாட வேண்டும்.

அருமையான இந்தச் சந்தர்ப்பத்தை கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் பொது அமைப்புகளும் தவறவிடாமல் பயன்படுத்த வேண்டும்.

இதனைச் செய்வதற்கு அத்துரலிய ரத்ன தேரர் போன்றவர்களின் உதவிகள் தேவைப்பட்டால், அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தயங்கக் கூடாது.

# ஈஸ்டர் தாக்குதலைப் போன்றதொரு சம்பவம் இனி இலங்கை மண்ணில் இடம்பெறக்கூடாது

## பேராயர் கர்தினால் வேண்டுதல்

(ஏறாவூர்)

ஈஸ்டர் தாக்குதலைப் போன்று துரதிர்ஷ்டவசமான சம்பவம், இனியும் இலங்கை மண்ணில் இடம்பெறக்கூடாது என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு நேற்று சனிக்கிழமை காலை விஜயம் மேற்கொண்டபோது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"சீயோன் தேவாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமையை இட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாம் இந்த தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த உறவுகளுக்கு கவலையைத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளோம்.

அவர்களுக்கு எப்போதும் நாம் துணை நிற்போம் என்ற செய்தியையும் இவ் வேளையில் கூறிக்கொள்கிறேன்.

மேலும், ஈஸ்ரர் தினத்தன்று இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம், இனியும் இலங்கை மண்ணில் இடம் பெறக் கூடாது என்று நாம் பிரார்த்திக்கிறோம்.

அனைத்து மக்களும் சுய கௌரவத்தோடும், உரிமையோடும் வாழும் நிலைமை ஏற்பட வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# லிபியாவில் உள்நாட்டுப் போர்! 42 பேர் பலி; 125 பேர் படுகாயம்

(திரிபோலி)

லிபியாவில் உள்நாட்டுப் போர தீவிரமடைந்து வருகிறது. தலை நகர் திரிபோலியில் நடந்த இரு தரப்பு மோதலில் 42 பேர் பலியாகினர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

லிபியாவில் ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி கடாபி, 2011ஆம் ஆண்டு கொல்லபட்டதில் இருந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. பல்வேறு ஆயு தக் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டு வருகிறது. கலிபா கப்தார் தலைமையிலான ஆயுதக் குழுவினர் நாட்டின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத் துள்ளனர். இந்த குழுவினர், சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரச படைகளுடன் போரிட்டு வருகின்றனர்.

அரச படை வசம் உள்ள தலைநகர் திரிபோலியை கைப்பற்றுவதற்காக கலிபா கப்தார தலைமையிலான ஆயுதக் குழுவினர் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து உக்கிரமான தாக்குதலை நடத்தி வருகின்றனர். இந்த போரில் சுமார் 400 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஊரைவிட்டு வெளியேறி உள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் லிபியாவின் தலைநகர் திரிபோலியில் இரு தரப்பினரிடையே நடைபெற்ற மோதலில் 42 அப்பாவி மக்கள் பலியாகினர். 125பேர் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என ஐநா அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

# பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

இலங்கை பொலிஸ் சேவைக்காக ஆண், பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.டி.ராஜித ஸ்ரீதமிந்த அறிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பம் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் அதற்கு மேலதிக தகைமைகள் உள்ள ஆண், பெண் இருபாலாருக்கும் அரிய தோர் வாய்ப்பாக அமைவதோடு பொலிஸ் சேவையில் இணைந்து நல்லதொரு சேவையை செய்வதற் குரிய இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தெரிவு செய்யப்படும் பயிலுநர்களுக்கான அனைத்து பயிற்சிகளும் வட மாகாணத்திலேயே வழங்கப்படுவதோடு மேலான சம்பளமும் கொடுப்பனவுகளும் பெற்றுத்தரப்படும் எனவும் விண்ணப்பதாரிகளின் திறமைகளுக்கமைய கடமையில் அமர்த்தப்படுவதோடு உயர்கல்விக்கான வாய்ப்பு வெளிநாட்டு மற்றும் இலங்கையினுள் பெற்றுத்தரப்படும் கணனி பயிற்சி, வாகன போக்குவரத்து பயிற்சி, பொலிஸ் குதிரை பயிற்சி உள்ளிட்ட விளையாட்டு பயிற்சிகளும் பெற்றுத்தரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்து வளமான எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதற்கான பயணிக்குமாறும் கேட்டுக் கொண்டார். (5-10)

# ஆலய உண்டியல் உடைத்து திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -சங்கத்தானை சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய உண்டியல் கடந்த வியாழக்கிழமை இரவு விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது. இதன்போது உண்டியலில் இருந்த பணத்தையும் திருடர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் மேலும சில ஆலயங்களில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் உண்டியல்கள் உடைத்து பணம் திருடப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (5-30)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இந்து இளைஞர் மன்ற முன்றலில் மன்றத்தலைவர் த.சசி கிரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு, தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். ஒளியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர, சகோதரிகளை வெறுப்போர் இருளில் தான் இருக்கின்றனர்.

❖ எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர். அவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுகிறவர். எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் அவரே.

❖ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.

❖ நீங்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்களென்று சொன்னவர் யார்? நீங்கள் சகோதரர்கள் அல்லவா? ஏன் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள்? தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள்.

❖ கடவுளைச் சார்ந்து தான் நாம் வாழ்கின்றோம். இயங்குகின்றோம். இருக்கின்றோம். கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும்.

# தூயஒளி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம் இறுதியில் பாடும்மீன்- ஞானமுருகன் இன்று பலப்பரீட்சை





குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 33 ஆவது நினைவு தினத்தை நினைவு கூரும் நிலையில் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு பலம் வாய்ந்த ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. இப் போட்டியில் சாந்தன் கெயின்ஸ்சீன் அதிரடிக் கோல் மூலம் 2-0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இவ் வெற்றியின் மூலம் பாடும்மீன் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. இறுதிப்போட்டியில் மயில்லங்காடு ஞானமுருகன் அணியை இன்று சந்திக்கவுள்ளது. (க-26-106)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது உதயசூரியன் அணி



நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இளங்கதிர் எதிர் உதயசூரியன் அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் 1:1 என ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றியை தீர்மானிப்பதற்காக நடுவரினால் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல்கணக்கில் உதயசூரியன் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அரியாலை சனசமூக நிலைய அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது அரியாலை திருமகள்



அரியாலை அருணோதயா சனசமூக நிலைய 59 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு உள்ளூர் ரீதியில் நடத்திய செற்றப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கடந்த 14 ஆம் திகதி அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணியை 28:26, 22:25,20:25,25:18,15:08 என்ற புள்ளிகளினால் 5 சுற்றுப் போட்டியினை 3:2 என வென்று சம்பியனாகியது. மூன்றாம் இடத் இடத்தினை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் பெற்றது.

இப் போட்டியில் உள்ளூர் கழகங்கள் 10 பங்குபற்றியது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# மாணவர்களிடம் அன்பை மட்டுமல்ல நற்பண்பையும் ஊட்டி வளர்க்கவேண்டும்

## டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

பாலகப் பருவத்திலேயே கல்வியுடன் விளையாட்டை மட்டும் போதிக்காது மாணவச் செல்வங்களுக்கு அன்பையும் ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பையும் ஊட்டி வளர்ப்பதன் ஊடாகவே வளமானதொரு எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குப்பிளான் தெற்கு. ஞானகலா மழலைகள் கல்விப்பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த சூழலுக்குள்ளும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமது சமூகம் கல்வி கற்க வேண்டியதொரு சூழல் இருந்து வந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை மாற்றம் கண்டு ஓரளவு இயல்புச் சூழல் உருவாகியிருக்கிறது.

நெருக்கடியான யுத்த சூழலுக்குள்ளும் அச்சமான, பதற்றமான நிலைமையிலும் எமது மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தார்கள்.

ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்த போதிலும் கூட மாணவர்களால் தற்போது சிறப்பானதொரு கல்வி நிலையை அல்லது பெறுபேறுகளை ஈட்ட முடியாமல் இருக்கும் நிலையானது மிகவும் வேதனை தருகிறது.

மக்கள் நலன்சார்ந்து உழைப்பதற்கும் அதனை செயற்படுத்துவதற்கும் அக்கறையும் ஆற்றலும் உள்ளவர்களால் மட்டுமே சாதிக்க முடியும்.

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அவர்களிடம் ஆற்றலும் அக்கறையும் இல்லை என்பதை வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் மட்டுமல்லாது நிகழ்காலத்திலும் அவர்களது செயற்பாடுகளூடாக மக்கள் தற்போது உணர்ந்து கொண்டுள்ளனர்.



எனவே எதிர்காலத்தில் மக்களுடன் நின்று மக்களுக்காய் உழைப்பவர்களையே தமது அரசியல் தலைமையாக தெரிவு செய்வதன் ஊடாகவே மக்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் உரிய முறையில் தீர்வு காண முடியும் என்று இதன்போது சுட்டிக்காட்டினார்.

முன்னதாக ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அதிதிகள் மழலைகளின் இசை அணிவகுப்புடன் அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து வருடாந்த விளையாட்டு விழா சிறப்புற நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ரஷ்ய ஜனாதிபதி...

சென்ற ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் ஈடுபட்டார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரி - ஆசியாவின் எந்த நாட்டிலும் இனி பயங்கரவாத தாக்குதல் நடக்காத விதத்தில் ஆசிய நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும். அடுத்த நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு. பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் வல்லமை இலங்கைக்கு உள்ளதென ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

## கைது செய்ய...

நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் குருநாகல் வைத்தியர் சியாப்தீன் மொஹமட் ஷாபிக்கு தகுந்த தண்டனை வழங்குமாறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் நுவரெலியா நகர மத்தியில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக் கப்பட்டது.

இதன்போது, எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய சுலோகங்களை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் சுமார் 100இற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய சுதந்திர முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாகாணத்தின் முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ, நுவரெலியா பிரதேச சபையின் உப தலைவர் சரத் குமார உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## பொதுச்சேவை...

5 உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு ஆளுநரால் கடந்த 7ஆம் திகதி கோரப்பட்டிருந்தது. எனினும் அவர்கள் ஒருவார காலத்தில் பதவி விலகவில்லை. அதனால் தலைவர் உள்ளிட்ட 5 பேரினதும் பதவி நீக்கப்பட்டுள்ளதாக ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பொதுச் சேவையை புத்துயிர் பெறச் செய்யும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவை கலைத்துள்ளதாக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (ம-3)

## உலக கிரிக்கெட்...

போட்டி நடைபெற்ற லண்டன் ஓவல் மைதானத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

எல்.ரி.ரி.ஈக்கு ஆதரவளிக்கும் இலங்கையர்கள் சிலரால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் போது மனிதப் படுகொலைகள் இடம்பெற்றதாகவும், அதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உலகில் தடை செய்யப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈ அமைப்பின் கொடிகளை ஏந்திய வண்ணம் சுமார் 30 பேரளவில் மைதானத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3)

## நாங்கள் ஒன்று...

டன் அன்று பக்கம் பக்கமாக அமர்ந்திருந்த இதே மண்டபத்தில் அன்னாரின் நினைவுப் பகிர்வுக்காக அவர் இல்லாமல் தனித்து நின்று இன்று பேசுவது மனதிற்கு பாரமாக இருக்கின்றது.

அமரர் தர்மராஜா மருதநாரின் தொண்டர். ஜீ.ஜீயின் தொண்டர், எஸ்.ஆர்.கனக நாயகத்தின் தொண்டர், N.T. சிவஞானத்தின் தொண்டர். நண்பர் குமார் பொன்னம்பலத்தின் தொண்டர். தொண்டர் என்ற விதத்தில் அவர் மருநாரை. ஜீ.ஜீயை. S.RஜN.T. சிவஞானத்தை. குமாரை விஞ்சிய ஒருவராக வாழ்ந்தார். ஏன் கனகீஸ்வரனையும் விஞ்சியவராக வாழ்ந்தார்! அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஆழமாக நுழைந்து அவர்கள் செய்த ஒவ்வொரு காரியமும் சரியே என்று அடித்துக் கூறக் கூடிய ஒருவராக வாழ்ந்தார். கடைசிக் காலங்களில் இவ்வாறான மகானுபாவர்களுடன் என்னையும் சேர்த்துக் கொண்டது தான் விந்தையிலும் விந்தை. நான் செய்தவற்றை, சிந்தித்தவற்றை சரியே என்று அடித்துக் கூறும் திறன் படைத்திருந்தவர் தர்மராஜா. நான் கூட என் நிலை பற்றிய சரி பிழையில் சிந்தனை செலுத்திய போது "இல்லை, நீங்கள் எடுத்த முடிவே சரி!"என்று ஆணித்தரமாக கூறியவர் நண்பர் தர்மராஜா அவர்கள்.

நல்ல வேளை எனக்கும் கஜேந்திர குமாருக்கும் இடையில் முரண்பாடு வந்திருக்கும் இந்த நேரத்தில் அவர் இல்லாதது தம்பி கஜனுக்கு ஆறுதல்தான். கட்டாயம் நான் கூறுவதை ஏற்குமாறு கஜனை வற்புறுத்தி இருப்பார் திரு.தர்மராஜா அவர்கள்! காரணம் இன்றைய நிலை அப்படி என்பதை நண்பர் தர்மராஜா நன்றாக அறிந்திருந்தவர். வடகிழக்கை துண்டாட, படையினரை நிரந்தரமாக வட கிழக்கில் வைத்திருக்க, தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகள் என்று சித்திரிக்கத் தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள் யாவுமே நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளதை அவர் அறிந்திருந்தார்.

கடந்த 30 வருடகால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் வடகிழக்கில் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாங்கள் இன்று இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளுக்கான அடித்தளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டு வருவதை நன்கறிந்திருந்தார். காணிகள் பற்றிய சட்ட அறிவைக் கொண்டிருந்த அவர் நிலம் போனால் எமது அடிப்படை நிலையே போய் விடும் என்பதைப் பல தடவைகள் கூறியும் வந்துள்ளார்.

நிலைமை கட்டுமீறிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை தமது அந்திமகாலத்தில் கூறி அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர் நண்பர் தர்மராஜா அவர்கள். பலமுள்ள கொள்கைப்பற்றுள்ள தமிழ்த் தலைவர்கள் சேர வேண்டியதன் அவசியத்தை அவர் அறிந்திருந்த காரணத்தால் எனக்கு சார்பாக தம்பி கஜனிடம் சிபார்சு செய்திருப்பார் என்று கூறுகின்றேன். கொள்கைப் பற்றுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நண்பர் தர்மராஜா அறிந்திருந்ததால் கஜனிடமும், கஜனின் தாயாரிடமும், அவர் கட்சி அங்கத்தவர்களிடமும் பேசி நிலைமையை புரிய வைக்கக் கூடிய ஒருவராகவே அவர் இருந்தார்.

கீரியும் பாம்புமாக இருந்த தமிழ்த் தலைவர்கள் முன்னர் தமிழ் மக்கள் நலம் கருதி ஒன்று சேர்த்ததை அவர் மறந்திருக்க வில்லை.

அவரின் மறைவு என்னைப் பலம் இழக்கச் செய்து விட்டது என்று கூறலாம். (ம-3)

## வெளிநாட்டு...

பெறும் ஆசிய நடவடிக்கைகள் மற்றும் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடர்பான 5ஆவது மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

•சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், துருக்கி ஜனாதிபதி டையிப் ஏர்டோகன் மற்றும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரௌஹானி ஆகியோரின் பங்கேற்புடன் நேற்றைய மாநாடு ஆரம்பமானது.

ஆசிய பிராந்தியத்தில் காணப்படும் பயங்கரவாதத்தை ஒழித்து, சமாதானம் மற்றும் பொருளாதார சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்து ஆசிய நாடுகளுக்கும் இடையில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் காணப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பல பிரச்சினை...

தங்காலை கோல்டன் இல்லத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கத்தின் இடைப்பட்ட பதவிக் காலத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் மக்களை பாதிக்காத வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டின் காரணமாக ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சரவையினை கூட்டவில்லை. இதற்கு 19ஆவது அரசியலமைப்பின் ஊடாகவே வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எம்மை பழிவாங்கும் நோக்கத்தில் தூரநோக்கற்ற அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஏற்படும் எதிர்விளைவுகள் குறித்து ஆராயாமல் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு இத்திருத்தமே பிரதான காரணம். நிறைவேற்று துறைக்கும், சட்டவாக்கதுறைக்கும் இன்று அதிகாரம் தொடர்பான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

தேர்தலின் ஊடாகவே ஆட்சி மாற்றம் ஏற்படும். இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து காலம் தாழ்த்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலே இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருப்பது பாரிய ஜனநாயக உரிமை மீறலாகும். இடம்பெறவுள்ள அனைத்துத் தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## மைத்திரி - ரணி...

ந்து அறிய முடிகின்றது. இந்த சமரச முயற்சியின் ஒரு கட்டமாகவே அமைச்சரவை சர்ச்சை தொடர்பில் சஜித் ஜனாதிபதி மைத்திரியை சந்தித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வரழைக்கப்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார். அதே வேளை தனது கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வரை அமைச்சரவையைக் கூட்டப் போவதில்லை என தெரிவித்தார்.

அதற்கிணங்க கடந்த செவ்வாய்கிழமை அமைச்சரவை கூட்டப்படவில்லை. அமைச்சரவை கூட்டப்படாமைக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் அதிருப்தி வெளியிடப்பட்ட நிலையிலேயே அமைச்சர் சஜித் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசி பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 42 மற்றும் 43 ஆம் அத்தியாயத்தின் கீழ் ஜனாதிபதிக்கு உள்ள பொறுப்பின் அடிப்படையில் ஜனாதிபதி அமைச்சரவையைக் கூட்ட வேண்டும் என்று அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க தீர்மானித்திருந்தது. அரசியலமைப்பின் 42 ஆம் அத்தியாயத்தில் நிறைவேற்றதிகாரம் மற்றும் அமைச்சரவை தொடர்பில் ஜனாதிபதிக்கு உள்ள பொறுப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்கேற்ப அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்திருந்தது. அரசியலமைப்பிற்கிணங்க தற்போது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற சட்ட ரீதியான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூற வேண்டும். நிறைவேற்றதிகாரத்தின் கீழ் அமைச்சரவையின் பொறுப்பு தொடர்பான 43 (1) அத்தியாயத்தில் இந்த விடயம் உள்ளடங்குகின்றது.

அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு அமைச்சரவைக்குரியது. அதேபோன்று பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய கடமையும் அமைச்சரவைக்கு உண்டு. ஜனாதிபதி அமைச்சரவையின் உறுப்பினர், அமைச்சரவையின் பிரதானி என்று அரசியலமைப்பின் 42 (2) ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பிற்கிணங்க அமைச்சரவையைக் கூட்டும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு என்பதை அமைச்சரவை ஜனாதிபதிக்கு வலியுறுத்தவிருந்த நிலையில், மீண்டும் அமைச்சரவையைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததால் அதற்கான அவசியம் இல்லாமல் போனதாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கறுப்பு ஆடுகள்...

ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிலரை அமைச்சர் கருணா நாயக்க கடுமையாக விமர்சித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி சம்பந்தமாக கடந்த காலங்களில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எனக்கு எதிராக மட்டும் சுமத்தப்படவில்லை. எனது மனைவி, மகள் ஆகியோர் மீதும் அநீதியான முறையில் குற்றம் சுமத்தப்பட்டது.

இதற்கு எமது கட்சியில் உள்ளவர்களே அதிகளவில் பங்களிப்பு வழங்கினர். எமது கட்சியில் கறுப்பு ஆடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு இது சிறந்த பாடம்.

கட்சியை சுத்தப்படுத்த ஆரம்பிக்கப்பட்ட விடயமாக எனக்கு இது தெரிகிறது. திறமையானவர்களை ஒதுக்கி விட்டு திறமையற்றவர்களை அடிப்படையாக கொண்டு செயற்படக் கூடாது எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனினும் அதில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்ட ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை. அதற்கான சாட்சியங்கள் இல்லாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ம-3)

## இந்திய முப்படை...

னப்படையினர் இவ்வாறு இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள். தங்கியிருக்கும் காலப்பகுதியில், தென் மாகாணம் மற்றும் மலையக பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

இந்தியா மற்றும் இலங்கை இடையிலான இராணுவ ஒத்துழைப்பு மற்றும் சமூக உறவை பறைசாற்றுவதற்காக இந்தியாவின் முப்படையினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அதேவேளை இலங்கை முப்படையினர் 162 பேர் நேற்று இந்தியாவை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளனர். (ம-3)

සෙවන
திகதி 2019/06/15
சீட்டிழுப்பு இலக்கம் 192
X 09 10 16 56

கொவிசெத
திகதி 2019.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 2149
J 01 18 30 76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15-06-2019
சீட்டிழுப்பு இலக்கம் 948
Q 1 6 0 9 9 8

சுபிரி வாசனா
திகதி 2019/06/15
சீட்டிழுப்பு இலக்கம் 1434
19 35 51 52 69 45 26

## உடனடி கார் விற்பனை

மிகவும் நன்றாக பராமரிக்கப்பட்டு வரும் SUZUKI Dizire கார் KR 58XX விற்பனைக் குண்டு. KM 85000. 100% Accident tree. A/C Fully Automatic, A/C, Power Mirror & Shutters, தனிப்பாவனை Manual Gear, Proffessional use, Good in Mileage (First Owner) (9163)

Contact
071 688 3940/077 554 4622



## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்) (9127)



## வீடு விற்பனைக்கு

பிரம்படி லேன், கொக்குவிலில் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
076 702 3565 (9174)



## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை



## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240 (C-6532)
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS



## PERSONAL CLASSES
(பிரத்தியேக வகுப்புக்கள்)

தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனியாகவும் குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:-
076 157 0107 (9157)



## காணி விலைக்கு தேவை

புன்னாலைக்கட்டுவன் தெற்கிற்கும் வசாவிளான் சந்திக்கும் இடையில் காணி விலைக்குத் தேவை.
தொடர்பு:
077 683 4296
076 714 5107


## மூதாட்டியை...

மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள், அவரை வாள் முனையில் அச்சுறுத்தி நகைகள், பணம் மற்றும் அலைபேசியைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றது.

மூதாட்டியின் பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்கின்றனர். ஓய்வுபெற்ற அரச ஊழியரான மூதாட்டி தனிமையில் வாழ்ந்து வருகிறார்.

அவரது வீட்டுக்குள் கதவுகளை உடைத்தும், கூரையை பிரித்தும் இரு வழிகளால் கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

கும்பல், கூரிய ஆயுதங்களைக் காட்டி மூதாட்டியை அச்சுறுத்தியுள்ளது. அத்துடன், அவரது வாய்க்குள் துணியை அடைந்து கொடுமைப்படுத்தியுள்ளது.

அவரது வீட்டைச் சல்லடை போட்டுத் தேடியுள்ள கொள்ளைக் கும்பல் பணம், நகை மற்றும் அலைபேசியைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை மூதாட்டியைப் பார்க்கச் சென்ற ஒருவர், அங்கு கொள்ளை நடந்துள்ளதை அறிந்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் கூடி வாய்க்குள் துணி அடையப்பட்ட நிலையில் மூச்சுவிட சிரமப்பட்ட மூதாட்டியை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-3)


## தையல் மெசின் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 யுக்சி தையல் மெசின் மற்றும் ஓலக்கு மெசின் 1 உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 2429 (9162)



## வேலைவாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றுக்கு யாழ் - கொழும்பு கிளைகளில் வெற்றிடம் உண்டு.

**கிளை உதவியாளர் - யாழ்ப்பாணம் (ஆண்)**
1. கணினி அறிவு
2. A/L சித்தி
3. நகர எல்லைக்குள் வசிப்பவர்
4. வயது எல்லை (18-30) வரை

**கிளை உதவியாளர் - கொழும்பு (ஆண்)**
1. பொதி செய்யும் திறமை.
2. தங்குமிடம், உணவு வசதி செய்து தரப்படும்.
3. வயது எல்லை (18-30) வரை

தொடர்புகளுக்கு
077 069 6816, 075 725 4206 (C-6697)



## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள 12 பரப்பு தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 683 4296
076 714 5107



## Personal Classes/Web Development

Programing C, Java, Ict, Ms office, Mathematics, Statistics, Physics
Wanted: Helper for angular7/ ASP. Net/Laravel
Phone : 070 199 1880
Address : 255 A, Kandy Road, Jaffna.



பலாலி றோட், புன்னாலைக்கட்டுவன் வடக்கில் 2 பரப்புடன் கூடிய புதிய வீடு **விற்பனைக்கு அல்லது வாடகைக்கும்** கையளிக்கப்படும்.
தொடர்பு:
077 683 4296
076 714 5107



## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரப் பகுதியில் A9 றோட்டுக்கு அண்மையில் அமைதியான சூழலில் சகல வசதிகளுடனும் ஒரு தொழில் நிலையம் அமைப்பதற்கான இடவசதி கொண்டதும் சுற்றுமதிலுடனும் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு. நல்ல தண்ணீர் கிணறு 10 காய்க்கும் தென்னை மரங்களும் உண்டு.
விலைபேசித் தீர்மானிக்கப்படும்
தரகர் தேவையில்லை.
தொடர்பு:
021 222 2429
078 838 0225



## HOME VISITING TUITION CLASSES

Conducted by: Well Experienced Professional Teacher
Mediums : English/Tamil
Subject : English/History/Sinhala, Geography, Grade 1-5 All the Subject
Grade : Nursery to Advanced Level English of for All SPOKEN/WRITTEN/READING/LISTENING
Syllabus : Local and London
Contact us Soon To Reserve Your Class (C-6693)
Call: 076 090 9261 Jaffna Let Your Children Have best Education



## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் **பொதிகள் சேவை.**
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள் | இல.1. பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576 (C-6615)



## Laptop திருத்தி தரப்படும்
(Repair Specialists)

Mother Board repair, LED, LCD Replacement, Hoverheating, ECT I phone, Ipad any model திருத்தி தரப்படும். Laptop battery, Laptop Keyboard Singapore இல் இருந்து தருவித்து தரப்படும்.
Any brand Laptop திருத்தி தரப்படும்:
Apple Mac, Mac Air, Mac pro, HP, Del, Lenova, Acer
தொடர்பிலக்கம்: 077 238 9584, 075 905 0880
Collecting Centre : The School Shop, 388, Main Street, Bastian Junction, Jaffna.
contact No: 075 905 0880 (9129)


## ஊரடங்கு அமுல்...

வெளியேறினார்.

அவரிடம் சுமார் 8 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு மறுநாள் 22ஆம் திகதி, இரவு 10 மணியளவில், ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது பாசிக் குடாவில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இரண்டு அரேபியர்களை சர்ச்சைக்குரிய வகையில் சந்தித்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாகவே ஹிஸ்புல்லாவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. (ம-3)


## வேலைவாய்ப்பு

எமது EDM Lanka நிறுவனமானது வட மாகாணத்தில் புதிய 15 இற்கு மேற்பட்ட கிளைகளை ஆரம்பிக்க இருப்பதனால் அப் புதிய கிளைகளுக்கு 50க்கு மேற்பட்ட வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
பதவி வெற்றிடங்கள்: அலுவலகர், மேற்பார்வையாளர், களஞ்சிய பாதுகாவலர், உதவி முகாமையாளர், முகாமையாளர்
குறிப்பு: யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பள அளவுத்திட்டம்: நேர்முகத்தேர்வின் ஊடாக சம்பளம் தீர்மானிக்கப்படும், தகுதி உடையவர்கள் தமது முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை 077 298 6763 என்னும் இலக்கத்துக்கு SMS செய்யவும். (9112)
தொடர்பு: 077 298 6763, 076 523 3519



## மகாராஜா வெளிநாட்டு பொதிகள் சேவை

GTV Express SRI LANKA | DHL | Parcel.lk
11 KG க்கு மேல் 1KG ற்கான கட்டணம்
லண்டன் 650/- | ஜெர்மனி 700/-
கனடா, சுவிட்சர்லாந்து 950/-
நோர்வே, இத்தாலி, ஆஸ்திரியா, டென்மார்க், அவுஸ்திரேலியா, சுவீடன், பின்லாந்து, நெதர்லாந்து, ஸ்பெயின், பெல்ஜியம் 900/-
எல்லா நாடுகளுக்கும் மிகக்குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்
DOOR TO DOOR DELIVERY SERVICE
20KG க்கு மேல் மேலும் விசேட விலைக்கழிவு உண்டு

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்<br>021 4925024 / 021 2224338 | கிளிநொச்சி<br>இல. A9 வீதி,கிளிநொச்சி (கந்தசாமி கோவில் முன்பாக)<br>021 4930330 |
| நெல்லியடி<br>இல. 81A பருத்தித்துறை வீதி,நெல்லியடி<br>021 4930099 | வவுனியா<br>இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா<br>024 4930200 (C-6614) |



## Jaffna College Institute of Agriculture
### தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தோர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற்தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறிகள்)
1. தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 (4 மாத காலப் பயிற்சிநெறி)
   தகைமை க.பொ.த, சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16 - 24 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப் பயிற்சி நெறி)
   தகைமை NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். பயிற்சிக் கட்டணம் இலவசம்.

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 27.06.2019 காலை 9.00 எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராமசேவையாளரின் நற்சான்றுப் பத்திரம், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் பதிவுக் கட்டணம் ரூபா.1000.00 உடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்கள்.
பயிற்சிநெறி இணைப்பாளர்,
மருதனார்மடம், சுன்னாகம் (9140)

தொலைபேசி இலக்கம்
021 224 1420
E.Mail:- Jcinstituteofagriculture


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 221

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 16.06.2019 தொலைபேசி : 021 222 3378

## இந்து - பௌத்தம் ஒன்று சேருமா





## 8 நிமிட சந்திப்பு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

கொழும்புக்கு வந்த இந்தியப் பிரதமர் மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எட்டு நிமிடங்கள் சந்தித்தவராம்.

விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

எட்டு நிமிடம் மெத்த என்று பிரதமர் மோடி நினைத்திருப்பார் போல. மூப்பர் மெல்லக் கூற ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது.

**கங்காணியார்:** அது சரி மூன்றாவது தடவையும் நீங்கள் தான் வெல்லுவீர்கள் என்று மோடியைப் பார்த்து சம்பந்தர் கூறினவரல்லோ.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. அடுத்த முறை காங்கிரஸ் கட்சி வென்றால் என்ன செய்யிறது.

**மூப்பர்:** எங்கட ஆட்களுக்கு ஒரு குட்டிப்புளுகு ஏற்படுவது வழக்கம் தானே. அதுதான் மோடிக்கும் ஐஸ் வைக்கலாமெண்டு நினைத்து மூன்றாவது தடவையும் நீங்கள் தான் வெல்லுவீர்கள் என்று சம்பந்தர் ஐயா சொன்னவராக்கும்.

**பண்டிதர்:** அப்ப இதை தி.மு.க. தலைவர் ஸ்ராலின் அறிந்தால் கூட்டமைப்போட பகைக்கப் போறாரெல்லோ.

**கங்காணியார்:** ஏன் பண்டிதர் அப்படிச் சொல்லுறியள்.

**பண்டிதர்:** தி.மு.க. காங்கிரஸோட கூட்டுச் சேர்ந்தல்லோ தேர்தலில நிண்டது.

ராகுல்காந்தி பிரதமராகுவதை யாராலும் தடுக்க முடியாது எண்டு ஸ்ராலின் கூறினவர். நிலைமை இப்படியாக இருக்கக்க, அடுத்த முறையும் நீங்கள் தான் வெல்லுவீங்கள் எண்டு சம்பந்தர் ஐயா இப்பவே மோடிக்குக் கூறினால் அது ஸ்ராலினைக் கோபப்படுத்தும் தானே!

**மூப்பர்:** என்ன கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்படிச் சொன்னவரோ?

**விதானையார்:** ஏன் மூப்பர் நான் என்ன பொய் சொல்லுறனோ. ஊடகங்களில பார்த்ததைத் தான் சொல்லுறன்.

**மூப்பர்:** விதானையார் நீங்கள் பொய் சொல்லுறதா நான் நினைக்கல்ல, தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்த காலத்தில, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்ர பேரவை எண்டும் கஜேந்திர குமாரின் கட்சி முகவராகத் தான் தமிழ் மக்கள் பேரவை இயங்குகிறது எண்டும் தேர்தலில தோற்றுப் போனவர்களின் கூடாரம் தான் பேரவை எண்டும் சில அரசியல் கட்சிகளும் சில ஊடகங்களும் கூறியிருந்தவியள்.

இப்ப விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சி முகவராக தமிழ் மக்கள் பேரவை இயங்குகிறது எண்டு கஜேந்திரகுமார் சொன்னவர் எண்டது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்குது.

**வாத்தியார்:** நல்லது நல்லது. அவர்களும் இவர்களும் பேரவையைக் குறை கூறினால் பேரவை மக்கள் இயக்கம் என்பது உறுதியாகிறதல்லோ.

**சாத்திரியார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு தமிழ்த் தேசியப் பேரவை என்று தானே தங்கட கட்சிக்குப் பெயர் சூட்டினவியள்.

அந்தநேரம் பேரவை என்ற பெயரை கஜேந்திரகுமார் சூட்டினது சரி தானா? என்று பேரவையில் இடம்பெறாத அரசியல் கட்சிகள் கேள்வி கேட்டுக் கடும் விமர்சனம் செய்தினம்.

அப்பவும் தமிழ் மக்கள் பேரவை அமைதியாக இருந்து தன்ர பணியைச் செய்தது.


இப்ப தமிழ் மக்கள் பேரவை விக்னேஸ்வரன் ஐயாவின் கட்சிக்கு முகவராக இயங்குகிறது எண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலமே குற்றஞ்சாட்டுகிறார்.

பரவாயில்லை மத்தளம் போல பேரவை இரண்டு பக்கமும் அடிவாங்கட்டும்.

இரண்டு பக்கமும் அடி விழுந்தால் தானே நாதமும் கீதமும் ஓசையும் இசையும் வெளிவரும்.

**சிறாப்பர்:** நான் ஒரு பேப்பரில பார்த்தன் விக்னேஸ்வரன் ஐயா தங்கட கட்சியோட இணைவதற்கு தங்களின்ர ஈமெயில் மூலமாகக் கோரிக்கை விடுத்தவர் எண்டும் ஆனால் நாங்கள் ஒருபோதும் அவரோட இணைய மாட்டம் எண்டும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினவரெண்டு.

**கங்காணியார்:** சில ஊடகங்களும் ஊ... ஆ... எண்டு குழப்பத்தை ஏற்படுத்தக் கடும் பாடுபடுகினம்.



## தமிழ் மக்கள் பேரவை மத்தளம் போல் அடிவாங்குது

**கங்காணியார்:** பண்டிதர் சொல்லுறது உண்மை தான். கூட்டமைப்பு எது கதைத்தாலும் அது தமிழ் மக்களுக்கு வில்லங்கமாகத்தான் இருக்குது. எதையும் சிந்தித்துக் கதைக்காமல் உணர்ச்சி வசப்பட்டுக் கதைத்தால் கதை கந்தலாகத்தான் போகும்.

**விதானையார்:** அது சரி, தமிழ் மக்கள் பேரவை இப்ப விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சி முகவராகச் செயற்படுகிறது எண்டு கஜேந்திரகுமார் சொன்னவரல்லோ.

**பண்டிதர்:** இல்லை இல்லை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறின ஒரு செவ்வியைத்தான் பேப்பர்களில போட்டிருக்கினம்.

**விதானையார்:** அப்ப பிறகொரு செய்தி வந்திருந்தது. நாங்கள் விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியோட இணைவதற்கு விரும்புகிறம். ஆனால் விக்னேஸ்வரன் ஐயா அதற்கு உடன்படுகிறார் இல்லை. அவ்வாறு அவர் உடன்படாததற்குக் காரணம் எங்கள் இணைவை இந்தியா விரும்பவில்லை என்று கஜேந்திரகுமார் கூறியதாக...

**வாத்தியார்:** நீங்கள் சொல்லுற இரண்டு தகவல்களும் உண்மை தான்.

நாங்கள் விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியோட இணைய மாட்டம் எண்டு கஜேந்திரகுமார் கூறியது அவரது கட்சி க்கு ஆரோக்கியமானதல்ல.

**சாத்திரியார்:** அப்ப மருந்தை மாறிக் கொடுத்திட்டார் போல.

**வாத்தியார்:** இந்தா சாத்திரியாருக்கு வாகடமும் தெரியும்தானே. முதல் கொடுத்த மருந்து பிழைத்து விட்டது என்பதால தான், அதிரடியாக விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியோட நாங்கள் சேரத் தயார் எண்ட கூறணத்தை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொடுத்திருக்கிறார் போல.


**பண்டிதர்:** என்ன இருந்தாலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தில தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கினம். அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் கஜேந்திரகுமாரை நம்புகினம்.

இந்த நம்பிக்கை கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வரன் ஐயா தரப்பும் ஒன்றுசேரும் போது தான் சாத்திய மாகும் என்பதையும் தமிழ் மக்கள் மிகத் துல்லியமாகக் கூறுகினம். இனி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுக்கிற முடிவைப் பொறுத்துத்தான் எல்லாம்.

**சாத்திரியார்:** தமிழர் தலைவிதி என்னமாதிரி இருக்குதோ ஆருக்குத் தெரியும். நாங்கள் முயற்சி செய்யலாம் அவ்வளவு தான்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



# இனப்பிரச்சினைக்கான தீர்வை தேரர்கள் முன்வைத்தால் இந்து-பௌத்த ஒற்றுமை சாத்தியமாகும்

இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் சாத்தியப்படாத நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒரு புதிய பாதைக்கு வழிவகுத்துள்ளதெனலாம்.

இலங்கையில் நீண்டு நீடித்து வருகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற விடயம் பல சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்டதாயினும் அவற்றின் முடிவு தோல்வியாகவே இருந்துள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தீர்வு முயற்சிகள் தோல்வியாக முடிந்து போனதன் பின்னணியில், பௌத்த பிக்குகளின் எதிர்ப்பும் சிங்களப் பேரினவாதிகளின் குழப்பங்களும் இருந்துள்ளதை அனுபவ ரீதியாகக் கண்டறிய முடியும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களே தமக்கு எதிரானவர்கள் என்ற சிந்தனையில் செயற்பட்டுவரும் சிங்களப் பேரினவாதிகள் விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்பு இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தேவையில்லை என்பது போலவும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அது எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வாக அமையும் என்றவாறும் நியாயம் கூறி வந்தது. இந் நிலையில், இஸ்லாமியத் தீவிரவாதம் இலங்கையில் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அனைவரையும் அதிர வைத்துள்ளது.

தமிழ் இனமே தமக்கு எதிரானது என்ற நினைப்போடும் தமிழினத்தின் மண்மீட்புப் போராட்டத்தை மழுங்கடித்து விட்டோம் என்ற மமதையிலும் இருந்த சிங்களப் பேரினவாதத்திற்கு இஸ்லாமியத் தீவிரவாதம் நடத்திய கொடூரத் தாக்குதல் சிங்களப் பேரினவாதத்தின் தவறான நினைப்புகளுக்கும் தப்பான தீர்மானங்களுக்கும் முடிவு கட்டுவதாக அமைந்தது.

இதனடிப்படையில் தான் இலங்கையில் பௌத்தமும் இந்து சமயமும் இணைய வேண்டுமென்ற கருத்து பௌத்த மதபீடங்களிடம் எழுந்துள்ளன. இந்தப் புதிய சிந்தனையின் வெளிப்பாட்டை அத்துரலிய ரத்னதேரரின் வடக்கிற்கான விஜயம் சுட்டி நிற்கின்றது.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அத்துரலிய ரத்னதேரர் பௌத்த-இந்துமத ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். அவரின் கருத்து வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன் வைத்து அதனை நடைமுறைப்படுத்துகின்ற பணியை அத்துரலிய ரத்னதேரர் போன்றவர்கள் செய்தாகவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் இதுகாறும் ஆட்சியாளர்களினால் மட்டுமே நினைக்கப்பட்டது.

அவ்வாறு ஆட்சியாளர்களால் நினைக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியப்படாமல் போயிற்று.

இந்நிலையில்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தை பௌத்த பீடங்கள் முன்னெடுத்து தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க முன்வர வேண்டும்.

அவ்வாறானதொரு சாத்தியமான மாற்று ஏற்பாட்டை முன்னெடுக்கும் போது; அத்துரலிய ரத்னதேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் நினைக்கின்ற தான பௌத்த- இந்துமத ஒற்றுமை என்பது சாத்தியமாகும்.

இதை நாம் கூறும்போது பௌத்தத்துடன் இந்து மதம் இணையுமா? என்ற கேள்வி ஏற்படலாம். உண்மையில் சிங்களத்தைத் தவிர்த்த பௌத்தம் என்பது இந்து சமயத்தின் கொள்கை, கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். பௌத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்த பிரான் ஓர் இந்து என்பது தெரிந்தவிடயம்.

தவிர, பௌத்த சிந்தனைகள், கொள்கைகள் இந்துமதக் கொள்கையுடன் ஒத்திசைந்து செல்லக் கூடியன.

இங்கு பௌத்தமும் இந்து சமயமும் இணைவது ஏனைய மதங்களையும் வாழ வைக்குமேயன்றி பிற மதங்களுக்கு எந்த வகையிலும் ஊறாக அமையாது என்பதே உண்மை.

எனவே, இந்து-பௌத்த ஒற்றுமை பற்றிச் சிந்திக்கின்ற பௌத்த தேரர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குத் தயாராக வேண்டும்.

இதனை வலியுறுத்தும் பொருட்டு இந்துமத பீடங்கள் ஒன்றுபட்டு பௌத்த பீடங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமாகும்.

இந்துத்துவக் கொள்கையுடன் கூடிய பாரதிய ஜனதாக்கட்சி இந்தியாவில் அரசாட்சி செய்கின்ற இந்தச் சூழ்நிலையானது, இந்து- பௌத்த மதங்களின் ஒற்றுமைக்கும் ஒன்றுபடுதலுக்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதால், அரசியல் என்ற எல்லை கடந்து இந்து-பௌத்த மத பீடங்கள் தமக்குள் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு சரியான இணக்கப்பாட்டிற்கு வருவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய பாதையாக இருக்கும்.


திருநீலகண்டன்

"என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்"

## சிவயோக சுவாமிகள் வாக்கு

காற்று நிரப்பப்பட்ட பந்தை தண்ணீருக்குள் அழுத்தினால் நீங்கள் எவ்வளவு வலுவாக அழுத்துகிறீர்களோ அதைவிட வேகமாக அது வெளியேவரும். தன்னம்பிக்கை நிறைந்த மனமும் அப்படித்தான். பிரச்சினைகளால் அழுத்தப்பட்டாலும் அதிலிருந்து வேகமாக விடுபட்டு முன்பைவிட அதிக வலிமையுடன் செயற்படும். ஆனால் பந்தில் ஓர் ஓட்டை இருந்தால் தண்ணீர் அதனுள் நிறைந்து உள்ளே மூழ்கச் செய்துவிடும். அதேபோல் மனமும் தன்னம்பிக்கையில் சிறிது குறைந்தாலும் எதிர்மறை எண்ணங்கள் நுழைந்து அதன் ஆற்றலை குறைத்துவிடும். மனதுக்குள் வேண்டாத விடயங்கள் சேர்ந்துவிடாமல் தடுக்கவும் வேண்டும் போது திறக்கவும் கதவா இருக்கிறது. ஆனால் இது மிகவும் எளிதானது. ஒரு சிறு புனைகதை:- ஒரு பெரிய பூங்காவின் நடுவே அழகான குளம். எங்கெங்கோ இருந்தெல்லாம் விதம் விதமான பறவைகள் வரும். ஒரு சமயம் அங்கே வந்த அன்னப்பறவை முட்டை ஒன்றை குளக்கரையில் இட்டுச் சென்றது. அதை அங்கு வந்த வாத்து ஒன்று தன்னுடைய முட்டைகளுடன் அடைகாத்து குஞ்சுகளாக்கியது.

குட்டி வாத்துக்களைவிட அன்னப்பறவை மிகவும் கம்பீரமாக இருந்ததையும் நடப்பது, இரைதேடுவது எல்லாவற்றிலும் மாறுபட்டு இருந்தது. காலம் நகர அன்னப்பறவை வாத்துக்கள் போல் சாய்ந்து நடக்கவும் குரல் எழுப்பவும் முடியாமல் கவலையடைந்தது. வாத்துக்களோ தங்களைப்போல் இல்லாத அன்னப்பறவைக்கு சிரமங்கள் ஏற்படுத்தி தனிமைப்படுத்தின. அவ்வேளையில் அங்குவந்த அன்னப்பறவைக் கூட்டம் ஒன்றுசேர்ந்து பொலிவிழந்து இருந்த அன்னப்



பறவையைத் தட்டி எழுப்பி குளத்தின் அருகே இழுத்துச் சென்றன.

நீரில் பிரதிபலித்த அதன் உருவத்தை பார்க்க வைத்தன. தன் உருவமும் அன்னப்பறவையின் உருவமும் ஒன்றுபட்டிருந்ததைப் பார்த்த குட்டிப் பறவை நான் சாதாரண வாத்து அல்ல. அவற்றை விட மேலான அன்னம் என்பதை உணர்ந்து கம்பீரமாக நடந்து சிங்காரமாக சிலிர்த்து பட்டு வெண்மை இறக்கையை விரித்து பூப்போலப்பறந்தது.

இக்கதை மூலம் எமக்கு கிடைக்கும் பயன் நீங்கள் யார்? உங்களால் என்ன செய்ய முடியும்? உங்கள் திறமைகள் என்ன? உங்கள் பலம், தன்னம்பிக்கை அத்தனையையும் நீங்கள் உணருங்கள். உன்னை நீ அறிந்தாலே போதும் உலகம் உன் வசமாகும்.

சாதாரண யோகநாதனுக்கு ஏற்பட்ட ஆன்மீகப்பசி என்று நல்லூரின் தேரடியில் செல்லப்ப சுவாமிகளைக் கண்டபோது அவரது மன நிலை எப்படியானதென கூறமுடியாமல் குரு வணக்கமாக பாடிக் குவித்த நற்சிந்தனைப் பாடல்கள் நன்கு விளக்குகின்றன.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசி- கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்"

தேரடியில் யோகநாதனின் செவியில் ஒலித்தவை ஆரடாநீ? தேரடாவுன் தீரடா பற்று எம்மை அறிவதற்கு அகத்துள்ளே தேடவேண்டும். அதன் முன் பற்றுக்கள் பந்தபாசங்களை நிக்கவேண்டும். மலைத்து நின்ற சீடனை உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப் போகிறேன் வா என அழைத்து அன்புடன் அருள் கலந்த அறிவுரைகளை அகம் மலர வழங்கினார்.

-சிவனடியான்-






அ.மிருசன், தரம் 9ஏ, யா/நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம், SOS சிறுவர் கிராமம்.

## கல்வி

கல்வி ஒரு பரிசு என்றால் பெற்றுக் கொள்
கல்வி ஒரு போட்டி என்றால் வெற்றி பெறு
கல்வி ஒரு நாடகம் என்றால் நடித்துப்பார்
கல்வி ஒரு போராட்டம் என்றால் போராடு
கல்வி ஒரு கதை என்றால் படித்துப்பார்
கல்வி ஒரு சுமை என்றால் தாங்கிக்கொள்
கல்வி ஒரு இரகசியம் என்றால் தெரிந்து கொள்
அது போல் கல்வி ஒரு இலட்சியம் என்றால்
வெற்றி கொண்டு முன்னேறு

கனிஸ்ரா கிறிஸ்ரிகலிஸ்ரஸ்,
தரம் 7D, கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.

### அறிந்து கொள்ளுங்கள்...

- மனிதனுக்கு அடுத்த படியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்ஸி குரங்குதான்.
- காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.
- ஒருசாதாரணபசுஅதன் வாழ்நாளில் 2 இலட்சம் குவளை பால் கொடுக்கும்.

## ஆராய்ந்து பார்க்காமல் யாருக்கும் உதவக்கூடாது


சுகபோக வசதிகளில் நாட்டமுடைய ஒரு மன்னன் நிறையச் செலவு செய்து தூய்மையும் மென்மையும் நிறைந்த அழகான பஞ்சணை ஒன்று தயார் செய்தான். பஞ்சணை தயார் செய்யப்பட்ட போது ஒரு பெண் சீலைப்பேன் அதில் எப்படியோ ஒட்டிக்கொண்டு பஞ்சணையோடு சேர்ந்து அரண்மனைப் படுக்கையறைக்கு வந்து சேர்ந்துவிட்டது.

சீலைப்பேன் எளிதாக மற்றவர்கள் கண்களில் படுவதில்லையாதலால் அன்றாடம் பணியாளர்கள் பஞ்சணையை தட்டிச் சுத்தம் செய்யும் போதுகூட அவர்கள் கண்களில் படாமல் மறைந்து நிரந்தரமாகப் பஞ்சணையிலேயே தங்கிவிட்டது. மன்னன் அயர்ந்து உறங்கும் சமயமெல்லாம் சீலைப்பேன் தன் மறைவிடத்தைவிட்டு வெளிப்பட்டு வந்து அவன் உடலில் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை சுவைத்து உறிஞ்சிக் குடிக்கும்.

நல்ல உணவு உண்டு கொழு கொழுவென இருக்கும். மன்னனின் உடல் இரத்தத்தைத் தன் விருப்பம் போல உண்ணும் வாய்ப்பு அடிக்கடி கிட்டியதால் பெண் சீலைப் பேன் நன்கு கொழுத்து தளதளவென்ற உடலைப் பெற்று அழகாகக் காட்சியளித்தது. ஒரு நாள் தற்செயலாக ஒரு மூட்டைப்பூச்சி அந்தப் பஞ்சணையில் வந்து சேர்ந்தது. பஞ்சணையின் அழகும் மேன்மையும் அதிலிருந்து வீசும் நறுமணமும் மூட்டைப்பூச்சியின் மனத்திலே உல்லாச உவகை உணர்வை ஊட்டியது.

ஆகா, அற்புதமான இடத்துக்கு வந்துவிட்டேன். சகல சுக போகங்களுடன் வாழும் செழுமையான உடல் வாகுபடைத்த மன்னனின் இரத்தத்தைக் குடித்து மகிழக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. இனி நான் இந்த இடத்திலேயே தங்கி சொர்க்க போகத்தை அனுபவிப்பேன் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் தனக்குத்தானே கூறிக் கொண்டு உற்சாகத்துடன் பஞ்சணையில் இங்குமங்குமாக ஓடித் திரிந்தது.

யாரோ ஒரு புது ஆள் பஞ்சணையில் உலா வருவதைக் கண்டு சீலைப்பேன் திகைப்புடன், அச்சமும் கொண்டது. உடனே மூட்டைப்பூச்சியைப் பார்த்து, ஐயா, வரக்கூடாத இடத்திற்கு வந்திருக்கும் நீர் யார்? இங்கே எனக்கு மட்டும் தான் இருக்க உரிமையுண்டு. நான் மிகவும் சிறிய ஒரு ஜீவன். என்னால் மன்னருக்குப் பெரிய தொந்தரவு ஏதும் நிகழ வழியில்லை. நீரோ பெரிய ஜீவன். சட்டென பிறர் கண்களில் நீர் பட்டுவிடக்கூடும். அப்போது நம் இருவருக்குமே ஆபத்து. ஆதலால் உடனடியாக இந்த இடத்தைவிட்டுப் போய்விடும் என்று கூறிற்று.








நீங்கள் விக்னேஸ்வரனின் அபிமானி என்கிறாரே எனது நண்பர் உண்மையோ

கடவுள் இருக்கிறாரா இல்லையா?

தனது நாட்டு கிரிக்கெட் அணிக்கு உதவி செய்ய மறுத்துவிட்டாரே மகேல ஜெயவர்த்தன?

**நேதாஜி — வதிரி**

**நீங்கள் விக்னேஸ்வரனின் அபிமானி என்கிறாரே எனது நண்பர் உண்மையோ?**

வருடத்திற்கு வருடம் இந்தா வருகிறது தீர்வு உந்தா வருகிறது தீர்வு என்பவர்களையோ, எனது உயிர் போனாலும் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றியே தீருவேன் என்று சொல்லி மறந்தவர்களையோ, தீர்வு கிடைக்காவிட்டால் போர் வெடிக்கும் என்று அறிக்கை விடுபவர்களையோ, யார் எக்கேடு கெட்டாலும் என்ன எடுத்ததுக்கு எல்லாம் கைதூக்கி கோடியில் புரள்வோம் என்றவர்களையோ ஆதரிக்கவில்லையே நான்.

தமிழ் மக்களுக்காக அவர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கத் துடிக்கும் ஒரு தலைவனை ஆதரிக்கின்றேன் அதில் எனக்குப் பயமேதும் இல்லை அவ்வளவுதான்.

**தனுஸ் — உடுவில்**

**கல்வியும் ஒழுக்கமும் இரண்டு கண்கள் என்பது சரியா?**

என்கிறார்கள். சில இடத்தில் முன்னது இருக்கும் பின்னது இருக்காது. சில இடத்தில் பின்னது இருக்கும் முன்னது இருக்காது.

இன்னும் சில இடத்தில் இரண்டுமே இருக்காது. ஆனாலும் ஆள் இருக்கும். இவை எல்லாவற்றையும் விட பணம் என்ற கடதாசியின் மதிப்பு அதிகம் தம்பி.

**ஜுபா — கரவெட்டி**

**முள்ளிவாய்க்காலின் முடிவு இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதகமானதா?**

விடுதலைப் புலிகள் இருக்கும் வரை இலங்கையில் இன்னொரு ஆயுதக் குழு உருவாகவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனாலும் 2019 இன் பின்பு பாகிஸ்தான் சீனாவின் இலங்கையுடனான நெருக்கம் இந்தியாவின் மனநிலையில் பதற்றத்தை ஏற்படுத்தியது என்பதும் உண்மை.

**செழியன் — வேலணை**

**ஆலயம் தொழுவது சாலவும் நன்றே என்பது இக்காலத்தில் பொருந்துமா?**

அது உண்மைதான். ஆனாலும் அதை யார் கடைப்பிடிக்கிறார்கள். ஆனாலும் வீடு வீடாய் வந்து விதைக்கிறார்களே மதமாற்றத்திற்கான விதையை. இதைத் தடுப்பார் யாரும் இல்லையோ என்று மனம் விம்மி அழுகிறது.

**கோகிலன் — வரணி**

**இயற்கையை வழிபட்ட மனிதன் இன்று இயற்கையை அழித்து கட்டடம் கட்டி சிலை வைக்கிறானே?**

மனதால் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்த பூசலார் பெருமான் எங்கே? பைக்கோ பிடித்து தேர் இழுத்த கூட்டம் எங்கே?

இயற்கையை வழிபட்ட மனிதன் இயற்கையை அழித்தது மட்டுமல்ல மனிதனில் வாழ்ந்த மனிதத்தையும் சேர்த்து அழித்துவிட்டு கோடி கொட்டிக் கும்பாபிஷேகம் செய்கிறான்.

ஆனால் இறைவன் அங்கு இருக்க மாட்டான். பூசலார் போன்ற புனிதமானோரின் மனக் கோவில்களில் மட்டுமே குடிகொள்வான்.

**கனுஜா — வேலணை**

**மனிதனுடைய எதிர்கால வாழ்வைத் தீர்மானிப்பது கல்வியா? பணமா?**

கற்றோர் கண்ணுடையோர் கல்லாதோர் முகத்தில் இரண்டு புண்ணுடையோர் என்ற அதே மனிதன் தான் பணம் பாதாளம் வரை பாயும் என்றும் சொல்லியிருக்கின்றான்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தர்ணிகா — கவுந்தில்**

**தமிழர்களை நாயின் நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் அடுத்த தேர்தலில் பதில் சொல்லுவர்களா?**

என்னது தேர்தலில் பதில் சொல்வதா? இறுதி யுத்த போர்க்குற்ற மீறல்களுக்கு சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என்றார்கள்.

பின்பு இரண்டு வருட அவகாசம் வழங்க சம்மதித்தார்கள். எதுவுமே இல்லாத வரவு-செலவுத் திட்டத்தில் எந்தக் கேள்வியும் இல்லாமல் கைதூக்கி ஆதரவு கொடுத்தார்கள்.

வருடா வருடம் ஏ.சி. வாகனம் வாங்கி எங்களை மிருகங்களைப் பார்ப்பது போல் பார்த்துச் சென்றார்கள். இவர்களா தேர்தலில் பதில் சொல்லப் போகிறார்கள்.

**டினேஸ் — ஊரெழு**

**கடவுள் இருக்கிறாரா இல்லையா?**

நீங்கள் ஒரு பெரிய மரத்தின் கீழ் இருக்கிறீர்கள். காற்றுப் பலமாக வீசுகின்றது. பலமான காற்றினால் மரத்தின் கிளையொன்று முறிந்து உங்கள் தலையை நோக்கி வருகின்றது.

அதை உணர்ந்த நீங்கள் சடுதியாக உங்கள் கைகளால் அந்தக் கிளை தலையில் விழாமல் பாதுகாத்துக் கொள்கின்றீர்கள்.

கையால் கிளையைத் தடுக்காமல் இருந்திருந்தால் அந்தப் பாரிய கிளை உங்கள் தலையில் விழுந்து உயிராபத்தையே ஏற்படுத்தியிருக்கும் அல்லவா. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை உயிராபத்திலிருந்து காத்த உங்கள் கைதான் கடவுள்.

இப்படி கடவுளின் வடிவம் நிலைக்கு நிலை வேறுபடும் அவ்வளவே.

**ஜெயராம் — யாழ்ப்பாணம்**

**தனது நாட்டு கிரிக்கெட் அணிக்கு உதவி செய்ய மறுத்துவிட்டாரே மகேல ஜெயவர்த்தன?**

மகேல ஜெயவர்த்தன,சங்கக்கார ஆகியோர் இலங்கை அணியிலிருந்து ஒரே நேரத்தில் விலகினர்.

அதன் பின் இலங்கை அணி ஆட்டம் காண ஆரம்பித்தது.

அப்போது அணி குறித்து பல ஆலோசனைகள் வழங்கினார்கள். ஆனால் இல்ங்கை அதை உள்வாங்கியது போல தெரியவில்லை.

சரி அதை விடுங்கள். உலகக்கிண்ணம் ஆரம்பிக்க அணி வீரர்கள் இங்கிலாந்து சென்ற பின் தான் மகேல ஜெயவர்த்தன பற்றிய நினைவு வந்ததோ இவர்களுக்கு.

**யனுஷன் — ஸ்கந்தபுரம்**

**புதிய அரசியலமைப்பு வருமா? வராதா?**

அடப்பாவிகளா! புதிய அரசியல் அமைப்பை என் உயிர் போனாலும் கொண்டுவந்தே தீருவேன் என்று அடித்துக் கூறியவர் கூட இப்போது அதை மறந்து விட்டார். நீங்கள் மட்டும் நினைவு வைத்திருக்கிறீர்களே. அடப் போங்கடா. விவேக் ஒரு படத்தில் சொல்வார் ஆருமே இல்லாத கடையில் யாருக்கடா ரீ ஆத்துறாய் உன்னோட கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லையா என்று அது தான் இது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## கவிதைக் கலசம்

### ஏற்றமற்ற மாற்றங்கள்


மாற்றத்தின் மகிமையால்-பல
ஏற்றங்கள் கிடைக்குமென்பர் -ஆனால்
ஏற்றமற்ற மாற்றங்களால்-இன்று
ஏமாற்றங்கள்தான் கிடைக்கின்றது

நாகரிகம் எனும் பெயரில்-பல
அநாகரிகங்கள் அரங்கேறுகின்றது
சௌகரியங்கள் எனும் பெயரில்-பல
அசௌகரியங்கள் ஏற்படுகின்றது

தற்கொலைக்கு துணிந்த மானிடம்
அக்கொலைக்கு அர்த்தங்கள்
தேட மறந்துவிட்டான்
மகிமை மிக்க மதங்களையவன்
மதவாதக் கருவிகளாய் மாற்றிவிட்டான்

ஏன் இந்த சிந்தனைகள்
எப்படி உருவானது இந்த மானிட மனங்கள்?
மரணங்கள்தான் தீர்வென்றால்-பல
மார்க்கங்கள் இருந்தும் என்ன பயன்
மனங்களில் ஏற்றமின்றிப் பல
மாற்றங்கள் வந்தும் என்ன பயன்?

ஆர்.கே.மௌனி
ஆசிரியர், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி



### மனிதம் மலரட்டும்

மனிதம் மலரட்டும்
புனிதம் பொலியட்டும்
சித்தம் தெளியட்டும்
சிறுமை ஒழியட்டும்
உலகம் மகிழட்டும்
உண்மை தெளியட்டும்
கடமை மிளிரட்டும்
கயமை கருகட்டும்

ஏழ்மை ஒழியட்டும்
ஏற்றம் நிகழட்டும்
தாழ்மை தணியட்டும்
தகவு ஒளிரட்டும்
வாழ்வு வளரட்டும்
வறுமை மறையட்டும்
அன்பு வளரட்டும்
அறிவு நிறையட்டும்!

மெய்மை ஒளிரட்டும்
பொய்மை பொசுங்கட்டும்
பொறுமை நிறையட்டும்
பொறாமை மறையட்டும்
சித்தம் தெளியட்டும்
சீர்த்தி தெளியட்டும்
பித்தம் தெளியட்டும்
பீடை பிறழட்டும்!

கூத்தாடி
வி.சி. குஞ்சிதபாதம்

### வாழ்வின் இலட்சியம்

கடற்கரையின் மணற்தரையில்
நடந்து கொண்டிருக்கிறான் அவன்
பாதத் தடங்களை
நுரை கொண்ட அலைகள்
அழித்துக் கொண்டிருக்கிறது

அலை வந்து அழித்ததற்காய்
அவன் பயணம் முடியவுமில்லை
அழிக்க அழிக்க தடம் பதிக்கிறான் என
அழிப்பதை அலை நிறுத்தவுமில்லை

நிலை கெட்ட உலகினிலே
நடந்த பாதையைத் திரும்பிப்பார்த்தான்
துரோகங்களே குவிந்து கிடக்கின்றன

வெற்றிக்காக வாழ்க்கையுடன்
போராடும் ஒருவனுக்கு
தோல்விகள் சோர்வல்ல
சோதனைகள் தாழ்வல்ல

இரும்பு இதயங்களின் மத்தியில்
ஈர உதயங்களும் உண்டென
தடக்கி விழமுன் பிடிக்கும்
கைகளைப் பார்க்கும் போது புரிகிறது

இருப்பினும்...
தாகம் தீர்த்த நீரோடையை
தானமாகக் கேட்பது முறையல்லவே

முயல்கிறான்...
முயன்று கொண்டே இருக்கிறான்
இப்போதும்
அவன் தடங்களை
அலைகள் அழித்துக்கொண்டேயிருக்கிறது

மாவை. நா.கஜேந்திரன்

### ஒருகணமேனும் நீ மதுவினை நினைக்கவேண்டாம்

பள்ளியிலே நீ மென்று
தின்றபோது- நான்
எள்ளளவும் உனைத்திருத்த
முடியவில்லை-நண்பா
காட்டிக் கொடுக்க மனமின்றி
நானிருந்த காரணத்தால்
கெட்டுப் போனாயோ அதற்கு
நானுமோர் காரணனோ!

கரைசேர்க்கவேண்டிய உன்
சகோதரிகள் நல்வாழ்வு
கரைந்தழிந்து போகலாமோ
கனவாகிப் போகலாமோ
நரைதிரை மூப்பும் தீரா
நோய்களும் சூழலாமோ
தரைபுகழ் வாழ்வழியத்
தறுதலையாகலாமோ

குடிக்கு அடிமையானால்- அது உன்
உயிரையே குடிக்குமப்பா
படிக்கின்ற வயதில் போதைக்
கடிமையாய் அழியலாமோ

ஜீ.விதுசா, மாணவி
யா/ கொக்குவில்
ஸ்ரீஞானபண்டித
வித்தியாசாலை

### நம்பி விடாதே

உண்மையாய் உழைத்து வந்தால்
உனக்கேது தோல்வி
கண்மூடித் தூங்கிவிட்டால்
கவலை சேரும் பாரு

குப்பை கூழம் போல் உந்தன்
வாழ்வை வைக்காதே
கூட இருந்து குழிபறிப்பார்
நம்பி விடாதே!

உயர்வும் வரும் தாழ்வும் வரும்
உந்தன் வாழ்விலே
உயர்ந்து விட்டால் உன் வாழ்வில்
வெற்றிசேரும் பாரு

பாவரன்
குட்டிநகர்,
வவுனியா

## மௌனத்தின் தேடல்- 451




### வல்லூறுகளாம்

புள்ளடி இட்டே பெரும்
பேராளர் என்றறிந்திராது
கள்ளமிலா எம் தமிழர்
கரைசேர்த்த தலைமைகளோ
புல்லறுக்கும் புனிதரெனும்
போக்கிரிக்கும் பாதம் விழும்
வல்லூறுகளாம் தமிழ்க்குஞ்சுகளை
வதைக்குமென்றா ஆயுதங்கள்

வைகதன்
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் -452



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### வன்மமதை வழியனுப்பு

அன்னையின் அரவணைப்பில்
அகமகிழும் அன்பு நிலை
இன்பம் தரு கல்வியிலேயே நம்
இமையும் மன அமைதி நிலை
துன்பம் தரு சுடுகருவி தொலை
தூரச்சாதனமும் அவலநிலை
வன்மமதை வழியனுப்பு
வாழ வழி தேர்க நிலை

த.சிவகாமி
நல்லூர்

### ஆயுதமா? நூல்களா?

புத்தகப் பையேந்தி கல்வி கற்கும்
பருவத்திலே ஆயுதம் ஏந்தி
தொலைத்தொடர்பு பேசி வாழ்நாளை
வீணாக்கும் சிறுவர்களே!
இது ஒரு விளையாட்டுப் பருவமடா
மனிதப்பிறவி நமக்கு அளித்த ஆண்டவனே
உங்களைப் பார்த்து ஆத்திரப்படுவார்
நீவிர் எடுத்த ஆயுதங்களை வீசியெறிந்து
வாழ்வியலுக்கான நூலை எடுங்கள்

அபி குலமாலிகா
சங்கானை

### சுட்டுக்கொல்வோமா?

மதம் என்ற பேரிலே
குண்டுகளை வைத்து
எம் போன்ற உறவுகளை
கொல்ல நினைக்கும்
வீணர் கூட்டங்களை
சுட்டுக் கொல்வோமா?
சுதந்திர தேசம்
நாம் படைத்திடுவோமா?

ச.டபிரதீதன்
மட்டுவில்

### எழுக வீரர்காள்

சுடு கருவியின் பாரம்
சுமை கூடாப் பாலருக்கு
சுடுகளவாம் கட்ட இனம்
கண் முன்னே நிறுத்தி
விடும் பொறியில் வீழ்த்தி
விளை பயிராய்
எழுக வீரர்காள்

வாகை வளவன்
நாரந்தனை

### தூரஎறி சுடுகருவி

எல்லாம் பறிபோன
என் நிலை எம்மண்ணில்
வல்லார் வழித்தமிழர்
வதைபடும் துன்பநிலை
நல்லாரிலா அரசில்
நன்மைபெறும் எம் தலைமை
தொல்லைதருமெனின் விடு
தூரஎறி சுடுகருவி துலங்கு

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

### ஆண்டவன் பேரால்

துப்பாக்கி ரவைகளும்
வெடிகுண்டு பீரங்கிகளும்
இறைவனால் படைக்கப்
பட்டவையல்ல! தவிரவும்
நேர்மையும் வீரமும்
மிளிரும் இயற்கையாய்
அமைந்த ஆயுதங்களுமல்ல!
மாறாக குறுக்குவழியில்
கொடூரமாய் கொல்லும்
ஆயுதங்கள் குழந்தைகள்
கையில் அறியாமையும்
அடிப்படைவாதங்களும்
ஆண்டவன் பேரால்

இ.ஜெ.பாலன்

### ஏன் இந்த நிலை

அம்புலி பார்க்கும்
வயதினிலே
ஆயுதம் ஏந்தும்
நிலையிதுவோ
வெடிகுண்டு ஏந்தி
குடிகொண்ட
உலகமிது
பகைகொண்டு
போரிடவே
பசித்துக் கிடக்கிறது
உயிர் விலை புரியாத
பயங்கரவாதம்
வேரோடு அழித்திட
வெறிகொண்டு
நிற்கிறதே

யோ.யனுசன்
ஸ்கந்தபுரம்

### பிஞ்சிலே வீரம்

அன்பிலே மகிழ்ந்து அறிவிலே மூழ்கி
அகிம்சையோடு
அமைய வேண்டியவாழ்வு
ஆயுதமுனைக்கு
அத்தியாரமிட்டதேன்
பிஞ்சு நெஞ்சிலே
நஞ்சு எண்ணமில்லை
பிள்ளையுள்ளத்திலே
கள்ளங்கபடமில்லை
நெஞ்சம் கனலாக
நெருப்பானதோ எண்ணம்
மெல்லரத பகைவரோடு
போராடயிங்கே பிஞ்சிலே வீரம்
நெஞ்சிலேயுண்டு
பாலகரென்று உமை
பரிகாசம் செய்தோர்க்கு
பாடம் புகட்டி நல்
பண்புதனை விதைப்பீர்

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.

# தரைதொட்ட அலை

சிறுகதை



இதமான காலை இளம் வெயிலின் தழுவுதலால் மரங்களைப் போர்த்தியிருந்த மாசி மாதத்து வெண் பனித்துளிகள் மெதுவாகத் தலைமறையத் தொடங்கின. ஈரத்தில் கால் பதித்தவாறு ஒருசோடி வெள்ளைச் சப்பாத்துக்கள் சீரான வேகத்தில் நடைபயின்று கொண்டிருந்தன. அந்தக்கால்களுக்குரியவள் ஒரு பதின்ம வயதுக்காரி என்பதை அவளது தோற்றம் பறைசாற்றியது.

உச்சியில் நடு வகிடெடுத்து தலைமயிரை சீராக வாரி இரண்டு பின்னல்களாக அவள் தவழவிட்டிருந்தாள். தோளில் புத்தகப்பை. பாடசாலை நோக்கி பாதசாரியாக வந்து கொண்டிருந்தவளின் கால்களோ அந்த அதிகாலைப் பொழுதில் ஒரு கிலோ மீற்றர் வரையிலான தூரத்தைக் கடந்து வந்ததால் சிறிது தள்ளாடின. சிறிது நேரம் நின்று நிதானித்து களைப்பினால் திணறலெடுத்த மூச்சினைச் சீராக்கிக் கொண்டபின் மீண்டும் பயணிக்கத் தொடங்கின.

வெண்மதி என்ற நாமத்தைத் தனதாக்கிக் கொண்ட அந்த இளம் சிட்டின் இதயத்தில் ஒரு தவிப்பு இருக்கத்தான் செய்தது. க.பொ.த. சாதாரண வகுப்பில் பயின்று கொண்டிருந்த அவள் கல்வியில் அதிமேன்மை நிலையில் இல்லாவிட்டாலும் சராசரியான தரத்திலிருந்து இம்மியளவும் குறைந்தவளில்லை.

அவளது வகுப்பில் பயிலும் சக மாணவிகள் அனைவரும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு அலைந்து திரிவதை அவள் கண்கூடாக அவதானித்த போதிலும் அவளது குடும்பத்தின் வறுமை நிலை அதற்கு இடமளிக்காது என்பதை அவள் நன்றாகவே உணர்ந்திருந்தாள்.

இருந்த போதிலும் தன்னால் இயன்றவரை முயற்சித்து பாடங்களைப் பயின்று பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை எடுத்து விட வேண்டும் என்ற தாகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஒருவாறு வெண்மதி பாடசாலையின் வாயிலை அண்மித்து விட்டாள். அந்தச் சமயத்தில்தான் மின்னலென ஒரு காட்சி அவள் கண்முன் தோன்றியது. அவள் சில காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த பிரதீபன் என்ற பையன் தனது ஈருருளியில் அவளுக்கு எதிர்த்திசையாக வந்து கொண்டிருந்தான். சட்டெனா அவளது உள்ளம் உஷாரடைந்தது. இன்று எப்படியும் அவனுடன் கதைத்து விடவேண்டும் என்று மனம் சங்கணம் கட்டிக்கொண்டது. அதற்கிடையில் எதிர்பாராத விதமாக பிரதீபனின் நண்பன் ஒருவன் குறுக்கே வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டான்.

"என்ன மச்சான் பிரதீபன்! பெண் பிள்ளைகள் எல்லாம் உன்னையே சுற்றிச் சுற்றி வருகினம். நீ என்ன மாய மந்திரம் வைச்சிருக்கிறாய்?" கேலி செய்த நண்பனை வெட்டிவிட்டான் பிரதீபன்.

"உனக்கென்ன விசரே பிடிச்சிருக்கு. எனக்கு வேற வேலையில்லாம பெண் பிள்ளைகளுக்குப் பின்னால் சுற்றித் திரியிறனே. போடா லூசுப் பயலே"

"இல்லையடா மச்சான்! வெண்மதி என்ற ஓ.எல். வகுப்பில படிக்கிற பிள்ளை... உன்னையே இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்ததைப் பாத்திட்டுத்தான் பகிடியாய் உன்னட்டக் கேட்டனான். ஒருவேளை போன வருசம் பேச்சுப் போட்டிக்கு இரண்டு பேரும் போனனீங்கள் தானே. அதுதான் உங்களுக்குள்ளே ஏதும் இருக்குமோ என்ற சந்தேகம் வந்தது கேட்டன்.

அப்போதுதான் பிரதீபன் நிமிர்ந்து பார்த்தான். பாடசாலை வளாகத்தினுள் நுழைந்து வெண்மதி போய்க் கொண்டிருந்தாள். சென்ற வருடம் பாடசாலை மட்டத்தில் நடந்த தமிழ்த்தினப் போட்டியில் அவளைச் சந்தித்த நினைவு வந்தது. அதன்பின் மாவட்ட மட்டத்தில், தேசிய மட்டத்தில் என இருவருமே போட்டியில் பங்குபற்றினர். பயிற்சிகளின் போது அவர்களுக்குள் பரிச்சயம் ஏற்பட்டது உண்மைதான். ஒல்லியான உடல்வாகும் சாந்த குணமும் கொண்ட அவளது குரல் மட்டும் கணீரென ஒலிக்கும். தேசிய மட்டத்தில் ஆண்கள் பிரிவில் பிரதீபனுக்கு இரண்டாமிடமும் பெண்கள் பிரிவில் வெண்மதிக்கு முதலிடமும் கிடைத்தது. பாடசாலைச் சமூகம் அவர்களுக்குப் பாராட்டு விழா வைத்துக் கௌரவித்ததை ஒருதரம் நினைவு கூர்ந்தான் பிரதீபன்.

வெண்மதிக்கோ பிரதீபன் மீது ஒரு இனந்தெரியாத பற்று இருந்தது. அவனுடைய அப்பா ஒரு மருத்துவர். அம்மா ஆசிரியை என்ற கர்வம் துளிகூட அவனிடம் கிடையாது. வர்க்க பேதமின்றி எல்லோருடனும் சகஜமாகப் பழகுவான். சென்ற ஆண்டு கடந்த க.பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ எடுத்து பாடசாலையிலேயே முதல் மாணவனாக வந்திருந்தான். இப் போது விஞ்ஞான பிரிவில் படித்துக்கொண்டிருக்கிறான். மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு அவனிடம் நிறையவே குடிகொண்டிருந்தது. அதனால் தான் வெண்மதியின் உள்ளமும் அவனையே தெரிவு செய்திருந்தது.

வெண்மதியும் பிரதீபனை தனிமையில் சந்தித்து தனது உள்ளக்கிடக்கையை வேண்டுகோளாக வெளியிடலாம் எனச் சமயம் பார்த்துக் காத்திருந்தாள். ஆனால் சந்தர்ப்பம் அமையவில்லை. பாடசாலையில் அவனைக் காணும் போதெல்லாம் குறுகுறுக்கும் தன் உள்ளத்தின் குமுறலை கொட்டிவிட வாய்ப்பின்றி தவித்துப் போவாள். சில சமயங்களில் அவள் அவனை நெருங்கும்போது சகமாணவர்கள் அவனைச் சீண்டுவதையும் அவதானித்து துடித்துப் போயிருக்கிறாள். ஒவ்வொரு பொழுதும் பாடசாலைக்கு வரும்போது இன்று எப்படியும் அவனிடம் கேட்டுவிட வேண்டும் என மனம் அடித்துக் கொள்ளும். சந்தர்ப்பங்கள் அனுகூலமாக அமையாததால் அவளது ஆசை நிறைவேறாமலே நாட்கள் தள்ளிப் போகும்.

ஒவ்வொரு இரவும் வெண்மதி நீண்ட நேரம் விழித்திருந்து தனது பாடங்களைப் படிப்பாள், கண் இமைகள் ஓய்வுக்காக கெஞ்சும்போது அவளது வைராக்கியம் அதை மிஞ்சிவிடும். கடைசிக் கட்டப்போரில் அவள் தனது தந்தையை மட்டுமா இழந்தாள். தாயின் ஒரு கையுமல்லவா இழக்க நேரிட்டது. அவளது அம்மா ஒற்றைக் கையுடன் தன்னையும் தம்பியையும் வளர்த்து ஆளாக்கப்படும்பாடு அவளது இதயத்தில் இரத்தத்தைக் கசியவைக்கும். தாயின் கஷ்டங்களுக்கு கைமாறாக தான் நன்கு படித்து ஒரு மேலான நிலையை அடைய வேண்டும் என்பதே அவளது குறிக்கோளாகும்.

இரவு படித்துமுடித்து அவள் கண்ணயரப் போகும்போது மனதில் பிரதீபனது நினைவு வந்து அவளை ஆட்கொள்ளும். நாளைக்கு எப்படியும் அவனைச் சந்தித்துப் பேசிவிடவேண்டும் என மனம் சங்கற்பம் கட்டிக் கொள்ளும். பெரிய இடத்துப் பிள்ளை என்றாலும் அவன் தனது வேண்டுகோளை நிராகரிக்கமாட்டான் என்றொரு நம்பிக்கை அவளது உள்ளத்தில் ஆழ வேரூன்றியிருந்தது.

மறுநாள் பாடசாலை மதிய இடைவேளையின் போது அவள் பிரதீபனைக் காண நேர்ந்தது. அவன் தனது நண்பர்கள் புடைசூழப் போய்க்கொண்டிருந்தான். தன்னையே நோக்கியவாறு வந்து கொண்டிருந்த வெண் மதியைக் கண்டதும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு நண்பர்களுடன் குலாவியவாறு போய்விட்டான்.

கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டதாக வெண்மதியின் மனம் புலம்பியது. இனியொரு தரம் சந்தித்தால் அவனுடன் பேசியே தீருவது என உறுதியெடுத்துக் கொண்டவளது மனத்தில் ஏமாற்றமே நிறைந்திருந்தது. சக மாணவிகள் அவளுடன் நெருங்கிப் பழகுவதில்லை. ஏன் அவளை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. காரணம் அவளது வறுமைக்கோலமும் ஆடம்பரமற்ற போக்கும் தான். அதை யிட்டு அவள் என்றுமே கருத்திற் கொள்வதில்லை. தானுண்டு தனது கல்வியுண்டு என்பது தான் அவளது சிரத்தையாக இருந்தது.

அன்று பாடசாலைவிட்டு புறப்படும் சமயம் வெண் மதி அவசர அவசரமாக வகுப்பறையை விட்டு வெளியேறியவள் ஈருருளிகள் தரிப்பிடத்தை நோக்கி நடையைக் கட்டினாள். அவளது மனத்திரையோ பதற்றம் என்னும் பேரலைகள் உருவெடுத்தது. ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன. எப்படியும் இன்று காரியத்தைச் சாதித்துவிடவேண்டும் என்ற பேராவலுடன் அவள் அங்கு காத்து நின்றாள்.

அவள் எதிர்பார்த்தவாறே பிரதீபன் நண்பர்களுடன் தரிப்பிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். எவர் கூட இருந்தாலென்ன நான் கேட்க வேண்டியதை கேட்டே ஆக வேண்டும் என மனம் உந்தியது.

"பிரதீபன் அண்ணா!" குரல் கேட்டு அவன் திரும்பினான். "அண்ணா! நீங்கள் போன வருடம் படித்த பயிற்சிப் புத்தகங்களை எனக்கு இரவலாகத் தந்து உதவுவீர்களா? நான் படித்து விட்டுத் திருப்பித் தந்துவிடுவேன்". அவள் தன்னை அடிக்கடி பார்ப்பதும் பின் தொடர்வதற்கு மான அர்த்தம் இப்போது தான் பிரதீபனுக்குப் புரிந்தது.

"அதற்கென்ன நாளைக்கு பாடசாலைக்கு வரும் போது கொண்டுவந்து தருகிறேன்" அடக்கத்துடன் சொன்னவனைப் பார்த்து நன்றியுடன் புன்னகைத்தாள் வெண்மதி. அவளது இதயத்தில் மோதிக் கொண்டிருந்த அலை தரைதட்டிவிட நிம்மதி அவள் உள்ளத்தை நிறைத்துக்கொண்டது. பிரதீபனைச் சூழ்ந்திருந்த நண்பர்களது முகத்திலோ அசடு வழிந்தது.

[illegible]

# ஒருநாள் இந்த உரிமையும் பறிபோகும் காலநிலை மாற்றத்தின் நிஜமான ஆபத்து

> “அவெஞ்சர்ஸ் படத்தில் தானோஸ், “பேரண்டத்தில் அனைத்து வளங்களும் ஓர் அளவோடுதான் இருக்கின்றன. நாம் அதை அளவின்றி பயன்படுத்திவிட்டோம். அதற்கான விளைவுகளையும் அனுபவித்துதான் ஆகவேண்டும்” என்று கூறுவது நூறு சதவிகிதம் உண்மைதான். ஆனால், அந்த விளைவுகளை அனுபவிப்பவர்கள் யார்? அனுதினமும் தம் அடுத்த நாளின் வாழ்க்கைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நடுத்தர மற்றும் ஏழை மக்கள்தாம்.



நாம் பூமியை கையில் ஏந்தி நிற்கும் காற்றடைத்த பந்தைப்போல் கவனமாகக் கையாளவேண்டும். இல்லையேல் காலநிலை மாற்றம், உலகவெப்பமயமாதல் போன்ற பேராபத்துகள் அந்தப் பந்தை உடைக்க வெகுநேரம் எடுக்காது.

இரக்கமின்மை, அக்கறையின்மை, சமத்துவமின்மை போன்ற இன்மைகள் சமுதாயத்தில் வளர்ந்துகொண்டே போகின்றன. மனித சமுதாயத்தின் பேரழிவுக்கான வித்துகள் விருட்சமாகிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சமுதாய நலன்மீது துளியும் கரிசனமற்ற இந்த நடவடிக்கைகளுக்கு என்றென்றும் மன்னிப்பே கிடையாது. இந்த சமுதாயப் பிரச்சினைகள் அதிகமாவதற்குக் காலநிலை மாற்றம், உலக வெப்பமயமாதல் போன்றவையும் காரணமென்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? நிச்சயமாக நம்பமாட்டீர்கள். ஏற்றுக்கொள்ளவே மாட்டீர்கள். காலநிலை மாற்றமென்பது சுற்றுச்சூழல் பிரச்சினை. அதைச் சமுதாயத்தோடு எப்படி ஒப்பிட முடியுமென்று சிலர் வாதிடவும் வரலாம். எந்தவொரு சமுதாயமாக இருந்தாலும் சரி. அதன் எழுச்சி எப்போது தொடங்கும்? அதில் வாழும் மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்போதுதானே தொடங்கும். அதிலும் சாதாரண உரிமைகளல்ல. தம் அடிப்படை உரிமைகளாகக் கருதப்படும் சுத்தமான காற்று, சுகாதாரமான வாழிடம், தூய்மையான குடிநீர் ஆகிய மூன்றுமே கேள்விக் குறியாகும்போது அல்லது கிடைக்காமலே போகும்போதுதானே எழுச்சியும் புரட்சியும் சாத்தியப்படும். அந்த நிலை புவியில் அதிகமாகிக் கொண்டிருப்பதற்குத் தமிழகமோ இந்தியாவோ மட்டுமல்ல, உலகம் தழுவி நடக்கும் அளவுக்கு அதிகமான போராட்டங்களே ஆதாரங்கள்.

காலநிலை மாற்றம் கொண்டுவரும் வறட்சி, பஞ்சம் மட்டுமன்றி வழக்கமாகிக் கொண்டிருக்கும் சூழலியல் பேரிடர்கள் யாரைப் பாதிக்கின்றன? பணம் படைத்தவர்கள் தம் பொருளாதார அடித்தளத்தால் மீண்டெழுந்து மீண்டும் சூழலியல் சீர்கேடுகளைத் தொடங்கிவிடுகிறார்கள். பொருளாதாரத்தின் விளிம்புநிலையில் தவித்துக் கொண்டிருக்கும் மக்கள் இன்னமும் முந்தைய பேரிடர்களிலிருந்தே மீண்டெழ முடியாமல் போராடிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் இப்போது அனுபவிக்கும் பிரச்சினைகளில் முதலும் முக்கியமுமான பிரச்சினை, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகளில் விழுந்த பெரிய அடியே.

"காலநிலை மாற்றம் மனித உரிமைகளைக் கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கிறது. உணவு, வாழ்விடம், ஆரோக்கியம் போன்ற உரிமைகளை ஏழைகளுக்குக் கிடைக்கவிடாமல் செய்துகொண்டிருக்கிறது. பூமியின் சூழலியல் சீர்கேடுகளில் எதிலுமே பங்குவகிக்காத இந்த மக்கள், அதற்கான விளைவுகளை மட்டும் அளவுக்கு அதிகமாகச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் மிகப்பெரிய அநீதி"- மேரி ரொபின்சன், அயர்லாந்து ஜனாதிபதி, ஐ.நாவில் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர்.

இப்போதிருக்கும் அரசியல், பொருளாதார அமைப்புமுறைகள் அனைத்துமே உலக வெப்பமயமாதலைச் சரிக்கட்டுவதற்குத் திராணியற்று நிற்கின்றன என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதில் சில சீரமைப்புகளும் சீர்திருத்தங்களும் செய்யப்படவேண்டும். இங்கு மிகப்பெரியதொரு புரட்சி வெடித்தால் மட்டுமே அதுகூடச் சாத்தியப்படும் நிலையில்தான் சமுதாயங்கள் இருக்கின்றன. நாம் வரலாறு மாறிக்கொண்டிருக்கும் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வரலாற்றின் புதிய சகாப்தமான நவீன யுகம் பிறக்கையிலேயே பிறந்தவர்கள் நாம். நுகர்வுக் கலாசாரத்திற்குப் பலியாகி நிற்கும் முதல் தலைமுறையும் நாம்தான். உலகமயமாக்கல் கொண்டுவந்த நுகர்வுப் பசி நம்மிடம் ஒரு பொருளை வாங்கவும் இரண்டாம் தரச் சரக்குகளாக விற்கவும் அல்லது கழிவுகளாகக் கொட்டவுமே பழக்கிவிட்டது. சுயசார்புப் பொருளாதாரத்தை நாம் மறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் உற்பத்தி செய்யும் கழிவுகளைப் பற்றிக் கவலைப்படாமலே வாழத் தொடங்கி விட்டோம். அதன்விளைவாக நம் கழிவுகளிலேயே நாம் மூழ்கிக்கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளில் அடிப்படை உரிமைகளைச் சிறிதும் சிந்திக்க முடியாத நிலையில் வாழும் மக்களின் மனிதவுரிமைகள் காப்பாற்றப்படவேண்டும். காலநிலை மாற்றமும், உலக வெப்பமயமாதலும் நகரமயமாக்கலும் கிராமங்களின் வாழ்வாதாரத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. அது மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுக்க முக்கிய காரணமாக மாறி வருகின்றது. இப்போதிருப்பதைவிடப் பலமடங்கு அதிகமான மக்களைச் சுமக்க வேண்டிய நிலை நகரங்களுக்கு ஏற்படும். ஆனால், நகரங்களின் இப்போதைய நிலையே மிகவும் மோசமாக உள்ளது. இவற்றுக்கு அடிப்படைக் காரணமான காலநிலை மாற்றத்தையும் அதன் விளைவுகளாக நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் வெள்ளம், வறட்சி, பஞ்சம் மற்றும் அவற்றின் விளைவுகளால் கிராம மக்கள் சந்திக்கும் கடன் மற்றும் பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களையும் நகர மக்கள் சந்திக்கும் வாழ்விடக் குறைபாடு வேலையின்மை மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறையையும் சரிகட்டுவதற்குத் தற்கால அரசுகள் முனைந்தே தீரவேண்டும். அதற்கு, இப்போது வெப்பமயமாதலைத் தீவிரமாக்கும் கரிமம் போன்ற பசுமை இல்ல வாயுக்களையும், காலநிலை மாற்றத்தையும் மத்தியில் வைத்துப் பேசுபொருளாக்கும் அரசியல் அமைப்புகள் நமக்குத் தேவைப்படுகின்றன. இப்போதிருக்கும் சூழ்நிலையில் மனித உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமெனில் காலநிலை மாற்றமும் அதிலொரு பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும். இல்லையேல் சுகாதாரத்தைச் சிந்திக்கவே முடியாத நிலை உருவாகிக்கொண்டிருக்கும் நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளும், கிராமப்புறத்தில் இக்கட்டான வாழ்வை வாழும் விவசாயத் தொழிலாளர்களும் மிகப்பெரிய பாதிப்புகளைச் சந்திப்பார்கள். அத்தகைய அரசுகள் தோன்றவில்லை என்பதைவிட அதற்கான முயற்சிகளே மிகக் குறைவு.

ஒரு சமுதாயம் முழுமையடைய வேண்டுமெனில் அதில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பான சுற்றுச்சூழல் வழங்கப்பட வேண்டும். ஆனால் நம் அமைப்புமுறை எப்படியானதாக இருக்கிறது? வேலைவாய்ப்பு என்ற பெயரில் சில நூறு பேருக்கு வேலை கொடுப்பதற்காகப் பல்லாயிரம் பேரின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையிலேயே இருக்கிறது. உண்மையில் அது வேலைவாய்ப்புக்காகச் செய்யப்படுவதில்லை. ஒருசில பெருநிறுவனங்கள் வேலைவாய்ப்பு என்ற தூண்டிலை வீசிப் பிடிக்கும் லாப மீன்களுக்காகவே செய்யப்படுகிறது. இங்கு அவர்கள் வீசும் தூண்டிலே மக்களை ஆட்சி செய்துகொண்டிருக்கும் அரசுகள்தாம். அதிலிருக்கும் இரைதான் வேலைவாய்ப்பு.

பாரிஸ் ஒப்பந்தத்தை எந்தவொரு நாடும் இதுவரை மதித்ததாகத் தெரியவில்லை. தம் நாடுகளின் தொழில் வளர்ச்சியை, பெரு முதலாளிகளின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டதில் பாதியளவு முனைப்பைக்கூடப் பூமியின் வெப்பநிலையைக் குறைக்கவேண்டுமென்பதில் காட்டவில்லை. இது இப்படியே போனால் இந்த நூற்றாண்டின் முடிவில் பூமியின் வெப்பம் 3 டிகிரியைத் தொட்டாலும் ஆச்சரியமில்லை. உலக நாடுகள் எதுவும் முயற்சியே செய்யவில்லையென்று அப்பட்டமாகக் குற்றம்சாட்ட முடியாது.

சில நாடுகள் அதற்கான முயற்சிகளை எடுத்தாலும் அதில் எந்தவிதப் பலனுமில்லை. ஏனென்றால் அவர்கள் செய்வதெல்லாம், மலையளவு சேதங்களும் மடுவளவு பரிகாரங்களுமே. இவற்றைச் சரிசெய்ய வேண்டுமென்றால் உலகளவிலான அரசியல் சித்தாந்தங்களிலும் ஆட்சி முறைகளிலும் மாற்றம் வரவேண்டும். இல்லையேல் முன்னரே கூறியதுபோல் சில சீர்திருத்தங்களாவது செய்யப்பட வேண்டும்.

சமுதாயத்தில் சூழ லியல் சமத்துவமிக்க பொருளாதார மற்றும் அரசியல் முறையே இப்போது தேவைப்படுவது. தாராள மயமாக்கல் போன்ற கொள்கைகளால் அது நிச்சயமாகச் சாத்தியப்படப் போவதில்லை. அது செய்வதெல்லாம், ஏதோவொரு வளர்ந்த நாட்டில் அமர்ந்திருக்கும் பெரு முதலாளியை ஏதோவொரு வளரும் நாட்டிலிருக்கும் வளங்களைச் சுரண்ட ஊக்குவிப்பது மட்டுமே.

இப்போது நம்முன் இருக்கும் அபாயங்களை ஒரே வீச்சில் ஒரே திட்டத்தில் ஒரே முயற்சியில் நிச்சயமாகச் சரிசெய்துவிட முடியாது. அதற் குப் பல்நோக்குத் திட்டங்களும் பலகட்ட முயற்சிகளும் நீண்டகாலச் செயற்பாடுகளும் தேவை. அத்தகைய அரசியல் சீரமைப்புகளைச் செய்தாக வேண்டிய அவசியத்தைக் காலநிலை மாற்றம் ஏற்படுத்தியுள்ளது. நம் முன் நிற்கும் கேள்வி, அதையுணர்ந்து திருந்தப் போகிறோமா இல்லையா என்பதுதான்.

facebook

# பெண்ணின் உலகம் அழகானது
# பெண்ணை சுற்றிய உலகம் ஆபத்தானது

ஆரம்ப காலங்களில் தொழிற்சாலை அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினார்கள். பெண்கள் வீட்டு வேலைகள் செய்பவர்களாகவே முடக்கி வைக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்பக்கல்வி கூட மறுக்கப்பட்டது. சுதந்திரம் என்னவென்று தெரியாமல் இருந்த காலம் அது.

மகாகவி பாரதியார் தோன்றிய காலங்களுக்கு பின்னர் அடுப்பங்கரைகளில் முடங்கி அடுப்பூதிக் கொண்டிருந்த பெண்களின் அடிமைத்தனம் உடைத்தெறியப்பட்டு இன்று விண்வெளியில் வீராப் புடன் வானில் பவனி வருகின்றனர். அந்தளவிற்கு இன்று பெண் சமுதாயம் வானுயர்ந்து நிற்கின்றது. இதனை நினைத்து பெருமை கொள்ளும் வேளையில் பெண்மையை போற்றிய காலங்கள் மெல்ல மெல்ல மௌனிக்க மீண்டும் பெண்மை அடிமையாகிய அழிவுப் பாதையை நோக்கி மெல்ல நகர்கின்றது.

பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ குறிப்பிட்ட சமூகத்திற்கோ உள்ள பிரச்சினையல்ல இது ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினை ஆகும்.

இலங்கையை பொறுத்தவரை இன்றைய நிலையில் பெண்களுக்கான பாதுகாப்பு நாளடைவில் குறைந்து செல்கின்றது. தலை நிமிர்ந்து சாதனை புரிய வேண்டிய பெண்கள் இன்று சிலரின் காம வேட்கை பசிக்கு இரையாகின்றனர். பாடசாலை , அலுவலகங்கள் ,பொது இடங்கள் , ஏன் பிரயாணம் செய்யும் போது கூட (அதாவது மோகக் கண் கொண்டு பார்ப்பது , தகாத வார்த்தைகளை பிரயோகிப்பது , உரசுவது) உடல் உள ரீதியாக பெண்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள்.

மோகப் பசி தீர்க்க பெண்கள் என்ன கைம்பொம்மைகளா? இதனைக் கேட்டால் பாலியல் ஒழுக்கம் பெண்களுக்குரியது அதைனைக் காக்கும் பொறுப்பு பெண்களுக்குரியது என கூறுகிறார்கள். ஆனால் பாலியல் ஒழுக்கத்தை மீறுபவர்கள் பெரும்பாலும் ஆணகளாக இருந்த போதிலும் பழியும் பாவமும் பெண் மீதே சுமத்தப்படுகின்றது.

ஆண் எப்படியும் வாழலாம் பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நிலையில் இன்றைய பெண் சமூகத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். அந்நிலையில் இன்று அதிகளவான துன்புறுத்தல்கள் பொது இடங்களிலேயே இடம் பெறுகின்றது. அந்த வகையில் போக்குவரத்திலேயே பெண்கள் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றார்கள். எடுத்துக்காட்டாக இலங்கை பொது போக்குவரத்தில் ரயில், பஸ்களில் பயணிக்கும் பெண்களில் 90வீதமானவர்கள் உடல் , உள ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் தனது



ஆய்விலே குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களின் நிர்வாக மாவட்டங்களிலிருந்து 15-35 வயதுக்குட்பட்ட 2500 பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமே மேற்படி தரவானது வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 25 வீதம் ஒவ்வொரு கிழமையும் 16.4 வீதம் ஒவ்வொரு நாளும் 12.1 வீதம் என பொதுப்போக்குவரத்தில் துன்புறுத்தப்படுகின்றார்கள்.

இலங்கையைபொறுத்தவரை மக்களின் அன்றாட வாழ்வில் தரை. வழி போக்குவரத்தே முக்கியம் பெறுகின்றது. இதனாலயே அதிகளவான பஸ்கள் , ரயில்கள் சேவையில். ஈடுபடுகின்றன. இதனால் அலுவலகங்கள் பாடசாலைகள் , பிறதேவைகளுக்காக அன்றாடம் அதிகளவான பெண்கள் தரைவழி போக்குவரத்தையே பயன்படுத்துகின்றனர்.

காலை மற்றும் மாலை வேளைகளில் பொது போக்குவரத்தில் அதிகளவான சன நெரிசல் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பெண்கள் அதிகளவான துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். ஆனால் அவற்றை தமது பாதுகாப்பு கருதியும் , குடும்ப நிலைகளை கருத்தில் கொண்டும் வெளிப்படுத்துவதில்லை.

அலுவலகங்கள், ஏனைய பொது இடங்களில் தான் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுகின்றது என்றால் சுதந்திரமாக பணியிடத்துக்கு, ஏனைய தேவைகளின் நிமித்தம் பயணத்துக்காக பயன்படுத்தும் போக்குவரத்தில் கூட பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளில் பெண்கள் எப்படி சுதந்திரமாக பயணிக்க முடியும்.

இலங்கையில் பெரிய பெண்கள் தொடங்கி சிறுவர்கள் வரை பாதுகாப்பற்ற சூழலியே வாழ்கின்றனர். எதையும் அறியாத எத்தனை பிஞ்சுகள் காமுகர்களின் பசிக்கு இரையாகியிருக்கின்றார்கள். ஏன்!

அவர்களுக்கு கனவுகள் இல்லையா? சாதனை படைக்க வேண்டிய அந்த சிட்டுக்களின் மரணத்துக்கு இன்னும் நீதி கிடைக்காத போது எவ்வாறு பெண்கள் சுதந்திரமாக இருப்பது. பெண்களுக்கு சுகந்திரம் இல்லாத போது எப்படி நாம் இலங்கையை சுதந்திரமான் நாடு என கூறமுடியும்.

ஆகவே இக்கால கட்டத்தில் சிறுவர்களும் , பெண்களும் குடும்பங்களில் தம்மை பாதுகாத்துக் கொண்டாலும் சமூகத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு என்பதும் இங்கு இல்லை என்றே கூற வேண்டும் .

ஆகவே சர்வதேச மகளிர் தினம் போன்ற நாளில் ஆவது பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கை யில் ஈடுபடுவது அவசியமானதாகும், ஆனாலும் பெண்கள் இன்றைய நிலையில் பாதுகாக்கப்படுவார்களா? பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்படுமா? பெண்களுக்கான சுதந்திரம் வழங்கப்படுமா? என்பது சந்தேகமே!

என். சர்மியா
யாழ்.பல்கலைக்கழகம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1750

### சுபாஷ்

பாதையில் தடைகள் வந்தால் அதைத் தகர்த்து விட்டுத்தான் செல்லவேண்டுமென்று அவசியமில்லை... அதைத் தவிர்த்து விட்டும் செல்லலாம் எறும்பைப் போல...




### நிதர்சன்

மழைன்னு ஸ்கூல் லீவு விடும் பொழுதெல்லாம் மழை பெய்வதில்லை... குழந்தைகளின் வேண்டுதல் போல



### ராகவ்

அமைதியற்ற கடலே சிறந்த மாலுமியை உருவாக்கும்... மேடு பள்ளம் நிறைந்த சாலையே சிறந்த ஓட்டுநரை உருவாக்கும்... இன்பம் துன்பம் நிறைந்த வாழ்க்கையே சிறந்த மனிதரை உருவாக்கும்



### குணால்

உண்மையைப் பேசுவதில் ஒரு சௌகரியம் உண்டு... ஏனெனில் பேசியதை நினைவில் வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை...!



### விஷ்வா

எண்ணம் போல் வாழ்க்கை- பழமொழி
எண்ணினால் மட்டும்தான் வாழ்க்கை- பணமொழி



### தாஸ்

உறவுகளைப் பிரிப்பது தூரங்கள் அல்ல மௌனங்கள்... ஒருவனை நீ தண்டிக்க நினைத்தால் அவனை மன்னித்துவிடு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆஸ்திரியாவின் உளவுத் தொழில்

ஆஸ்திரியா நாட்டின் பிரதான தொழிலே உளவு பார்ப்பதுதான். உளவாளிகளின் சொர்க்க பூமி என்றும் அந்த நாட்டைச் சொல்வார்கள். எந்த நாட்டு உளவாளியாக இருந்தாலும் சரி, ஆஸ்திரியாவுக்குள் சுதந்திரமாக உலவ முடியும்.

அந்த அளவுக்கு உளவாளிகளுக்கு உதவுகின்றன அங்கிருக்கும் உளவு அமைப்புகள். அப்படிப்பட்ட நாட்டில் ஒரு ஸ்டிங் ஆபரேஷனில் சிக்கி ஆட்சியை இழந்திருக்கிறது வலதுசாரிக் கூட்டணி.

கடந்த 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு பத்திரிகை நடத்திய ஸ்டிங் ஆபரேஷன் வீடியோ அண்மையில் வெளிவந்து ஆஸ்திரிய நாட்டு அரசியலில் புயலைக் கிளப்பியிருக்கிறது. அந்த வீடியோவில், 'நான் ரஷ்ய தொழிலதிபருக்கு நெருக்கமானவள்' என்று சொல்லி அறிமுகமாகும் ஒரு பெண்ணிடம், 'எனக்கு வெற்றிபெற உதவினால் அரசு ஒப்பந்தங்களைப் பெற்றுத் தருவேன்' என்று பேரம் பேசி இருக்கிறார் ஆஸ்திரியாவின் துணை பிரதமர் ஹெய்ன்ஸ் கிறிஸ்டியன் ஸ்ட்ராஷ்.

அந்த வீடியோ வெளிவந்து சர்ச்சை கிளம்பிய பிறகு, 'ஓர் அழகான பெண்ணை ஈர்க்க, குடிபோதையில் உளறினேன்' என்று கூறிச் சமாளித்தார் ஹெய்ன்ஸ். ஆனாலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியதால், அவர் பதவி விலகினார். ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலின் போது இந்தப் பிரச்சினை வெடித்ததால், வலதுசாரிகள் சங்கடத்தில் நெளிந்தனர். நிலைமையைச் சமாளிக்க, பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடத்த விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார் ஆஸ்திரிய ஜனாதிபதி அலெக்ஸாண்டர் வான் டெர் வெலென்.

ஆனால், ஆஸ்திரிய மக்கள் இந்த இரகசியச் செயலைக் கண்டு மலைக்கவில்லை. ஏனெனில், உளவு பார்ப்பதுதான் அங்கு சர்வசாதாரணமாயிற்றே? உலகின் உளவு மையமாக ஆஸ்திரியா மாறியதற்கு முக்கிய காரணம் அதன் புவி



ஆஸ்திரிய துணை பிரதமர்

அமைப்பு. ஐரோப்பியக் கண்டத்தின் இதயத்தில் இருக்கும் ஆஸ்திரியா, பனிப்போர் காலத்தில் ரஷ்யாவின் இரும்புத் திரைக்கு மிக அருகிலிருந்த நாடு. கிழக்கும் மேற்கும் புவி அரசியலால் இரண்டாகப் பிரிந்து கிடந்த போது ஆஸ்திரியா மட்டும் நடுநிலையுடன் இரு பிரிவுகளுக்கு இடையே பாலமாகச் செயற்பட்டதும் இதற்கு ஒரு காரணம்.

சோவியத் யூனியன் உடைந்த பிறகு, பால்கன் நாடுகளை மேற்கு நாடுகள் அணுக வேண்டுமானால், ஆஸ்திரியா தான் ஒரே வாசல். பனிப்போர் காலத்தில் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் ஆஸ்திரியாவை நான்கு பகுதிகளாகத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தின. பனிப்போருக்குப் பிறகு இரும்புத்திரை விலகியதால் மேற்கு நாடுகளைக் கண்காணிக்க ரஷ்ய கம்யூனிஸ்ட்டுகளுக்குக் கண்ணும் காதுமாக இருந்தது ஆஸ்திரியா. அமெரிக்காவின் இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, மத்திய கிழக்கு நாடுகளுக்கான இராஜதந்திரங்களைத் தீட்டும் மையமாகவும் அந்த நாடு மாறியது. இதனால், பல நாடுகள் தங்களின் உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் எதிரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தவும் இராஜாங்கத் திட்டங்களைத் தீட்டவும் ஆஸ்திரியாவைத் தேர்வு செய்தன.

இன்னொரு பக்கம் ஐ.நா.பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் தலைமையகம், அணு ஆயுதப்பரவலைத் தடுக்கும் சர்வதேச அணு ஆற்றல் முகமை, பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு, ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு நிறுவனம் என்று பல பன்னாட்டு அமைப்புகள் ஆஸ்திரியாவில் செயற்படுகின்றன.

இதனால், பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகள், தூதர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரின் வருகை இங்கு சர்வ சாதாரணம். இதுவும் இங்கு உளவு அமைப்புகள் அதிகரிக்க முக்கியமான ஒரு காரணம்.

தற்போது, இங்கு உளவாளிகளை அதிகம் அனுப்புவதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் முன்னணியில் இருக்கின்றன.

ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் உளவாளியாக இருந்தால்... யூகோஸ்லேவியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து எனப் பல நாடுகளில் நினைத்ததைச் சாதிக்கலாம். இன்று சுமார் ஏழாயிரம் வெளிநாட்டு உளவாளிகள் வியன்னாவில் தங்கியிருக்கின்றனர்.

இது அந்த நாட்டு அரசுக்கும் நன்றாகவே தெரியும். ஆனால், எதிர்ப்புத் தெரிவிக்காது எதுவும் செய்யாது. ஏனெனில், உளவுத் தகவல்களுக்காக அளவில்லாத பணம் ஆஸ்திரியாவில் கொட்டப்படுகிறது. இதனால், அந்த நாட்டுக்குக் கொள்ளை இலாபம் கிடைக்கிறது.

"உளவு பார்ப்பது எங்களின் கலாசாரமாக மாறிவிட்டது. ஆஸ்திரிய சமூகம் இரகசியங்களால் கட்டமைக்கப்பட்டது. இரகசியங்கள்தான் நாட்டின் மூலதனம். இரகசியங்கள்தான் மக்களை வாழ்விக்கின்றன" என்கிறார்கள் ஆஸ்திரிய நாட்டு மக்கள்.

தற்போது நடந்து முடிந்திருக்கும் இந்த ஸ்டிங் ஆபரேஷனால், அந்த நாட்டில் சட்டங்கள் மாறப் போவதில்லை. உளவுத் தொழிலுக்குப் பங்கம் வரும் எந்தச் செயலையும் ஆஸ்திரிய அரசு செய்யாது.

ஏனெனில், வல்லரசுகளைத் தன் வசம் தக்கவைக்க ஆஸ்திரியாவுக்கு இருக்கும் ஒரே துருப்புச்சீட்டு உளவுத் தொழில்தான்!

# நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஓநாயின் தலை கண்டுபிடிப்பு



காலநிலை மாற்றத்தால் பூமி வெப்பமாகி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இதனால் ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதிகளில் பல வருடங்களாக உறைந்திருக்கும் பனி உருகி வருகிறது. ரஷ்யாவின் சைபீரிய உறைபனி நிலங்களிலும் அதே நிலையே. இதனால் 40,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு ஓநாயின் தலை மட்டும் தனியாகக் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இத்தனை ஆண்டுகள் பனியில் இருந்ததால், தோல், தலை என எதுவுமே அழுகாமல் அப்படியே இருக்கிறது.

இந்த உருகும் பனியில் மாமூத் தந்தங்கள் கிடைக்கும் எனத் தேடுதலில் இறங்கிய அந்தப் பகுதி மக்கள் இந்தத் தலையை அங்கிருக்கும் Tirekhtyakh நதிக் கரையில் கண்டெடுத்துள்ளனர். பின்பு இதை அங்கிருக்கும் அறிவியல் பல்கலைக் கழகத்தின் மாமூத் ஆராய்ச்சி பிரிவிடம் ஒப்படைத்திருக்கின்றனர். "40,000 ஆண்டுகள் ஆகியும் பனியால் திசுக்கள் பாதுகாக்கப்பட்டு அப்படியே இருக்கும் இதைப்போன்ற பாகம் ஒன்று கிடைப்பது இதுவே முதல் முறை" என்று தெரிவித்தார் அந்தப் பிரிவின் தலைவர் ஆல்பர்ட் ப்ரோடோ போபோவ்.

Pleistocene காலத்தில் (ஐஸ் ஏஜ் என்றும் அழைப்பர்) வாழ்ந்த இந்த ஓநாயின் மூளை எப்படி இருக்கிறது, மண்டைஓடு அமைப்பு எப்படி இருக்கிறது என டிஜிற்றல் மாடல் தயார் செய்வதில் தீவிரமாக இருக்கிறது இந்தக் குழு. மேலும், இதன் தலை எப்படி துண்டிக்கப்பட்டிருக்கும் என்ற கேள்விக்கும் விடை தேடப்பட்டு வருகிறது. மேலும், இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு சிங்க இனத்தைச் சேர்ந்த ஒரு சிறிய குட்டியின் உடலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 42,000 ஆண்டுகள் பழமையான மான் உடலும் திரவ ரத்தத்துடன் கிடைத்திருக்கிறது.

இதை குளோனிங் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புவி வெப்பமடைவது இப்போதைக்குக் குறைய வாய்ப்பில்லை என்பதால் இப்போக்கில் இன்னும் பல விலங்குகளின் மிச்சம் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆராய்ச்சிகளின் மூலம் அந்தக் காலம் எப்படி இருந்தது, விலங்குகள் எப்படி வாழ்ந்தன எனப் பல விடயங்கள் தெரியவரும்.





# உலகக் கோப்பை சொதப்புவது வீரர்கள் மட்டுமல்ல நடுவர்களும்தான்

ஒரு மிகப் பெரிய கிரிக்கெட் வீரனை உருவாக்கியுள்ளது பிரிஸ்டல் நகரம். உலகக்கோப்பையை நடத்தும் ஒவ்வொரு நகரமும், ஒவ்வொருவகையில் அதை வரவேற்றுக்கொண்டிருக்கின்றன. பிரிஸ்டலில், 4 மீற்றர் உயர கிரிக்கெட் வீரன் சிலையை நிறுவியுள்ளனர். வெள்ளை நிறச் சிலையில், விளையாடும் 10 அணிகளின் கொடிகளும் இடம்பெற்றுள்ளன. பிரிஸ்டல் நகரின் சிறுவர்கள், கிரிக்கெட் ரசிகர்களெல்லாம் இணைந்துதான் அந்தச் சிலைக்கு வண்ணம் பூசியுள்ளனர்.

இந்த ஐ.பி.எல். தொடரில் நடுவர் களின் செயற்பாடு மிகமிக மோசமாக இருந்தது. சரி, உள்ளூரில்தான் அப்படியிருக்கும் என நினைத்தால் உலகக் கோப்பையில் அதற்கு மேல் இருக்கிறது. மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலிய அணிகள் மோதிய போட்டியின்போது, ஒரே ஓவரில் இரண்டு முறை இந்த அம்ப யரிங் காமடிகள் அரங்கேறின. மிட்செல் ஸ்டார்க் வீசிய ஒரு ஓவரில், கெய்ல் பட்டிங் செய்துகொண்டிருந்தார். முதல் கீப்பர் கட்சுக்கு அப்பீல் செய்ய, உடன டியாக அவுட் கொடுத்தார் அம்பயர் கிறிஸ் கேஃப்னி. கெய்ல் ரிவ்யூ கேட்க, பந்து பட்டில் படாமல் ஸ்டம்பில் பட்டுச் சென்றது தெரிந்தது. முடிவை மாற்றிக்கொண்ட அம்பயர், இரண்டு பந்துகள் கழித்து மீண்டும் ஒரு தவறான அவுட் கொடுத் தார். இந்த முறை எல்.பி.டபிள்யூ அப்பீல். டி.வியில் பார்ப்பவர்களுக்கே, பந்து லெக் ஸ்டம்புக்கு வெகு தொலைவில் செல்வது தெரிந்தது. ஆனால், கொஞ்சமும் யோசிக் காமல் அவுட் கொடுத்தார் நடுவர். செம கடுப்பான கெய்ல், முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டே உடனடியாக ரிவ்யூ கேட்டார். பால் ட்ராக்கிங்கில் எல்லாம் பச் சையாக வர, கேஃப்னியின் முகம் சிவந் தது. “நீங்க அம் பயராண்ணே?” என நெட்டிசன்கள் கொடூரமாகக் கலாய்க்கத் தொடங்க, எல்லா ஏரியாவிலும் அடிவா ங்கினார் கேஃப்னி.


சென்றவாரம் அட்டகாசமாக ஒரு கட்ச் பிடித்து பெர்சல் காட்டினார் பென் ஸ்டோ க்ஸ். இந்த வாரம், அதையும் மிஞ்சும்படி ஒரு கட்ச் பிடித்துள்ளார் மேற்கிந்தி யத்தீவுகள் வீரர் ஷெல்டன் காட்ரல், ஸ்டீவ் ஸ்மித் அடித்த பந்தை, பௌண்டரி லைனின் ஓரத்திலேயே ஓடி, ஒற்றைக்கையில் அட்டகாசமாகக் கட்ச் பிடித்தார். மீண்டும் கொஞ்சத் தூரம் ஓடிவிட்டு, பந்தைத் தூக்கிப்போட்டுப் பிடித்து கட்சை முழுமையாக்கினார். ஏற்கனவே அவரது சல்யூட் செலிபி ரேஷன் செமையாக வைரலாகியிருக்க, இந்த கட்சுக்குப் பிறகு அரங்கில் இருந்த மொத்தக் கூட்டமும் காட்ரலுக்கு அவரது பாணியிலேயே சல்யூட் செய்தது!

‘இந்த உலகக் கோப்பையில் 350 ரன்னெல்லாம் சர்வசாதாரணமாக எடுக்கப்படும்’, ‘500 ரன் எடுக்கப்படுவதற்கான வாய் ப்புகள் இருக்கின்றன’ என பேட்டிங்குக்குச் சாதகமான இங்கிலாந்து ஆடுகளங்கள் பற்றிப் பரவலான பேச்சு இருந்தது. நாம்கூட எழுதினோம். ஆனால், தொடக்க வாரத்தில் பட்ஸ்மேன்களை விட, பௌலர்களின் ஆதிக்கம்தான் அதிகமாக இருந்தது. பாகிஸ்தானுக்கு எதிராக ஷார்ட் பிட்ச் பந்துகளாக வீசி, மேற்கிந்தியத்தீவுகள் ஏற்படுத்திய டிரெண்டை ஒவ்வொரு அணியும் அப்படியே பிடித்துக்கொண்டன. பல அணிகளும் கலர் உடையணிந்து, டெஸ்ட் மேட்ச் தான் விளையாடினார்கள். டெஸ்ட் மேட்ச் லைன், லென்த், ஷார்ட் பால், 3-4 ஸ்லிப் ஃபீல்டர்கள் என்... பார்ப்பதற்கு டெஸ்ட் போலத்தான் இருந்தது. மேட் ஹென்றி, ஒஷேன் தாமஸ், முகமது ஆமிர், மிட்செல் ஸ்டார்க், சஹால் என ஒவ்வொருவரும் பட்டையைக் கிளப்ப, எதிர்பார்த்த அளவுக்கு பட்ஸ்மேன்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இந்தியாதான் அவுஸ்திரேலியாவை அடித்து துவம்சம் பண்ணி ரன் குவித்தது.

வழக்கமாக அரையிறுதியில் சொதப்பும் தென்னாபிரிக்கா, ‘ஏன் அவ்வளவு தூரம் போவானேன்’ என இந்த உலகக் கோப்பையில் தொடக்கத்திலிருந்தே சொதப்பத் தொடங்கிவிட்டது. முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வி. வங்க தேசத்திடமும் எதிர்பாராத தோல்வி. மோசமான பட்டிங், படுமோசமான ஃபீல் டிங் எனக் களத்தில் சொதப்பிக் கொண் டிருக்க, ‘இன்னும் முடியல’ என விதி வழக்கம் போல் அவர்களோடு விளை யாடத் தொடங்கியது. இரண்டாவது போட்டியின்போது முக்கியமான பந்து வீச்சாளர் எங்கிடி காயத்தால் ஆட்டத்திலிருந்து வெளியேற, இந்திய அணியுட னான போட்டிக்கு முன் டேல் ஸ்டெய்னும் உலகக் கோப்பையிலிருந்தே வெளியேறினார். ‘ஸ்டெய்ன் மட்டும் ஐ.பி.எல் ஆடாம இருந்திருந்தா இந்நேரம் இங்க இருந்திருப்பாரோ’ என தலைவர் டுப்ளெ ஸ்ஸி ஃபீல் செய்துகொண்டிருக்க, புதிதாக டிவில்லியர்ஸ் பக்கமிருந்து ஒரு கதை வந்தது. சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கடந்த ஆண்டு ஓய்வுபெற்ற ஏ.பி, இந்த உலகக் கோப்பைக்கு முன் ‘மீண்டும் அணிக்கு வருகிறேன்’ என அணி நிர்வாகத்திடம் சொல்லியிருக்கிறார். ஆனால், ‘உங்க இஷ்டத்துக்கெல்லாம் ஆட முடியாது’ என அதை மறுத்தது தென்னாபிரிக்க அணி.

பாகிஸ்தான், இலங்கை அணிகளு க்கு எதிரான போட்டி மழையால் இரத்துச் செய்யப்பட்டது. அந்தப் போட்டி கைவிடப் படுவதற்கு முன் கமென்டரி பாக்ஸில் ஒரு ஜாலி மேட்சை நடத்தினார்கள் வர்ணனையாளர்கள். வாசிம் அக்ரம், கிரீம் ஸ்மித், குமார் சங்கக்கார என கமென்டரி பாக்ஸில் இருந்தவர்கள், அங்கேயே பட்டும் போலு மாகக்களத்தில் இறங்க, அந்த வீடியோ செம ஹிட். அதற்கிடையே, வாசிம் அக்ரமைக் கண்ட பாகிஸ்தான் ரசிகர் ஒருவர் “இந்த பாகிஸ்தான் டீமுக்கு உங்க பங்க ளிப்பு தேவைப்படுது” என்று அவரிடம் சொல்ல, “என் பௌலிங் இப்போலாம் அந்த அளவுக்கு இருக்காதே” என்று சொல்லியிருக்கிறார் அக்ரம். “பரவாயில்ல, பட்டிங் பண்ணுவீங்கல்ல” என்று கேட்டுள் ளார் அந்த ரசிகர்.

என்ன சொல்வ தென்று தெரியாமல் சிரித்துக் கொண்டே இருந் தாராம் ஸ்விங் கிங்!



# எண்ணப் பறவை



அன்பு நிறைந்த சங்குநாத வாசகர்களுக்கு அன்பான ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கங்கள் உரித்தாகட்டும்.

காலைப் பொழுதின் இனிய இதமான தென்றலும் வெதுவெதுப்பான சூரியனின் கதிர்களும் பூமாதேவியின் ஈர மண்ணும் ஒருவித அமைதியான சுகத்தைத் தந்து கொண்டிருக்க மெல்லக் கண்கள் சொக்கிக்கொண்டு வரத் திடுக்கிட்டு நிமிர்ந்தால் ஒரே வெக்கமாப் போட்டுது.

பெரியவர் ஒரு செல்லமாச் செருமி என்னைப் பார்க்கிறார். நான் எழும்பி அவரின்ரை காலடியில் நிண்டு அண்ணாந்து பார்க்கிறன். அவர் ஏதோ சொல்லுறார்.

``ம்...ம்...குட்டியருக்கு வலு சந்தோசமாக் கிடக்குது போலை. கனவுலகத்திலை மிதக்கிறார்...ம்... வாறவை எல்லாம் உம்மடை புகழ்பாட அப்பிடியே குழைஞ்சு வளைஞ்சு நெளியிறார். நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறன். எங்கடை தலைகள் கவிழ்ந்து கிடக்கிறதென்றால் இரு விசயம் நடந்திருக்க வேண்டும். ஒண்டு புகழ்-அதாவது எங்களைப் புகழுகின்ற புகழ்ச் சொற்கள். இன்னொன்று பழி-அதாவது என்மீது அவதூறு சொல்லுகின்ற பழிச் சொற்கள். கவனம் தலை கவிழாமல் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத திறனும் கொண்ட கம்பீர நடை வேணும். என்ன பார்க்கிறாய்-பாரதியின் வரிகளைப் பகல் கொள்ளை அடிச்சுப் போட்டன் எண்டு தானே ...விடு விடு...இண்டைக்கு ...உனக்குப் பிடிச்ச பாலப்பம் வருதாம். லதாக்குட்டி சொன்னவள். என்ன... இப்பவே வாயூறுது போல... ம்...ம்...நடிக்காதை சாப்பிடு..."

பெரியவர் சிரிச்சுக் கொண்டு சாப்பிடுறார்... சும்மா பார்த்த உடனேயே நான் என்ன நினைக்கிறன் எண்டு கண்டு பிடிச்சிடுவார். கெட்டிக்காரன் ...ம்...ம்...கேற் துறக்குது. இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் வருகினம். யூனிவசிற்றிப் பிள்ளையள் எண்டால் வித்தியாசம் தெரியும். ஒரு தெளிவு, ஒரு சுறுசுறுப்பு, தளப்பம் இல்லாத நடை, ஏற்றம், இறக்கம் இல்லாத சீரான கதைப் பேச்சு. வந்து செருப்பு மாதிரி ஏதோ காலிலை போட்டிருந்ததைப் படியிலை கழற்றி ஒழுங்கா வைச்சிட்டு வணக்கம் சொல்லிக் கொண்டு வந்து இருக்கினம். நான் கொஞ்சம் தள்ளி இருந்து கவனிக்கிறன். பிள்ளை ஒண்டு கதைக்கத் தொடங்குது.

"சேர் எங்களுக்கு நேரம் ஒதுக்கித் தந்ததுக்கு முதலிலை நன்றி சேர். ஒரு மணித்தியாலம் போதும் சேர். வீணான எண்ணங்கள் பற்றி நேற்றுக் கதைக்கிறதாச் சொல்லி இன்று நேரம் தந்திருக்கிறியள் சேர்..."

ம்...ஏதோ ``கட் அன்றைட்'' எண்டு படிச்சவை சொல்லுறமாதிரி ஒரு தடையில்லாத கதை. மற்றவை பார்த்தால் இதுகள் திமிராக் கதைக்குது எண்டு சொல்லுவினம். பார்த்தியளே ம்... படிக்கிற படிப்பு அப்பிடி....சரி சரி...பெரியவர் தொடங்கிறார்.

``மனிதனாகப் பிறந்தவர்களுக்கு மனசு முக்கியமானது. மனிதன் என்பவன் மனதால் நடப்பவன்-காலால் நடப்பவை கால்நடைகள். அதாவது விலங்குகள். மனம் எப்போதுமே எண்ணங்களின், கனவுகளின் தொழிற்சாலை. நல்ல ஆரோக்கியமான, கலைத்துவமான, அறிவுபூர்வமான எண்ணங்களால் நிறைக்கப்பட்ட மனம் ஒரு நந்தவனம்தான். அருவியோ, கடலோ, வானோ, நிலவோ அனைத்தும் மனதிற்குள் அடங்கிக் கிடந்து எம்மை உயிர்ப்புள்ளவர்களாக்கிக் கொண்டே இருக்கும். எண்ணங்களின் இனிமை கெட்டு விட்டால் நாங்கள் சடங்களாகி விடுவோம். மனம் பாலைவனமாகி அனற்காற்று மணற்புயல் நிறைந்து அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டே மனசை எப்பவுமே கவனமாகப் பராமரிக்க வேணும். குப்பை கூழங்களை, அழுக்கு நீர்த்தேக்கம், சாக்கடை என்பவற்றுக்கு நிகரான எண்ணக் குமிழிகள் குடியிருக்க அனுமதிக்கக் கூடாது. சுகமான நினைவுகள் மனிதனை சுக வாழ்வை நோக்கி நகர்த்தும். இதிலை வீணான நினைவுகள் எண்டு சொல்லுவது திரும்பத் திரும்ப வந்து மோதி அர்த்தமற்ற செயல்களை செய்யத் தூண்டும் நிலையில் அமைதி இழந்து அந்தர நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விடுவோம். நின்று நிதானித்துப் பார்த்தால் நமது மனத்தடத்தில் வந்து போகும் எண்ணங்களை மீளாய்வு செய்யும்போது எமது அறிவுக்கு சில உண்மைகள் புலனாகும். இது என்ன நினைப்பு. ஏன் இப்படி அடிக்கடி எண்ணுகிறேன் என்று உணர்ந்து கொண்டால் அந்த எண்ணத்தடங்களை மாற்றி நல்ல எண்ணங்களுக்குள் நாம் பிரவேசிக்கலாம். எல்லாம் எம் கைகளில் தான். நாம் தான் றிமோட்டை வைச்சிருக்கிறம். கட்டுப்படுத்தவும் திசைதிருப்பவும் மடைமாற்றவும் எம்மால் மட்டும் தான் முடியும். எமது எண்ணப்பறவை எம்மை இதமாக வருடி வட்டமிட்டு உலக உலா அழைத்துச் செல்லும் சுகமான சுமைகளையும் வருடிச் செல்லும் வாழ்க்கை வளமாக வாழ்வதற்கே- நினைவு நல்லது வேண்டும் என்று சும்மாவா பாடியிருக்கிறார் பாரதி'' ம்... அற்புதமான மனசில் ஆனந்தமான உலகைப் படைக்க முடியும். கேட்டீங்களா! அப்ப நான் வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பலே பாண்டியா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



நான் என்ன சொல்லிவிட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்
நான் என்ன சொல்லிவிட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்
உன் சம்மதம் கேட்டேன்
ஏன் தலை குனிந்தாயோ
உன் சம்மதம் கேட்டேன்
ஏன் தலை குனிந்தாயோ
என்ன சொல்லி விட்டேன்
செம் மாம்பழம் போலே
கன்னம் சிவந்து விட்டதடி
கொண்ட மௌனத்தினாலே
இதழ் கனிந்து விட்டதடி

செம் மாம்பழம் போலே
கன்னம் சிவந்து விட்டதடி
கொண்ட மௌனத்தினாலே
இதழ் கனிந்து விட்டதடி
சுகம் ஊறிவிட்டதடி முகம் மாறிவிட்டதடி
சுகம் ஊறிவிட்டதடி முகம் மாறிவிட்டதடி
நெஞ்சில் அன்றில்லாத நாணம் இன்று
எங்கு வந்ததடி என்ன... என்ன... என்ன...


நான் என்ன சொல்லிவிட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்
உன் சம்மதம் கேட்டேன்
ஏன் தலை குனிந்தாயோ
என்ன சொல்லி விட்டேன்
மலர் பஞ்சணை மேலே
வரும் பருவம் அத்தனையும்
உன் நெஞ்சில் கொண்டாயோ
அதை நினைவில் வைத்தாயோ

மலர் பஞ்சணை மேலே
வரும் பருவம் அத்தனையும்
உன் நெஞ்சில் கொண்டாயோ
அதை நினைவில் வைத்தாயோ
கண்டு ஏங்குகின்றாயோ
இன்று தூங்குகின்றாயோ
நாம் பழகப் போகும் அழகை எல்லாம்
படம் பிடித்தாயோ
என்ன... என்ன... என்ன...

நான் என்ன சொல்லிவிட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்
உன் சம்மதம் கேட்டேன்
ஏன் தலை குனிந்தாயோ

என்ன சொல்லி விட்டேன்
நீ ஏன் மயங்குகிறாய்...

# செவன் திரைவிமர்சனம்




நான் அவன் இல்லை பாணியில் தற்போது வந்துள்ளது செவன் படம். ஒரு ஆண், ஆறு பெண்கள் இடையே நடக்கும் சம்பவங்கள் தான் இந்த செவன் படம்.

ஐடி நிறுவனத்தில் பணியாற்றிவரும் நந்திதா உடன் பணியாற்றும் ஹீரோ ஹவிஷை காதலிக்க தொடங்குகிறார். அவர்கள் ஒன்றாக சேர்ந்து வாழ ஆரம்பிக்கின்றனர். ஆனால் திடிரென ஹவிஷ் காணாமல் போகிறார். அதனால் நந்திதா பொலிஸில் புகார் கொடுக்கிறார்.

பொலிஸ் அதிகாரி ரகுமானிடம் அவர் நடந்ததை கூறுகிறார். அப்போது தான் தெரிகிறது இதுபோல வேறு சில பெண்களும் ஹவிஷ் பற்றி புகார் கூறியுள்ளனர் என்று. தலைமறைவாக இருக்கும் ஹவிஷை பொலிஸ் தேடி கண்டுபிடிக்கிறது.

ஆனால் தன் மீது புகார் கூறியுள்ள பெண்களை யாரென்றே தெரியாது என்கிறார் ஹவிஷ். இடையில் ஒரு கொலைப்பழியும் அவர் மீது விழுகிறது. பெண்களை ஏமாற்றியது யார்? கொலை செய்தது யார்? -- கேள்விக்கு மீதிப்படம் பதில் சொல்கிறது.

படத்தின் கதை சுவாரஸ்யமாக எழுதப்பட்டிருந்தாலும் திரைக் கதையில் தெளிவு அதிகம் இல்லை. நான் அவன் இல்லை படம் போல ஆரம்பித்து பின்னர் கிரைம் த்ரில்லர் படமாக முடிகிறது. ஆரம்பம் முதல் இறுதிவரை த்ரில்லாக வைத்திருந்ததற்காக இயக்குநரை பாராட்டலாம்.

ஆனால் படத்தின் பல சீன்கள் லொஜிக் இல்லாமலும் நம்பமுடியாத அளவுக்கு தான் இருந்தன. ஒரு நபர் காணாமல் போனதாக இரு பெண்கள் அளித்த புகாரை தேசிய சனல்களில் தலைப்பு செய்தியாகவும், இரண்டு நாளாக காணாமல் போன ஒரு நபர் பற்றி ஊர் முழுக்க பொலிஸ் போஸ்டர் ஒட்டி பரபரப்பாக தேடுவது போல காட்டுவதெல்லாம் நம்பும் அளவுக்கு இல்லை. படத்தின் முதல் பாதி போர் அடித்தாலும், படத்தின் கடைசி அரை மணி நேரம் சற்று ஆறுதல்.

தெலுங்கு ஹீரோ அவிஷ் தமிழ் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்பது கேள்விக்குறிதான். படத்தில் பல நடிகைகள் இருந்தாலும் ரெஜினாவுக்கு தான் பெரிய ரோல். மிரட்டியுள்ளார்.







# தமிழீழ விடுதலைப்புலிகள் போன்று இந்தப் பயங்கரவாதிகளைக் கருதமுடியாது

## அமைச்சர் ராஜித சேனாரட்ன



. குண்டுத்தாக்குதலின் பின்னர் நாட்டின் நிலைமைகள் தற்போது சீரடைந்து வருகின்றன. எனவே அரசாங்கம் தேசிய பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. கடந்தகால தவறுகளை மறந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமருடன் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் சஜித் பிரேமதாசவும் ஒருவர் எனவும் குறிப்பிட்டார். அமைச்சர் ராஜித சேனாரட்ன வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**கேள்வி :** 2015 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பு ஏற்றது முதல் அரசியல் ரீதியாகவும் சரி ஏனைய பொருளாதார, அபிவிருத்தி விடயங்களிலும் சரி இந்த நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு சவால்களின் மத்தியிலேயே நகர்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறானதொரு நிலைமையிலேயே ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டுத்தாக்குல் சம்பவங்கள் இடம்பெற்றன. இவ்வாறு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் பின்னணியாக இருந்திருக்கலாம். இது தொடர்பில் உங்களின் நிலைப் பாடு எவ்வாறு உள்ளது ?

**பதில்:** நாட்டில் காணப்பட்ட பாரதூரமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகவும் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் மற்றும் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கத்துக்குள் இருந்தே அரசாங்கத் துக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப் படும் போது அதனை மக்கள் ஏற்றுக்கொள் வார்கள். எதிர்த்தரப்பில் இருந்து அரசாங்கத் துக்கு எதிர்ப்பை வெளியிடுவது போன்று அது அமையாது. இந்த நிலைமையே தற் போது எங்களின் அரசாங்கத்துக்கும் நேர்ந் துள்ளது. தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளித்தே 2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியுடன் இணைந்து ஐ.தே.க. ஆட்சியமைத்தது.

ஆனால் சிறிது காலத்திலேயே அரசே அரசாங்கத்தை எதிர்த்து செயற்படும் நிலை உருவாகியது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மௌனித்துவிட்டார். ஜனாதிபதியின் அமைதியான செயற்பாடுகள் அனைத்தும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் சுதந்திர கட்சிக்கும் இடையில் பிளவு ஏற்படுவதற்கு வழி கோலியதுடன் அரசாங்கம் இரண்டாக உடைந்தது. இரு தரப்புக்கும் இடையிலான தொடர் அரசியல் கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில் கடந்த வருட இறுதியில் அரசாங்கத்துக்கு எதிரான சூழ்ச்சி இடம்பெற்றது.

இந்த நெருக்கடி நிலைமையிலிருந்து நாடு இயல்பு நிலை மைக்கு திரும்பியிருந்த நிலையிலேயே எதிர்பாராத விதமாக ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. அரசியல் நெருக்கடி நிலைமையின் பின்னர் பாரிய அரசியல் மாற்றமும் ஏற்பட்டது. புதிய அமைச்சுக்களை பொறுப்பளிக்கும் போது ஜனாதிபதி சட்ட ஒழுங்கு அமைச்சை அர சாங்கத்துக்கு வழங்கவில்லை.

அந்த அமைச்சை அவ ரின் பொறுப்பின் கீழ் வைத்துக்கொண்டார். மக்களின் ஆதரவோடும் நீதிமன்றத்தின் தீர்ப்போடும் அரசாங்கத்துடன் தொடர்ந்து பயணிக்க ஜனாதிபதி ஒப்புக்கொண்டார். இருப்பினும் அரசாங்கத்துக்கு தேவையான பலத்தை அவர் எங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்ப வில்லை.

இதனைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு சபை கூட்டங்களில் பிரதமர் உள்ளிட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை பங்கு பற்ற இடமளிக்கவில்லை. எனவே பிரதமர் உள்ளிட்ட எங்களின் தரப்புக்குப் பாதுகாப்பு தொடர்பில் எந்த பொறுப்பும் இருக்கவில்லை. பாதுகாப்பு தொடர்பான பலத்தை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு தனக்கேற்ற வகையில் அவருக்கு தேவையான குழுவினருடன் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை எடுக்க ஆரம்பித்தார். ஆனால் அரசாங்கத்தரப்பில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க யாரும் தயாராக இருக்கவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் பாதுகாப்பு தொடர்பில் அச்ச நிலை உருவாகியது. இதுவே குண்டுத்தாக்குதல் சம்பவங்களுக்குப் பிரதான காரணங்களாக அமைந்தன.

**கேள்வி:** அவ்வாறானால் தற்போது நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் திருப்தியடையக் கூடியதாக உள்ளதா?

**பதில் :** உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான முன்னறிவித்தல்கள் கிடைத்திருந்த போதிலும் ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில், பாதுகாப்பு சபை தரப்பினர் அனைவரும் பங்குபற்றியிருப்பார்களானால் தீர்க்கமான கலந்துரையாடல்களை முன்னெடுத்து சிறந்த தீர்வை வழங்கியிருக்க முடியும். ஆனால் அதற்கான வாய்ப்பு எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி தரப்பின் குறைபாடுகளின் காரணமாக இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது. அதே சந்தர்ப்பத்தில் தாக்குதல்கள் இடம்பெற்று 24 மணிநேரத்தில் பாதுகாப்பு துறையினரால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாகவும் இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்று இந்த பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொண்ட குழுவினரைக் கருதிவிடக்கூடாது. சர்வதேசத்தின் தேவைகளுக்கு ஏற்பவே இவர்கள் செயற்பட்டார்கள் என்பதை மறந்துவிட முடியாது.

தற்போதைய அளவில் பாதுகாப்பு பிரச்சினைகள் எதுவும் இல்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் பலப்படுத்தப்பட்டே உள்ளன. ஆயினும் முஸ்லிம் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு சிங்கள மக்களை விட முஸ்லிம் மக்களே கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இந்த தாக்குதல் சம்பவங்களின் பின்னரும் இதுவரையில் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்கள் அரசாங்கத்துக்கு ஒப்படைக்காவிட்டாலும் தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டங்களில் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பங்குபற்றுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் நாங்களும் பங்குபற்றுவோம்.

தற்போது கூடும் பாதுகாப்பு சபை கூட்டங்கள் முழுமையானதாக இருந்தாலும் இன்னும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எங்களின் குழுவினருக்கும் இடையில் முரண்பாடு நிலைமையே காணப்படுகிறது.

ஆயினும் ஜனாதிபதி எதிர்காலத்தில் சட்ட ஒழுங்கு அமைச்சை அரசாங்கத்திடம் ஒப்படைத்து பாதுகாப்பு விடயம் தொடர்பில் சகல பிரிவினருடனும் ஒற்றுமையாக செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு எங்களுக்கு உள்ளது.

தற்போதைய நிலைமைகளில் சகலருடனும் இணைந்து பணியாற்றும் வகையில் படிப்படியாக ஜனாதிபதியின் செயற்பாடுகள் மாறிவருகின்றன. ஆகையால் எதிர் காலத்தில் பாதுகாப்பு தொடர்பில் எந்த பிரச் சினையும் ஏற்படாது.

**கேள்வி:** ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கவுள்ள ஐக்கிய தேசிய முன்னணிக்கு முஸ்லிம் அமைச்சர்களின் ராஜினாமாவினால் சவால் ஏற்பட்டால்...?

**பதில்:** அவர்கள் அமைச்சுக்களில் இருந்து பதவி விலகியிருந்தாலும் அரசாங்கத்திலிருந்து பதவி விலகவில்லை. அதேபோன்று இந்த அரசாங்கத்திலிருந்து விலகி எமக்கு எதிராக செயற்பட மாட்டார்கள். அந்த நம்பிக்கை எமக்குள்ளது. மக்களின் நன்மை கருதியே அவர்கள் அமைச்சு பதவிகளை துறந்தனர். இதன் காரணமாகவே இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறாமல் உள்ளனர்.

அவர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காக அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் கைகோர்த்துள்ளனர். இருப்பினும் அவர்கள் எதிரணியுடன் கூட்டணி அமைக்கவில்லை.

**கேள்வி:** அதேபோன்று உங்களுக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெறுகின்றனவே?

**பதில்:** இவ்வாறான எதிர்ப்பு செயற்பாடுகளே இனவாதத்தை உருவாக்குகின்றன. இதற்கு முன்னரும் எனக்கு எதி ராக இவ்வாறான எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்திலும் எனக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்றன. ஆனால் அவற்றால் என்னைத் தோற்கடிக்க முடியவில்லை. இவ்வாறான எதிர்ப்புக்கள் குறுகிய காலத்துக்கே நீடிக்கும்.

**கேள்வி:** தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடனான தொடர்புகளில் ஏதும் பிளவுகள் உள்ளனவா? ஒத்துழைப்பு வழங்கு கிறார்களா?

**பதில் :** தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங் கத்துக்குச் சிறந்த ஒத்துழைப்பையே வழங் குகின்றனர். இதற்கு முன்னர் இருந்ததை விட அதிக பங்களிப்பை வழங்குகிறார்கள்.

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராகி விட்டதா?

**பதில் :** நிச்சயமாக ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்கள் தயார். இந்த தேர்தல் பொதுஜன பெரமுனவுக்கு பாரிய சவாலாகவே அமையும். மகிந்த தரப்பு மீதான மக்களின் ஆதரவும் குறைந்துள்ளது. இன்று அவர்களுக்கு ராஜபக்ஷ குடும்பத்தை அன்றி வேறு எவரையும் வேட்பாளராகத் தெரிவு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக எதிர்த்தரப்புக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே இன்னும் மூன்று மாதங்களாகும் போது அரசியல் நிலைமைகளில் பாரிய மாற்றம் ஏற்படக்கூடும்.

**கேள்வி:** அவ்வாறாயின் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் தயாரா?

**பதில் :** எங்களின் வேட்பாளர் பட்டியலில் பலர் உள்ளனர். உரிய நேரத்தில் அவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வோம். ஆனால் எங்களால் களமிறக்கப்படும் வேட்பாளர் குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்க மாட்டார். பொதுஜன முன்னணி இன்னும் மன்னராட்சி காலத்தில் உள்ளது. குடும்பத்தைத் தவிர வேறு எவருக்கும் இடம் கிடைப்பதில்லை.

**கேள்வி:** அமைச்சர் அஜித் பி.பெரேரா, அமைச்சர் சஜித் பிரேமதாசவே ஜனாதிபதி வேட்பாளர் என கூறியுள்ளாரே ?

**பதில் :** ஆம். அவரும் ஐக்கிய தேசிய கட்சியின் பரிசீலனையிலுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவர்.

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரோ அல்லது தேர்தல்களின் பின்னரோ அரசியல் நிலைமைகளில் எவ்வாறான மாற்றம் ஏற்படும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில் :** மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனநாயக முன்னணியொன்றை உருவாக்குவோம். தேர்தலுக்கு பின்னர் ஒரு கொள்கையின் அடிப்படையிலான ஒற்றுமையான அரசாங்கமே ஏற்படுத்தப்படும்.

# விட்டுக்கொடுப்பாரா-எடப்பாடி தட்டிப்பறிப்பாரா-சசிகலா

# சுறுசுறுப்பாகும் அ.தி.மு.க.

'சசிகலா விரைவில் விடுதலையாகப் போகிறார்' என்கிற செய்திதான், அ.தி.மு.க மற்றும் அ.ம.மு.க ஆகிய கட்சிகளில் சிலருக்கு மகிழ்ச்சியையும் பலருக்கு பீதியையும் ஏற்படுத்தி வருகிறது. இருக்காதா பின்னே... ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு நடந்த அரசியல் காட்சிகள், இதுவரை ஹொலிவுட் படங்களிலுமே நாம் காணாதவை. சரி, அ.தி.மு.கவின் தற்போதைய தலைமை, அடுத்து என்ன திட்டமிட்டிருக்கிறது?

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கில், 2014 ஆம் ஆண்டு ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்தது பெங்களூரு சிறப்பு நீதிமன்றம். ஜெயலலிதா தரப்பு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில், நான்கு பேரும் விடுதலை செய்யப்பட்டனர். தொடர்ந்து, கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பை அறிவிப்பதற்குள், ஜெயலலிதா மரணம்அடைந்தார். பின்னர், அ.தி.மு.க-வின் பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்ட சசிகலா, முதலமைச்சர் ஆவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த நேரத்தில், சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது உச்ச நீதிமன்றம். அதனால் கோட்டைக்குச் செல்லும் கனவிலிருந்த சசிகலா, பெங்களூர் சிறைக்குச் சென்றார். இதற்கிடையே முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் போய்... எடப்பாடி பதவியேற்றது எல்லாம் தனிக்கதை. மறுபக்கம் தினகரன், கட்சியைக்கைப்பற்ற முயற்சிசெய்து தோல்வியடைந்தார். இதன் தொடர்ச்சியாக அ.ம.மு.க என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் தமிழகச் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் டெபாசிட் இழந்தது இக்கட்சி.

'எப்படியும் அ.தி.மு.க தன் கைக்கு வந்துவிடும்' என்று சசிகலா உறுதியாக இருந்ததால், அ.ம.மு.கவில் அவர் பெயர் சேர்க்கப்படவில்லை என்கிறார்கள். அத்துடன், 'அ.தி.மு.க மீதான உரிமை தொடர்பான வழக்கும் என் பெயரிலேயே நடக்கட்டும்' என்றும் தினகரனிடம் சசிகலா சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில்தான், தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவும் படுதோல்வியடைந்திருப்பதால், கட்சிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. ராஜன் செல்லப்பா உள்ளிட்ட சிலர் செய்துவரும் விமர்சனங்களால், 'ஆட்சி கை நழுவி விடுமோ' என்ற பயத்தில் இருக்கிறார் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி.

இதனால், 'சசிகலா ஆதரவு நிலைப்பாடு எடுத்தால் மட்டுமே ஆட்சியைத் தக்கவைக்க முடியும்' என்று எடப்பாடி பழனிச்சாமி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதுகுறித்து அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகிகள் சிலர் நம்மிடம் பேசியபோது, "எடப்பாடி பழனிச்சாமி தரப்பிலிருந்து பத்து நாள்களுக்கு முன்பே சசிகலாவுக்குத் தூது



விடப்பட்டது. உச்ச அதிகாரத்திலிருப்பவரின் மனைவியே, அடுக்கு டிபன் கேரியரில் சசிகலாவுக்குப் பிடித்த உணவுகளுடன் சிறைக்குள் சென்றார். அவர் சில விடயங்களை, சசிகலா தரப்புக்குச் சாதகமாகச் சொல்லியிருக்கிறார். தொடர்ந்து சசிகலா தரப்பில், 'சிறையிலிருந்து வெளியே வருவதற்கு, தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை ஒத்துழைத்தால், எடப்பாடி பழனிச்சாமியின் ஆட்சி தொடர உதவி செய்யப்படும்' என்பது உட்பட சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு எடப்பாடி தரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளது. அத்துடன், இந்த வழக்குக்குக் காரணமான முக்கிய வி.வி.ஐ.பி ஒருவரே, 'சசிகலாவின் விடுதலைக்கு ஆட்சேபனை இல்லை' என்று தெரிவித்திருக்கிறார். அதனால், சசிகலாவை வெளியே கொண்டுவருவதற்கான வேலைகள் வேகம் எடுத்துள்ளன" என்றார்கள்.

சசிகலாவுக்கு நெருக்கமானவர்கள் கூறும் போது, "கர்நாடகசிறைத்துறை அண்மையில் அந்த மாநில அரசுக்கு அளித்த அறிக்கையில், 'சசிகலாவின் நன்னடத்தை சிறப்பாக இருப்பதால், முன்கூட்டியே விடுதலை செய்யலாம்' என்று குறிப்பிட்டுள்ளது. சசிகலா, சிறையிலிருந்தபடி கன்னட மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருப்பதையும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது சிறைத்துறை. இந்த அறிக்கை, சசிகலாவுக்கு மிகவும் சாதகமாக அமையும். 'நன்னடத்தை அடிப்படையில் என்னை விடுதலை செய்ய வேண்டும்' என்று சசிகலா சார்பிலும் கர்நாடக அரசிடம் கோரிக்கை வைக்கப்பட உள்ளது. தவிர, கர்நாடக முதல்வர் குமாரசாமியின் குடும்பத்தினர், சசிகலாவுக்கு நெருக்கமானவர் கள். அதனால், சசிகலாவின் கோரிக்கைமீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறோம். இதுதொடர்பான பைல், கர்நாடக ஆளுநர் மூலம் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்படும். அதனால் நான்கு மாதங்களுக்குள் சசிகலா விடுதலையாவார் என்று உறுதியாக நம்புகிறோம்" என் கிறார்கள்.

"சசிகலாவின் விடுதலைக்கு சட்ட ரீதியாக சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா?" என மூத்த வழக்கறிஞர் மோகன கிருஷ்ணன் கூறும்போது, "சசிகலா அல்ல... யாராக இருந்தாலும் சிறைத்துறை நன்னடத்தை சான்றிதழ் அளித்தால், அதைக் காரணமாகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபரை ஆளுநர் விடுதலை செய்ய சட்டத்தில் இடம் உண்டு. ஆனால், ஊழல் குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றவர்களை ஆளுநர் விடுவிக்க முடியாது என்று சில ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. அதற்குக் காரணம், வட மாநிலங்களில் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியவர்கள் ஆளுநர்களின் ஆசியுடன் பாதியிலேயே விடுதலைபெற்ற சம்பவங்கள் நடைபெற்றிருந்ததுதான். இதற்குப் பிறகு உச்ச நீதிமன்றமே இவ்விடயத்தில் தலையிட்டு, சில விதிகளைக் கொண்டுவந்தது. சசிகலா விவகாரத்தைப் பொறுத்தவரை அவர் ஏற்கனவே வேறு சில வழக்குகளில் சிறையில் இருந்த காலகட்டத்தையும் கர்நாடக சிறைத்துறை கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கலாம். அப்படி



எடுத்துக்கொண்டால் மட்டுமே, ஒருவேளை அவரை முன்கூட்டியே விடுதலை செய்யும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன" என்றார்.

சசிகலாவுக்கும் தினகரனுக்கும் கொஞ்சம் இடைவெளி ஏற்பட்டிருப்பதை உணர்ந்து தான், சசிகலாவுக்குத் தூது விட்டிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி என்கிறார்கள்.

அதை நிரூபிக்கும் வகையில், சசிகலாவின் விடுதலை தொடர்பான பணிகளிலும் தினகரன் தலையிடாமல் இருக்கிறார்.

அரசியல் சதுரங்கத்தில் கணக்குகள் அனைத்தும் சரியாக இருந்து ஒருவேளை சசிகலா விடுதலையானால், எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆட்சியை விட்டுக் கொடுப்பாரா... இல்லை தட்டிப் பறிப்பாரா என்று பொறுத்திருந்துதான் பார்க்க முடியும். ஏனெனில், எடப்பாடி தரப்பு செய்த துரோகத்தை அவ்வளவு சீக்கிரம் சசிகலா மறந்திருக்க வாய்ப்பில்லை!

ஜூனியர் விகடன்

# சருமம்:வியர்வை வாடையை விரட்டலாம்!

வெயிலைக்கூடத் தாங்கிக்கொள்ளலாம். அதனால் ஏற்படும் வியர்வையையும் அது ஏற்படுத்தும் வாடையையும் சகித்துக் கொள்வதுதான் சிரமம். வியர்வை வாடையை விரட்டும் தீர்வுகள் தருகிறார் அழகுக்கலை நிபுணர் வசுந்தரா.

"எக்ரைன்" என்கிற வியர்வைச் சுரப்பிகள் நம் உடலில் எல்லா இடங்களிலும் சருமத்தின் அடியில் இருக்கும். வெளிப்புறத் தட்பவெப்ப நிலை அதிகரிக்கும்போது அதிலிருந்து உடலைக் காப்பாற்றி, குளிர்ச்சியாக்க இந்தச் சுரப்பிகள் தூண்டப்படும். அதனால் வியர்வை வெளியேறும். முகம் மற்றும் கைகளில் வரும் வியர்வை அதிக வாடையுடன் இருக்காது.



ஆனால், அப்போக்ரைன் சுரப்பிகள் அக்குள், காதுகளின் பின்புறம், அந்தரங்க உறுப்புகளில் அதிகம் காணப்படும். இவை வியர்வையை வெளிப்படுத்தும்போது, அத்துடன் எண்ணெய்ப் பசையான திரவமும் சேர்ந்து வெளியேறுவதால்தான் அந்த இடங்களில் வியர்வையின் வாடை அதிகமாக இருக்கிறது.

வெதுவெதுப்பான தண்ணீரில், தினம் இரு வேளை குளிக்க வேண்டும்.


ஒரு பக்கெட் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் பாத் சால்ட் அல்லது கைப்பிடி அளவு வேப்பிலையைக் கசக்கிப் போட்டு, சிறிது நேரம் ஊறவைத்துக் குளிக்கலாம்.

முதல் நாள் இரவே தண்ணீரில் வெட்டிவேரை சிறிது நேரம் ஊறவைத்து, மறுநாள் குளித்தால் உடலில் இயற்கையான நறுமணம் வீசும்.

சிலருக்கு அளவுக்கு அதிகமாக வியர்க்கும். அவர்கள் ஆன்டி பாக்டீரியல் சோப் உபயோகிக்கலாம்.

குளித்து முடித்ததும், ஈரத்தை நன்கு துடைத்துவிட்டு, ஆன்டி பாக்டீரியல் டஸ்ட்டிங் பவுடர் உபயோகிக்கலாம்.

# ஆரோக்கியம் தரும் அன்னாசிப்பழம்





அழகான சுவையான அன்னாசிப்பழங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான உணவாகும். அத்துடன் இப்பழம் மிகவும் குறைந்த கலோரிப் பெறுமானத்தைக் கொண்டிருப்பதுடன் அதிக நார்ச்சத்தையும் கொண்டுள்ளது. ஒழுங்கான குடற்செயற்பாட்டுக்கும் கழிவுப்பொருட்கள், நச்சுப்பொருட்கள் என்பனவற்றின் வெளியேற்றத்துக்கும் இது உதவுகின்றது.

அதேவேளை கொலஸ்ரோல் அகத்துறிஞ்சலையும் குறைக்கின்றது. அதீத நிறை உடையவர்களும் நீரிழிவு நோயாளர்களும் அன்னாசிப்பழத்தை வேண்டியளவு உட்கொள்ள முடியும்.

100 கிராம் அன்னாசிப்பழத்தில் விற்றமின் C 47.8mg ஆக உள்ளது. விற்றமின் C ஆனது எலும்புகள்,இழையங்கள் மற்றும் பற்கள் உட்பட உடலின் சகல பாகங்களின் வளர்ச்சிக்கும் மற்றும் மென்சவ்வுகளைப் புதுப்பித்தலுக்கும் தேவைப்படுகின்றது. நோய் எதிர்ப்பு சக்தி செயல் முறையின் செயற்பாட்டிற்கும் விற்றமின் C உதவுகின்றது.

உணவுகளில் காணப்படுகின்ற சில விற்றமின்களும்கனியுப்புகளும் (விற்றமின் A,C,E மற்றும் செலனியம்) எதிர் ஒக்சிடன்களாக (Antioxidants) உணவுச்சட்டத்தில் காணப்படுகின்றது. இது அன்னாசிப்பழத்தில் நிறைவாகவே உள்ளது.

போலேட்டு (Folates), விற்றமின் B வகையைச் சேர்ந்த அநேகமான உணவுகளில் இயற்கையாக காணப்படுகின்ற ஒன்றாகும். இது 100g அன்னாசியில் 18mg (micro gram) ஆக உள்ளது. இது உடலில் உள்ள புதியகலங்களை விஷேடமாக குருதிக்கலன்களை உருவாக்குவதற்கு உதவுகின்றது. 100g அன்னாசியில் காணப்படும் சத்துக்களின் அளவுகள்.

கலோரி - 50kcal
கொழுப்பு - 0.12g
மாப்பொருள் - 13.52g
புரதம் - 054g
கொலஸ்ரோல் - 0 mg
நார்ப்பொருள் - 1.40g
மக்னீசியம் - 12 mg
கல்சியம் - 13g
இரும்பு - 0.29 mg
விற்றமின்யு - 58Iu
விற்றமின் C - 47.8mg
விற்றமின் E - 0.02mg
விற்றமின் K - 0.07mg
சோடியம் - 1mg
பொட்டாசியம் -109mg
போலேட்டு - (Folates)-18mg (micro gram)

ஆக காணப்படுகின்றது. இது இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது. நார்ச்சத்து 1.40g ஆக காணப்படுகின்றது.

நார்ச்சத்தானது குடலின் அசைவினை ஒழுங்காக்குவதற்கு உதவுகின்றது. அவ்வாறே மலச்சிக்கல்,எரிச்சல் ஏற்படக்கூடிய அரிப்புடனான குடல் அறிகுறிகள் போன்றவற்றையும் தடுக்கின்றது.

நார்ச்சத்து உணவுகளின் நச்சுத்தன்மையை மறைமுகமாக அகற்றுவதுடன் கொலஸ்ரோலின் அகத்துறிஞ்சலையும் குறைக்கின்றது. ஐஸ் கிறீம்,பழச்சலாட்டு, புடிங்,ஜூஸ் போன்ற உணவுத் தயாரிப்புக்களின் சுவையை கூட்டக்கூடிய ஒரு பழம் அன்னாசி. சுவை மட்டும் அல்லாமல் சத்துக்களும் நிறைவாக உள்ள அன்னாசியை ஒண்டு பயன்பெறுவோம்.

பு.ஷாலினி
B.Sc.Foods Nutrition and Diet Therapy.



இலங்கையிலிருந்து, கடந்த 2019 மே 29 ஆம் திகதி 20 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுடன் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆட்கடத்தல் படகு ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- கடந்த ஐந்து ஆண்டுகளில், அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த அனைத்து ஆட்கடத்தல் படகுகளின் நடவடிக்கைகளும் தோல்வியிலிலேயே முடிவடைந்துள்ளன.
- சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் அனைவரும் நிச்சயம் கைது செய்யப்படுவார்கள்.
- சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கு உங்களுக்கு எந்தவித வாய்ப்பும் கிடையாது.

Australian Government

கைபர் வாய்ப்புக்கள்